Registered as a News Paper
பக்கம் - 26

# ஈழநாதம்

வெள்ளிநாதம் Weekly

விலை: 5.00
நாதம் -15 வெள்ளி- 01-யூலை-2004



## கடலே உயிர்களின் கருவறை

## உறங்கும் அபாயம்

## மீட்பின் உயிரோட்டம்

# திருமுக அறிமுகம்



## மகாகவி உருத்திரமூர்த்தி

உருத்திரமூர்த்தி என்ற அந்த உயர் அரச அதிகாரியை யாருக்கும் தெரியாமல் இருக்கலாம். ஆனாலும் அவர் மிகவும் பிரபலமானவர் ஆம் அவர் ஒரு மஹாகவிஞர்...! 'மஹாகவி' எனத் தனக்குத்தானே பெயரிட்டுக் கொள்ளுமளவுக்கு பெருந்துணிச்சல் கொண்டவர்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதையை ஒரு புதிய சிகரத்திற்கு எடுத்துச் சென்ற மஹாகவி பழைமைக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்பாளராக விளங்கிய பெருமைக்குரியவர்.

மரபும் புதுமையும் அவரது கவிதைகளில் கைகோர்த்து அற்புதம் காட்டி வியக்கவைக்கும்.

பேச்சோசைக்கு..... மிகவும் அண்மித்தான ஒரு நடைக்கு தமிழ்க் கவிதையை எளிமையாகவும் அழகாகவும் ஜீவனுடன் நகர்த்தியதில் மஹா கவியின் பங்கு முக்கியமானது, தனித்துவமானது.

கவிதை என்பது பாமரனுக்கும் புரியக் கூடியவகையில் இருக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட இவரின் கவிதை சொல்லும் பாணி தமிழ்க்கவிஞர்களின் தற்கால போக்கிற்கு முன்னோடி என்பதில் சந்தேகமே இல்லை.

'மஹாகவியின் அடியொற்றி வந்த புதிய தலைமுறையினரே இன்றைய சமகாலத் தழிழ் கவிதைக்கு புதிய பரிமாணத்தையும், புதிய வீச்சையும் வழங்கி வருகின்றனர் என்பதில் முரண்படுவார் எவருமி

அளவெட்டி தந்த மற்றொரு கலைமுத்தான மஹாகவி அடக்கமாவர் ஆனால் ஆழமானவர்

-வெளியே பனிமலை உள்ளே எரிமலை

-மென்மையான மனமும் மேன்மையான குணமும் அவரது கவிதைகளின் சத்தியத்தன்மைக்கு உத்தரவாதமளிப்பவை.

-பேச்சு தமிழுக்கு கவித்துவ வாழ்வை வழங்கிய ஆற்புதமான ஆளுமை அவருக்கே உரியது.

அவர் எழுதும் வரிகள் தீர்க்கமானவை மட்டுமல்ல தீர்க்க தரிசனத்தன்மையும் கொண்டவை....

'கோடை என்ற பா' நாடகத்தில் அவர்-

"என்றோ ஒரு நாள் இருந்துபார் மாணிக்கம்
நின்றந்தக் கோவில் நிமிர்ந்து, நெடுந்தூரம்
பார்த்துப் பயன்கள் விளைக்கின்ற கோபுரமும்
வேர்த்துக் கலைஞர் விளைத்த மணிமண்டபமும்
வீதிகளும் நூறு விளக்கும் பரதத்தின்
சேதிதனைக் கூறும் சிலம்புச் சிறுபாதம்
ஆடும் அரங்கும் அறிந்து சுவைஞர்கள்
நாடிப்புகுந்து நயந்திட நீ சோமனுடன்
ஊதும் குழலில் உயிர்பெற்று உடல் புளகித்து
ஆதி அறையில் அமரும் கடவுளுமாய்
என்றோ ஒரு நாள் எழும்பும் இருந்துபார்.

என்றெழுதிய வரிகள் இதற்கு ஒரு சான்று.

அவர் எழுதிய 'புள்ளிஅளவில் ஒரு பூச்சி" என்ற ஒரு கவிதை அவரின் கவிதை உள்ளத்தின் மென்மையை புரிந்து கொள்ள....

கோடை புதியதொருவீடு போன்ற 'பா' நாடகங்கள் மேடையில் வரலாறு படைத்தவை. தமிழில் தனித்துவமான அரங்கிற்கு வழிவகுத்தவை.

வில்லுப்பாட்டு மரபுக்கு புதிய திருப்பத்தை ஏற்படுத்திய கண்மணியாள் காதை பாமரமக்களின் கதையை வில்லில் இசைக்க வைத்து மெய்சிலிர்க்க வைத்த ஒன்றாகும்.

மஹாகவியின் வரிகளுக்கு வில்லிசையில் உயிரளித்த நடிகவேள் லடீஸ் வீரமணியின் கம்பீரமான இசைவளம் மிக்க குரல் கண்மணி யாள் கதைக்கு ஜீவனளித்து இலங்கையெங்கும் ஒலி பரவவிட்டது ஒரு வரலாற்று நிகழ்வு.

ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கந்தப்ப சபதம், கலட்டி போன்ற சமகால மனிதரின் கதையை காவியமாக்கிய மஹாகவியின் தமிழ் தமிழுக்கு புத்துணர்வளித்த தமிழேயாகும்.

அவர் குறும்பா எழுதிய குறும்பாக்கள் தமிழிற்கு ஒரு புதிய வரவு தமிழில் ஒரு புதியமுயற்சி மஹாகவியின் நகைச்சுவை உணர்வுக்கு ஒரு சான்று.

மறுமலர்ச்சிக்காலத்தவரான மஹாகவி தமிழில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய கவிதை மரபொன்றில் மூலவேர்...

1927 இல் பிறந்து 1971 இல் மறைந்த மஹாகவி தமிழ் கவிதை உலகில் பதித்து சென்றுள்ள தடம் புதிய தலைமுறைக் கவிஞர்களுக்கு ஒரு வழிகாட்டி....

ஈழத்தமிழுக்கு உன்னதமளித்த மஹாகவியின் இலக்கிய பீடம் மற்றொருவரால் நிரப்பப்படமுடியாத வெற்றிடமாகவே இன்னமும் உள்ளது.

மஹாகவிகள் அடிக்கடி தோன்றுவதில்லையே!

அட்சயன்

# காரசாரம்

## மரவுகள் மங்கலாமா...

செத்தவீடு செய்தநீயாம் என்ன முடிஞ்சுது என்று ஒருவரைக் கேட்டுப்பாருங்கள் செத்தவீடு எட்டு அந்திரட்டி எல்லாம் முடிய அரைலட்சம், ஒரு இலட்சம் என்பார்கள். முன்னெல்லாம் இப்படிச்செலவு கிடையாது. ரூபாய் மதிப்பு இறங்கிவிட்டது என்று கூறாதீர்கள். செத்தவீட்டுக்கு வருபவர்கள் என்ன சொல்கிறார்கள் எங்க எங்கட பக்கம் எலவுண்ஸ் பண்ணேல்ல நாங்கள் கேள்விப்பட்டெல்லே வாறம் தமிழர்களின் மரணச்சடங்குகளில் பறை முழக்குவது மரபு. பறை என்பது இழிந்த வாத்தியம் அதை முழக்குபவர் தாழ்த்தப்பட்டவர் என்ற மூடக் கருத்து பறையடிப்பவர்களின் வயிற்றிலடித்துவிட்டது மட்டுமல்ல தமிழர் பாரம்பரியத்தையே ஒழித்து வருகிறது. சாவு நேர்ந்தால் சாப்பறை ஒலிக்கும் இதைக்கேட்டே அயலவர் கூடுவர். என்னடா முடிஞ்சுதே முடிஞ்சா மேளங்கேக்கும் என்ற மரபுமொழி மங்கிவிட்டது. சாவுச்செய்தியை கேட்டுவரும் பெண்ணொருத்தி ஒப்பாரியில்.

என்னைத் தேடி வருவாரில்லை
சேதி சொல்ல நாதியில்லை
நான் இது ஆர் வீட்டு மேளமெண்டு
ஆராஞ்சு வாறனெல்லோ

என்று பாடினாள் இருக்கட்டும்

சாவு வீட்டில் அடுப்பு மூட்டக்கூடாது குறைந்த பட்சம் எட்டு நாட்களுக்கு அயலவர்களே அந்த வீட்டுக்கு உணவளிப்பார்கள் காடாத்து மூன்றாம் நாள் உறவினர்கள் மட்டும் வருவார்கள். அரிசி மரக்கறி சீனி தேயிலை வெற்றிலை பாக்கு சுருட்டு போன்ற பொருட்களுடன் வருவார்கள் கூடிச்சமைத்து சாப்பிடுவார்கள். இழப்பு நேர்ந்த வீட்டின் தனிமையை இதுபோக்கும் இதே போன்ற எட்டுச்சடங்கும் உற வினர்களே பொருட்களுடன் வந்து கூடிச் சமைத்து கலந்து உண்பதால் வீட்டாரின் சோகம் குறைகிறது. அந்தியேட்டி முப்பதாம் நாள் ஊர் கூடிச் செய்யும் நிகழ்ச்சி இதுவும் அயலவர்கள் கையில் அரிசி தேங்காய் மரக்கறி போன்ற பொருட்களுடன் வந்து விமரிசையாகச் செய்யும் விழாவாகும். பந்தல். பலகாரம் மேள தாளம் எல்லாம் கூட சில இடங்களில் உண்டு, அது சரி-

இந்த நாட்களில் பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு போன்ற வைபவங்களுக்கு யாரும் அன்பளிப்பில்லாமல் போகிறோமோ.

சாவு நடந்த வீட்டுக்கு மட்டும் விசுக்கிக் கொண்டுபோய் வெட்டிப்போட்டு வரலாம் என்ற எண்ணம் எப்படி வந்தது, எப்பவந்தது?

அது 1970களின் அரைக் கொத்தரிசித் திட்டத்தில் வந்தது பசி இம்மாதிரி விழாக்களில் பங்குபற்ற வைத்தது. செல்வம் படைத்தோர் இறந்தவர் பெயரால் தானம் செய்கிறோம் பேர்வழி என இறங்கியதால் எல்லோர் நிலையும் இதுவாச்சு. இழவு நடந்த வீட்டுக்கு உணவு அனுப்பும் பண்பாட்டை நல்விருந்தோம்பி 'வரவிருந்து பார்த்திருந்த தமிழன், மறந்துபோனான். இழவு நடந்த வீட்டில் விழுந்த மாட்டில் குறிசுடுவது போல மேலும் நட்டத்தை பொருளாதார ரீதியாகவும் ஏற்படுத்துவது என்ன நியாயம். எங்களுக்கென்றொரு பண்பாட்டு விழுமியங்கள் உண்டு. அதை ஏன் நாங்கள் உயிர்ப்பிக்கக்கூடாது பணம் பணம்- பணமில்லாமல் பாசஉறவுகளை வளர்க்க நாம் முயலவேண்டும். அயலவர் கூடிப்பந்தல்போடும் நிலை மாறி தகரப்பந்தல் கூடிச்சமைத்து உண்டதுபோய ஹொட்டலில் ஓடர். புருசன் செத்துக்கிடக்க புரண்டழுது மனிசி ஓய்ந்து போய்க்கிடக்க வீடியோ எடுக்கிறவர் வந்து விட்டார். மனைவி எழுந்து போய் முகங்கழுவி சேலை மாற்றி முடிதிருத்தி வந்து பெட்டியருகே நின்று படமெடுப்பவரைப் பார்த்து என்ன தம்பி ரெடியா அழட்டே என்று கேட்டழுதாராம். எங்கே போகிறது உறவுகள்.

மாயா

## பறை

தொழில் எதுவும் தேவையில்லாமல் உருவாகவில்லை. மனிதன் ஒரு போதும் பல தொழில்களை நிபுணத்துவம் காட்டிச்செய்யமுடியாது. ஒவ்வொருவரும் தத்தம் திறமைக்கு ஏற்றதொழிலைச் செய்வதற்கு உரிமையுண்டு. செய்வதை யாரும் மறுக்கமுடியாது.

"செய்யும் தொழிலே தெய்வம் - அந்த திறமை தான் நமக்குச் செல்வம்.

தொழிலில் இழிதொழில் உயர்தொழில் என்று எதுவுமில்லை.

அண்மையில் காலச்சுவடு இதழ் 1994.ஏப்.மார்ச்சில் 'ரவிக்குமார்' என்பவருடைய "பறையொலியால் பரவும் இழிவு" என்ற கட்டுரையைப் படித்தபோது மிக ஆச்சரியமாகவிருந்தது. அது ஒரு இந்தியப்பத்திரிகை, எனவே அதைப்பற்றி நாம் அலட்டிக்கொள்ளாமல் இருக்கமுடியாது. ஏனெனில் இந்தியக்கலைகளின் தாக்கம் இங்கு வேகமாகப்பரவிவிடும் சூழல் உண்டு எனவே. இந்தக்கட்டுரைக்கு மறுப்புத்தெரிவிக்கவே வேண்டும்.

அண்மையில் வெளிவந்த 'தென்றல்' திரைப் படத்தில் இந்தப்பறை பற்றித்தெளிவான விளக்கம் வந்திருந்தது.

தமிழர்களின் வாழ்வோடு ஒன்றிய கலாச்சாரச் சின்னம் பறை அதை நாங்கள் இழந்துபோவது எங்களுடைய இன தேசியத்தையே இழப்பதுபோலாகும். சிங்களக்கலைஞர்கள் இப்போதுபறையை தமது வாத்தியம் என்கிறார்கள். மேல்நாட்டு நாகரீகங்களில் மூழ்கி எமக்கென்ற பாரம்பரியங்களை நாம் இழந்து கொண்டு போகிறோம். பறை என்பது 'பேசு' என்பதன் மறுகருத்து. தமிழில் பேசு - என்பதை பறைதல் என்பர். தமிழர்களுடைய ஒவ்வொருவிழாக்களும் சடங்குகளும் மட்டுமல்ல செய்திகள் கூடப் பறைமூலமே உணர்த்தப் பட்டுவந்தன. எனினும் இன்று அநேகவிழாக்களில் ஆரிய சம்பிரதாயங்கள் ஊடுருவித் தமிழர்களின் தனித்துவத்தை மறைத்துவிட்டன.

முன்னாளில் பறை, போர்ப்பறை, மணப்பறை, சாப்பறை, கொடைப்பறை, தொண்டகப்பறை, ஏறுகோட் பறை, நாட்பறை, ஐயம்,வெற்றி அனைத்துக்கும் பறையே முழக்கப்பட்டது.

கைலாய வன்னியனால் பனங்காமம் துணுக்காயை நல்ல மாப்பாணனுக்கு பட்டயம் செய்யப்பட்டுள்ள செப்பேட்டில் மாப்பாணனுக்கு பறை முதலிய விருதுகள் பெற அனுமதியளித்துள்ளான். (பட்டயம், வன்னியர் சோ.பத்மநாதன்)

பறையின் ஒலியை வைத்தே - நடைபெறும் நிகழ்ச்சி என்ன என்பதைச்சொல்லமுடியும். இன்றும் வன்னியில் ஏராளமான கோயில்களில் பறையே வழக்கிலுள்ளது. யாழ்ப்பாணமக்களின் வரவு அநேகமான இடங்களில் நட்டுவமேளத்தைக்கொண்டுவந்தாலும் அது நட்டுவத்துக்குரியதேயன்றி. பறையக்கூடிய வல்லமையுடையதல்ல. எங்கள் பறை - பேசும். சாவீட்டில் பறையும், திருவிழாப்பறையுமே இப்போது வழக்கிலுள்ளது. அதிலும் காவடி, கரகம், மடைப்பண்டமெடுத்தல் வழுந்துநேரல், போன்றவற்றையும். சாவீட்டுக்கு, இழவுகாக்க வருபவரை அறிவிக்க, பிணத்தைநீராட்ட, கைதூக்க, வழிநடக்க, தலைமாற்ற, என்பவற்றை லயம்மாற்றிப் பேசும்பறை.

தமிழர்களில் ஒவ்வொருசெயலும் ஒவ்வொரு சொல்லால் விளங்கவைத்தல்போல பறையும் பறை. உதாரணமாக, அழுதான், விசும்பினான், விம்மினான், புலம்பினான், என்பது எல்லாமே அழுவதைத்தான் சொன்னாலும். அழுகையின் வேறுவேறு நிலையல்லவா? தமிழில் பேசுதல் என்ற சொல்லுக்கு நாற்பத்து இரண்டு சொற்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக பேச்சைக்குறிப்பன. வகைக்குச்சில. பேசு, உரை.சொல், விளம்பு, கூறு,பறை.

குரை.குழறு,அரற்று, அலம்பு, பகர், கதை, சாற்று எனவரும்.

இதே போன்றும் பறை பலவிதமான கருத்துகளைக்கொண்டது. இந்தப் பறையடிப்பது. எப்படி இழி தொழிலாகும். இது தமிழனின் போர்ப்பறை, வெற்றிப்பறை என்றும், ஒருபுறம் சாற்றின் 'முரசு' என்றும் வழக்கிலிருந்தது. கௌரவ நிகழ்வுகளிலும் ஆங்கிலப்பறை முழக்கம் கேட்பது எங்களுக்கென்றொரு தனித்துவம் இல்லை என்பது போலத்தான் சிங்களவர்களோ, சீனத்தவர்களோ, பர்மியர்களோ தென்னாபிரிக்கர்களோ. அல்லது தமது தேசியத்துக்காகப் போராடிய ஏனைய இனத்தவர்களோ இப்படியில்லை. கொம்பும், சங்கும், முழவும் பாட்டில்மட்டும் வந்தால் போதுமா?




# உலக வல்லரசுகளின் மறைமுக உளவுப்பணிகளும் தமிழர் தாயகப்பாதுகாப்பும்

*பாரிய உளவுப்பணிகளுக்காக தமிழ்மூளை உழைப்பாளர்கள், புத்திஜீவிகளை ஈர்ந்தெடுக்கும் முயற்சியில் வெளி புலனாய்வுச் சக்திகள் முனைப்போடு தமிழர் தாயகத்தில் இறங்கியுள்ளமை புலனாகிறது.*

*இவை எல்லாவற்றிற்கும் அப்பால் வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகள் சமூகம் தமிழ் புத்திஜீவிகள் சமூகத்தோடு நெருக்கமான தொடர்பை வைத்து பராமரித்து வருகின்றார்கள். இத்தூதரக அதிகாரிகள் சமூகம் உளவு நடவடிக்கைகளில் ஊறிய வல்லுநர்களாக இருக்கின்றார்கள் என்பதை உலகப் புலனாய்வுச்சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. இது உலக புலனாய்வு பாரம்பரியமாகவும் இருந்து வருகின்றது.*

*இத்தகைய ராஜாங்க அதிகாரிகள் செல்வந்த நாடுகளின் பிரதி நிதிகளாக இருப்பதனால் புத்திஜீவிகள் சமுதாயத்தில் உயர் கௌரவம் இருப்பது இயல்பானது. இத்தகைய சாதகமான களத்தை தம் புலனாய்வுத் தேவைக்காகப் பயன்படுத்துவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது. தமிழ் புத்திஜீவிகளை மனோவியல் ரீதியாக தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கான அனைத்துப்பலமும் தூதரக அதிகாரிகள் சமூகத்திடம் உள்ளது.*

*இப்பலம் பொருந்திய இராஜதந்திர சமூகம் வளம் குன்றிய தமிழ் மூளை உழைப்பாளர்களை உள்வாங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளதால் தமக்குத் தேவையான பயன்மிக்க புலனாய்வு விளைவு களை பெறுகின்றார்கள்.*

பெரும் வல்லரசுகள் தமது உச்சநிலை ஆதிக்கத்தை பிறநாடுகளில் நிலைநிறுத்தத் தம் மறைமுக உளவுப் பணிகளை மேற்கொள்கின்றன. அவைகள் சூழ்ச்சிகள் தந்திரங்கள் நிறைந்தவை.

அதாவது தமக்கு எதிரான போக்குள்ள அரசியற்தலைமைகளை, கட்சிகளை சீர்குலைத்து பலவீனப்படுத்திய பிற்பாடு அங்கு தமக்கு சார்பான அரசியற் தலைமைகளை, கட்சிகளை உருவாக்கி தனது ஆதிக்க நிலையை தக்கவைக்கின்றன.

இம்மறைமுக் உளவுப் பணிகளை இரு முக்கிய வழிமுறைகளுக்குள்ளால் கையாள்கின்றன.

(i) உத்தியோக பு,ர்வமான இராஜதந்திர அதிகாரிகளின் சமூகம்.

(ii) உத்தியோக பு,ர்வமற்ற ஒற்றர்கள் சமூகம்.

(Noc Spies- Non Official Cover Spies)

இத்தகைய மனிதவளப் புலனாய்விற்கான ஆட்சேர்ப்பு மையங்களாக பல்கலைக்கழகங்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. அடுத்ததாக தொழில்சார் நிபுணர்களின் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறாக ஆட்சேர்க்கும் அந்தந்த நாடுகளின் பல்கலைக்கழகங்கள் ஒருசிலவற்றை வரலாற்றுப் பார்வையில் நோக்குவோம்.

அமெரிக்காவில் கார்வாட்டை CIA யும், ரஷ்யாவில் மொஸ்கோவை KGB யும். இந்தியாவில் புதுடெல்கி, சென்னை, ஜெயப்பு,ர் போன்றவற்றை RAW வும் ஆட்சேர்ப்பு மையங்களாக பயன் படுத்துகின்றன.

இந்நாடுகளது உளவுப் பணிகள் எந்தளவுக்கு பரந்ததாக மேற்கொள்ளப்படுகின்றன என்பதனையும் எவ்வாறான தந்திரங்களை கையாள்கின்றன என்பதனையும் ஓரளவு தெரிந்து கொள்வது தமிழர் தாயகத்திற்கு நன்மை பயக்கும்.

எனவே மெக்சிக்கோவை அழிப்பதற்கான KGB யின் சதித் திட்டமொன்றை இங்கு கண்ணோக்கிப் பார்ப்போம்.

ஐக்கிய அமெரிக்காவிற்கு மிக அண்மையில் மெக்சிக்கோ இருந்தமையாலும். அந்நாடு தேசிய ஆட்சி நிர்வாக முறையில் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை எட்டியதானாலும் செல்வந்த நாடாக விளங்கியது.

ஆதலால் இந்நாட்டை ஓர் கொமினிஸ்ட் நாடாக மாற்றும் குறிக்கோளுடன் ரஷ்யா KGB யை களத்தில் இறக்கியது.

1960 களில் மெக்சிக்கோவிலுள்ள ரஷ்யத் தூதரகத்திற்கு இராஜதந்திர அதிகாரிகளாக KGB யை அனுப்பி வைத்தது. அத்தூதரகம் பின்னாட்களில் சதிவேலைக்கான பாரிய தளமாக மாறியது.

இம்மறைமுக உளவுப் பணிகளுக்காக கொம்னிஸ்ட்கட்சிகள், மெக்சிக்கோ, ரஷ்ய பண்பாட்டு பரிமாற்ற கழகங்களை KGB அமைத்து இவற்றுள் தமக்கான ஆட்களைச் சேர்த்துக் கொண்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக பல்கலைக்கழகங்களுக்குள் KGB ஊடுருவி எதிர்கால சதிவேலைகளுக்கான மாணவர்களைச் சேர்த்தது. அம்மாணவர்களுக்கு மொஸ்கோ பல்கலைக்கழகத்தில் பயில்வதற்கான புலமைப்பரிசில்களும் வழங்கியது.

அடுத்து மொஸ்கோ, வடகொரியா தளங்களில் அனைத்துப் பயிற்சிகளும் வழங்கி அவர்களது ஆற்றல்களை விருத்தி செய்த பின் மீளவும் மெக்சிக்கோவிற்கு அனுப்பி வைத்தது.

காலப்போக்கில் மெக்சிக்கன் "கோமெல்ஸ்" தலைமையில் வேலை நிறுத்தங்கள், மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள், பகிஷ்கரிப்புக்கள் என சீர் குலைப்பு வேலைகளை KGB முன்னெடுத்தது. இவ்வாறான சூழ்நிலையால் கால வேகத்தில் ஓர் பதற்றமான நாடாக மெக்சிக்கோ மாறத்தொடங்கியது.

இப்பதற்றமான சூழலில் தொடர்ந்து இடம்பெற்ற மோசமான வன்செயல்களினால் ஆயுத மோதல்களும் வெடித்து மெக்சிக்கோ பாதிப்புற்றது.

இறுதியாக பத்துநிமிடங்கள் மட்டுமே ஒரு பயங்கர யுத்தம் நடைபெற்று KGB யின் பாரியகிளர்ச்சி முடிவுக்கு வந்தது.

அதாவது KGB முக்கிய முகவர்கள் எண்பது பேர் உட்பட கலகம் விளைவித்த தலைவர்கள் அனைவரும் மெக்சிக்கன் பாதுகாப்பு சேவையினரால் கைது செய்யப்பட்டார்கள். அத்துடன் ஒளிவுமறைவான பயிற்சி முகாம்கள், பெருந்தொகையாக ஆயுதங்கள், வெடிமருந்துகள் என அனைத்தும் கைப்பற்றப்பட்டன.

இப்பெரும் வெற்றிகரமான நடவடிக்கையை மெக்சிக்கன் முறியடிப்பு புலனாய்வு அமைப்பு மேற்கொண்டது. இதற்குப்பின்னால் மெக்சிக்கன் மூளை உழைப்பாளர் சமூகத்தின் புலனாய்வு பங்களிப்பும் உழைப்பும் இருந்துள்ளது.

இப் படிப்பினை மீதான கவனக் குவிப்பு தமிழ் சமுதாயத்திற்கு இருக்கும் போதே வெளிச் சக்திகளின் உளவுப் பணிகளால் வரும் அச்சுறுத்தல்களை எதிர் கொள்ளமுடியும்.

வல்லரசு நாடுகள் தம்வர்த்தக நலன்களையும் இராணுவநலன்களையும் பேணுவதிலே முதன்மைக்கவனம் செலுத்துகின்றன. ஆதலால் தமிழரின் தேசிய விடுதலைப்போரை நசுக்கமுயலும் சிங்கள தேசத்தையே அந்நாடுகள் பலப்படுத்துகின்றன.

இத்தகைய பெரும் அச்சுறுத்தலான சூழ்நிலையிலும் கூட புலிகளும்-மக்களும் தமிழரின் இராணுவ- அரசியல்-தளங்கள் இரண்டையும் பலம் பொருந்திய நிலைக்கு கொண்டு வந்து தமிழரின் தேசிய விடுதலைப்போரை பாதுகாத்துள்ளார்கள்.

இப்பலமான தமிழ் தேசிய அமைப்பின் அடித்தளத்தை தகர்த்தெறியும் நோக்குடன் வல்லரசுகளின் மறைமுக உளவுப்பணிகள் தமிழர் தாயகத்தில் வேரூண்றியுள்ளன.

இவ்வளவு பணிகளுக்கும் த்மிழ்மூளை உழைப்பாளிகள் வளத்தையே பயன்படுத்துவதில் அதீத கவனம் எடுக்கின்றன. எனவேதான் தமக்கான ஆட்சேர்ப்புமையமாக யாழ்.பல்கலைக் கழகம் மற்றும் ஏனைய தமிழ் மாணவர்கள் அதிகம் கற்கும் பல்கலைக்கழகங்களையும் பயன்படுத்துகின்றன.

இவற்றை விடவும் ஆய்வு நிறுவனங்கள்.அரசசார்பற்ற நிறுவனங்கள் (Ngoo) பாரிய வர்த்தக நிறுவனங்கள், கண்ணிவெடி அகற்றும் அமைப்புக்கள் போன்ற தொழில்சார் நிபுனத்துவக் களங்களையும் தமக்கான ஆட்சேர்ப்புக்களங்களாக உபயோகிக்கின்றன.

இத்தொழில்சார் நிபுனர், ரஷ்யாவின் KGB, NOC, SPY யாக பயன்படுத்திய உண்மை உதாரணத்தை இங்கு பார்ப்போம். சோவியத் வர்த்தக சம்மேளத்தின் சிரேஸ்ட உபதலைவரான பிற்றோவ் KGB முக்கிய அதிகாரியாக இருந்து அந்த மறைப்பை பயன்படுத்தி மேற்கு நாடுகளில் உளவுப்பணிகளில் ஈடுபட்டார்.

இதே மாதிரியான இன்னொரு உண்மைச்சம்பவத்தை இங்கு நோக்குவோம்.

நேசநாடுகள் ஐக்கிய அமெரிக்கா தலைமையில் வடஆபிரிக்க ஆக்கிரமிப்பு படையெடுப்பிற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ள OSS உளவு அமைப்பை களத்தில் இறக்கியது.

வடஆபிரிக்காவுடன் ஐக்கிய அமெரிக்கா பொருளாதார உடன்படிக்கை ஒன்றைச் செய்து கணிசமான அளவு நிலக்கரி, பருத்தி, பெற்றோல் மற்றும் சீனி என்பவற்றை கப்பல் மூலம் வட ஆபிரிக்காவிற்கு அனுப்பிவைத்தது.

இப்பொருட்கள் ஜேர்மனிக்கு கப்பலேற்றப்படவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வுதற்கு என அதிகாரிகள் குழுவொன்றை ஐக்கிய அமெரிக்கா அங்கு அனுப்பியது. உளவுத்தகவல்களைச் சேகரிப்பதே அவர்களது உண்மையான பணியாக இருந்தது. சதிகாரர்கள் என பின்னர் அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

இதே மாதிரியான மறைமுக உளவுப்பணிகள் தமிழர் தாயகப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன என ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

இத்தகையதொரு கருத்துடைய குரு என்கிற கட்டுரையாளர் இணையத்தளத்தில் வெளியிட்டிருந்த விடயங்களை இங்கு அலசுவோம்.

அதாவது இந்தியாவைச் சேர்ந்த அருட்செல்வம் யுனிசெப்- யாழ் பல்கலைக்கழகம் இணைந்த "ஊடக வளநிலையம" ஒன்றை நடாத்தி வருகின்றார்.

இந்நிலையம் தமிழ் மூளை உழைப்பாளிகளை உள்வாங்கும் மையமாக இருப்பதனால் NOC SPIESக்கான ஆட்களை இணைத்துக்கொள்வதற்கான வாய்ப்புகளே அதிகம் இருப்பதாக தமிழ் வல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

இது இப்படி இருக்க அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள் "தகவல் மையம" ஒன்றை யாழ்ப்பாண பொது நூலக கட்டடபகுதியொன்றில் ஆரம்பித்துள்ளார்கள். இவ்வாறான தகவல் மையத்திற்குப் பின்னால் உளவு அமைப்புக்கள் இருப்பது புலனாய்வில் உலக வழமையானது.

இதனை ஒத்த இன்னொரு விடயத்தினை இங்கு கவனிப்போம்.

26.05.2002 ஆம் திகதி வீரகேசரி பத்திரிகையில் 4ஆம் பக்கத்தில் ஆட்சேர்ப்பிற்கான விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது யாதெனில் "தகவல் உதவிக்கான சர்வதேச வேலைத்திட்டம்" என்கின்ற தலைப்பில் அதற்கு தகுதியான தமிழ் மூளைஉழைப்பாளர்கள் தேவையை குறிப்பிட்டு அதற்கான உயர்சம்பளத் திட்டமொன்றையும் அவ்விளம்பரத்தில் குறிப்பிட்டிருந்தன.

**நீலன்**

இவ்வேலைத்திட்ட முன்னெடுப்புக்கள் தமிழர் தாயகப்பகுதிகளை மையப்படுத்தியே இருப்பதனை அவதானிக்க முடிந்தது. இதனைவிட கொழும்பில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை படம் பிடிப்பவர்களை கண்காணிக்கும் பணிநிலை தேவைபற்றியும் பதிவு செய்திருந்தது.

இவைகள் யாவற்றையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், பாரிய உளவுப் பணிகளுக்காக தமிழ் மூளை உழைப்பாளர்கள், புத்திஜீவிகளை ஈர்ந்தெடுக்கும் முயற்சியில் வெளி புலனாய்வுச்சக்திகள் முனைப்போடு தமிழர் தாயகத்தில் இறங்கியுள்ளமை புலனாகிறது.

இவை எல்லாவற்றிற்கும் அப்பால் வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகள் சமூகம் தமிழ் புத்திஜீவிகள் சமூகத்தோடு நெருக்கமான தொடர்பை வைத்து பராமரித்து வருகின்றார்கள். இத்தூதரக அதிகாரிகள் சமூகம் உளவு நடவடிக்கைகளில் ஊறிய வல்லுநர்களாக இருக்கின்றார்கள் என்பதை உலகப்புலனாய்வுச் சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. இது உலகபுலனாய்வு பாரம்பரியமாகவும் இருந்து வருகின்றது.

இத்தகைய ராஜாங்க அதிகாரிகள் செல்வந்த நாடுகளின் பிரதி நிதிகளாக இருப்பதனால் புத்திஜீவிகள் சமுதாயத்தில் உயர் கௌரவம் இருப்பது இயல்பானது. இத்தகைய சாதகமான களத்தை தம் புலனாய்வுத் தேவைக்காக பயன்படுத்துவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது. தமிழ் புத்திஜீவிகளை மனோவியல் ரீதியாக தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கான அனைத்துப்பலமும் தூதரக அதிகாரிகள் சமூகத்திடம் உள்ளது.

இப்பலம் பொருந்திய இராஜதந்திர சமூகம் வளம்குன்றிய தமிழ் மூளை உழைப்பாளர்களை உள்வாங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளதால் தமக்குத் தேவையான பயன்மிக்க புலனாய்வு விளைவுகளை பெறுகின்றார்கள்.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் கூர்ந்து ஆராயும்போது உத்தியோகபூர்வமற்ற புலனாய்வுச் சமூகம் ஊடாகவும் உத்தியோகபூர்வமான புலனாய்வுச்சமூகம் ஊடாகவும் வெளிநாடுகள் தம் மறைமுக உளவுப்பணிகளை மேற்கொள்வதனைதெளிவாக தெரிந்து கொள்ளமுடிகிறது.

இப்புலனாய்வு சவால்களை எதிர்கொண்டு தமிழ்ச் சமுதாயத்தை, தமிழர் தாயகத்தை பாதுகாக்கக்கூடிய வல்லமை தமிழ் மூளை உழைப்பாளர்கள் சமூகத்திடம் உண்டு. ஒரு தேசத்தின் அறிவுச்சமூ கமானது பகைவர்களின் தாக்குதலை தடுக்கக் கூடிய அரணாக இருக்கின்றது என்றார் வள்ளுவர்.

ஆதலால் தமிழ் மூளை உழைப்பாளர்கள் தமிழ்த் தேசிய பக்தியோடு உழைக்கும் போது எந்தவொரு புலனாய்வுச் சக்தியாலும் ஒன்றும் செய்யமுடியாது என்பது உறுதி. அடுத்து சிங்களதேசம் தமக்கான புலனாய்வுத்தகவல்களை வெளிநாடுகளது மூலங்களிலிருந்து பெறும் வாய்ப்புக்களையும் இழக்கச்செய்ய முடியும்.

இவ் யதார்த்தபு,ர்வமான விடயத்தினை ஒத்த நிகழ்வொன்றை சீர் தூக்கிப்பார்ப்போம்.

சீனாவில் உளவுவேலைகளில் ஈடுபடுவது மிகவும் கடினமான பணியாகவே KGB க்கு இருந்தது. சீனர்கள் ரக்ஷ்சியர்களுடனான உறவை மட்டுப்படுத்தி வாழ்ந்தார்கள். இதனால் KGB தமக்குத் தேவையான சீனா பற்றிய தகவல்களை அமெரிக்க மூலங்களிலிருந்து பெறுவதற்காக சீன விவகாரங்களில் வல்லுநர்களாக உள்ள KGB யினரை ரஷ்யா அமெரிக்காவில் நிலைப்படுத்தியது.

ஆகவே தமிழன் என்ற முனைப்புச் செருக்கோடு தமிழர்கள் வாழ்ந்து தமிழர் தேசிய விடுதலைக்காக உழைக்கும் போது வெளிச்சக்திகளின் மறைமுக உளவுப்பணிகளின் முன்னெடுப்புக்கள் தோற்கடிக்கப்படும். அதுவும் தமிழர் தாயகம் ஒரு மிகச்சிறிய நாடு என்பதால் புலனாய்வுச் சேவைக்கான மனிதவளம்மற்றும் நிதிவளம் இரண்டிலும் சிறியதாக இருப்பதனால் தமிழ் மூளை உழைப்பாளர்களது உழைப்பே அதிகம் தேவைப்படும்.

அப்படியாக பாடுபட்டு உழைத்த எண்ணற்ற புத்திஜீவிகள் வாழ்ந்த தாய்மண். அதில் ஒருவரான மாமனிதர் பேராசிரியர் துரைராசா அவர்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

அம்மாமனிதனை வல்லமையுள்ள நாடுகள் கௌரவபதவிகள் வழங்கி தமக்குள் உள்வாங்க முனைந்தபோது அந்நாடுகள் அவரிடம் தோற்றுப்போனது. அவர் தமிழ்ச் சமுதாயத்திற்காக, தமிழர் தாயகத்திற்காக பாடுபட்டு தாய்மண்ணிலே கலந்தார். அவர்போன்ற எண்ணற்றவர்களின் இலட்சியப் பாதையில் தடம் பதித்து புத்திஜீவிகள் அனைவரும் உழைக்கும் பலமானது தமிழ்த்தேசிய விடுதலைக்கு வலுச்சேர்க்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமிழரின் இராணுவ- அரசியல் தளங்கள் பலமாக இருப்பது போன்று புலனாய்வும் பலம் பொருந்திய நிலையில் இருப்பதற்கு தமிழ்மூளை உழைப்பாளர் சமூகம் பக்கபலமாக இருக்கும்போதே தமிழர் தேசத்தை வலுவான, பலமான, பாதுகாப்பான தேசமாக கட்டியெழுப்ப முடியும்.

**நாஙகளதேடினா எனனவரும..**



**மகன்:~** கண்ணி வெடிதேடும் மாமாக்கள் தேடினா என்னவரும்?

**தந்தை:** கண்ணிவெடி,பொறிவெடி என்று வெடிபொருட்கள் வரும்.

**மகன்:~** அதை நாங்கள் தேடினால்.

**தந்தை:~** துண்டு துண்டாய் சதைக்கும் பல்வரும்.

# மருத்துவமனைக்கான அபிவிருத்திப்பணி அரச நிதியில் மேற்கொள்வதாக இல்லை

## கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந்தன்

*கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இன்று வன்னி பெருநிலப் பரப்பில் வாழும் மக்களின் முக்கியமானதொரு வைத்திய சாலையாக உள்ளது.*

*இதனால் இங்கு சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஆனால் இந்த நோயாளர்களுக்கு திருப்தி கரமான சேவையை வழங்கக்கூடியதாக இந்த வைத்தி சாலையின் வளம் பற்றாக்குறையாக உள்ளது.*

*இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி சிவானந்தன் அவர்களை சந்தித்து நிலைமயினை அறிந்து கொள்ளும் வகையில் நாம் அவரை சந்தித்தோம்.அவர் எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள்................*



கிளிநொச்சி வைத்தியசாலையில் இடப்பற்றாக் குறை தொடர்பாகக் கேட்டபோது?

ஆரம்பத்தில் ஆறு மாத காலத்திற்கு முன்பு தற்காலிகக் கொட்டகைகளில் நோயாளர் விடுதிகள் இயங்கி வந்தன. தற்போது ஜப்பான் அரசினால் அமைக்கப்பட்ட இரண்டு புதிய விடுதிகளும் U.N.H.C.R. இனால் அமைக்கப்பட்ட விடுதியுடனும் இயங்குகின்றன. இதைவிட அவசரசிகிச்சைப்பிரிவும், ஒரு அதிதீவிர சிகிச்சைப்பிரிவும் அமைக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு இந்த வைத்திய சாலையின் கட்டடவசதி மென்மேலும் விஸ்தரிக்கப்படுகின்றது இவ்வாறு கட்டட விஸ்தரிப்பிற்கு ஏற்ப வைத்தியர்களோ. தாதிமார்களோ அல்லது ஏனைய ஊழியர்களோ எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. இதற்கு நிறைய நிறைய அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன.

ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளின் நவீன மருத்துவ வசதிக்கு ஏற்ப இம்மருத்துவ மனை அமைக்கப்படுகின்றதா?

இதில் வந்து ஒரு நவீன சிகிச்சை முறையோ அல்லது நவீன சிகிச்சையளிப்பு முறையோ உருவாக்க வேண்டும் என்றால் அதில் வைத்தியர்களின் நிபுணத்துவம் இன்றியமையாதது. வைத்திய நிபுணர் என்பதில் பொது வைத்திய நிபுணர் அல்லது சத்திர சிகிச்சை நிபுணராக இருக்கலாம் அல்லது மகப்பேற்று நிபுணராக இருக்கலாம் அல்லது றேடியோ கதிரோடு சம்பந்தப்பட்ட எக்ஸ்ரே, கதிரோடு சம்பந்தப்பட்ட வைத்திய நிபுணராக இருக்கலாம். மயக்க மருந்துகள் கையாளும் நிபுணர்கள் இருந்தால்தான் நாங்கள் மென்மேலும் நிபுணத்து வைத்தை வளர்க்கலாம். ஆனால் எங்களிடம் ஒருசில கட்டட வசதிகள் இருந்தாலும் அதற்கான வைத்திய நிபுணர்கள் இல்லை. நாங்கள் இந்த மருத்துவ மனையை மாவட்ட மருத்துவமனை என்று சொல்வது மட்டும்தான். ஒரு தள வைத்திய சாலை என்ற தரத்தில்தான் இயங்கி வருகின்றது ஒரு நாளைக்கு 600 தொடக்கம் 700வெளி நோயாளர்களும் விடுதிகளில் 150நோயாளர்களும் சிகிச்சை பெறுகின்றனர். இதை வந்து ஏனைய, வைத்திய சாலைகளான யாழ்ப்பாணவைத்திய சாலையுடனோ அல்லது வவுனியா பொதுமருத்துவ மனையுடனோ ஒப்பிடுகையில் அங்கும் 600தொடக்கம் 700வரையான நோயாளர்கள்தான் நாளாந்தம் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இதேபோன்று தான் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையிலும் சிகிச்சை பெறு கின்றனர்.

இங்கு. இந்த மருத்துவ மனையும் முக்கியமானதொரு மருத்துவ மனையாக இருந்தாலும் இங்கு சாதாரண M.B.B.S. தர மருத்து வர்கள்தான் கடமையாற்றுகின்றனர். இங்கு நவீன வசதிகளை பெருக்குவதோடு வைத்திய நிபுணர்களை அதிகரிக்கவேண்டும். அவ்வாறு ஆளணியை அதிகரித்தால் நவீன மருத்துவ வசதியை வழங்கமுடியும்.

அவ்வாறு இருந்தும் ஓரளவு அவசர சிகிச்சை முறைகள் இங்கு வழங்கப்படுகின்றன. புதிய நவீனமுறை சிகிச்சையை நாங்கள் வழங்கமுடியாது ஏன் என்றால் அதற்கான உபகரணங்களும்,ஆளணியும் இல்லாதுள்ளன. புதிய நவீன சிகிச்சைமுறை வழங்கப்பட வேண்டுமானால் வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும்.



பின் தங்கிய பிரதேசங்களில்மருத்துவ வசதியை வழங்கிவரும் தியாகதீபம் திலீபன் மருத்துவ மனையினரின் பங்கு எவ்வாறு உள்ளது?

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவசேவையினரின் திலீபன் மருத்துவ சேவையானது தமிழர் தாயகப்பகுதிகளின் கிராமப்புறங்களில் வந்து தமது மருத்துவ சேவையை விஸ்தரித்துள்ளனர். இதனால் அடிப்படை வசதிகள் இல்லாத பெருமளவுமக்கள் இலகுவான முறையில் சிகிச்சையினைப் பெற்று வருகின்றனர். அதைவிட மேலதிகசிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் தேவையான சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கின்றனர். அவர்களுடைய சேவையும் எங்களுடைய சேவையும் ஒரு இணைந்த சேவையாகவே உள்ளது.

சுற்றயல் கூறு மருத்துவ மனைகளில் உள்ள மருத்துவர்பற்றாக் குறை தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால்தான் நிவர்த்திசெய்யப் படுகின்றது. இதனால் மக்கள் தமது அடிப்படைமருத்துவவசதிகளை இலகுவாகப் பெறமுடிகின்றது. இவ்வாறு திலீபன் மருத்துவ சேவை இல்லாது விடின் இவ்வாறு அடிப்படை மருத்துவசேவை கிடைக்கப்போவதில்லை.

அதனால் தேவையற்ற உயிரிழப்புகளும், தொற்றுநோய்த்தாக்கங்களும். அதிகரித்திருக்கும். இவ்வாறு இவர்களது அயராத சேவையினால் ஓரளவு உயிரிழப்புக்கள் தொற்றுநோய்கள் தவிர்க்கப்படுகின்றன. இதனால் இவர்களுடைய பங்களிப்பு என்பது எமக்கு மிகவும் பக்கத்துணையாக இருக்கின்றது. அவர்கள் தொடர்ந்து எம்முடன் சேவையாற்றி வருகின்றனர். ஏனைய பின்தங்கிய மட்டக்களப்பு திருகோண மலை மற்றும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் இதுபோன்ற அடிப்படை வசதிகள் இல்லாது பெரிதும் கஸ்டப் படுகின்றனர்.

கிளிநொச்சிமாவட்ட மருத்துவமனையை பொறுத்தவரையில் எந்த ஒரு அபிவிருத்திப்பணிகளும் அரசநிதியில் மேற்கொள்ளப்படுவதாக இல்லை. வெளிநாட்டு நிறுவன நிதியுதவியில் நடைபெறுகின்றன இது தொடர்பாக.

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சுகாதார சேவைக்கான நிதியொதுக்கீடு 400 மில்லியனாக இருந்தது. இத்தொகை குறைவடைந்து 300மில்லியனாக இருந்து தற்போது அரசினால் மருத்துவசெலவிற்கென வடக்குகிழக்கு பிரதேசத்திற்கென120மில்லியன் நிதி ஒதுக்கீடு தான் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிதி தற்போது ஒரு வருடத்திற்கு வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகள் சுகாதாரத் திணைக்களங்கள் சுகாதார வாகனங்கள் பராமரிப்பு எரிபொருள் என்பவற்றிற்கு இரண்டுமாத காலத்திற்கே போதாமையாக உள்ளது.

அரச நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்டுவரும் சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை பிரதிமாகாண சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றுக்கான புதியகட்டடங்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் இதுவரையில் கட்டடப் பணிகள் பூர்த்தியடையவில்லை.

ஏனைய ஜப்பானிய நிதியுதவியில் அமைக்கப்படும் கட்டடங்கள் மிக வேகமாக அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது சில மருந்துகளுக்கான தட்டுப்பாடு அடிக்கடி நிலவிவருகின்றது. இது தொடர்பாக.

தற்பொது அரசாங்கம் நிர்ணயிக்கப்பட்ட அளவிலேதான் மருந்துகளை வழங்கிவருகின்றது. அதாவது. முதலாவதுகாலாண்டு இரண்டாவது காலாண்டு என சென்ற வருடங்களை விட இவ்வாண்டு ஒதுக்கப்பட்ட மருந்துகளின் எண்ணிக்கை குறைய அதாவது மருத்துவவசதிக்காக ஒதுக்கப்படும் நிதி அரசினால் குறைக்கப்பட்டதனால் இந்த மருந்துகளின் அளவும் குறைவடைந்துள்ளது ஓரளவு அடிப்படைத்தேவையான மருந்துகள் மட்டும் கிடைக்கின்றன.

**நேர்காணல்**
**சு.பிரபா**

எதிர்கொள்கின்ற முக்கிய மருத்துவப்பிரச்சினைகள் பற்றி நாம் கேட்டபோது.

முக்கியமான மருத்துவப் பிரச்சினை என்று சொன்னால் முதலாவது வீதிவிபத்து., நஞ்சருந்துதல், பாம்புக்கடி, அஸ்மா. இந்த அஸ்மா என்று சொல்லப்படுகின்ற தொய்வு நோய்க்கு அடிப்படைக்காரணம் இங்குள்ள தூசுகள் பெரும்பாலான தெருக்கள் மண்வீதிகளாக இருப்பதனால் இது உருவாகின்றது. ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் அஸ்மா நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் தொகை அதிகம் கடந்த ஆறுமாதத்திற்கு முன்பு 20முதல் 30 ஆக இருந்தநோயாளர்கள் இன்று 200இற்கு அதிகமாக மாறியுள்ளது இந்த நோயாளர்களில் புதிய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது மட்டுமல்லாது பழைய நோயாளிகளின் பாதிப்பும் அதிகரித்துச் செல்கின்றது.

அடுத்தது வீதிவிபத்து என்பது ஒரு பாரிய பிரச்சினை எந்த நேரத்திலும் நிகழ்ந்துகொண்டு இருக் கின்றது. நாள் ஒன்றிற்கு ஒவ்வொரு வீதிவிபத்து வருகின்றது இதில் சில நாட்களில் பாரிய அளவிலான விபத்துக்கள் இடம்பெறுகின்றன. உயிரிழப்புகள் கூடபாரிய அளவில் ஏற்படுகின்றன. நாங்கள் வந்தவுடன் 120இற்கு மேற்பட்ட வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இங்குள்ள வீதிப போக்குவரத்து முறையாலும் வீதியில் ஏற்படுகின்ற இட நெருக்கடிகளையும் மக்களுக்கு வீதி ஒழுங்கு தொடர்பான போதிய அறிவுகள் இல்லாமையினாலும் நடைபாதையை எவ்வாறு பாவிப்பது என்ற அறிவு இன்மையினாலும் இவ்வாறான விபத்துக்கள் நிகழ்கின்றன.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் கிசிச்சைபெற வரும் பிரதேச நோயாளர்கள் பற்றி.....

அதாவது பூநகரி, முழங்காவில், முல்லைத்தீவு, புளியங்குளம், முகமாலைவரை உள்ள மக்கள் இங்கு வருகின்றனர். இதில் நோயினால் அதிதீவிரமாக பாதிக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள் அவர்கள் தூர இடத்திலிருந்து வருகின்ற போது அவர்களுக்கான போக்கு வரத்து என்பது போதிய அளவு இல்லை அவர்கள் வரும்போது அவர்களை நாங்கள் உள்ளகவிடுதிகளில் அனுமதித்து அவர்களுக்கான சிகிச்சையினை வழங்குகின்றோம். இவ்வாறு மருத்துவ ரீதியில் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால் மருத்துவ வசதிகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாது உள்ளது. போக்குவரத்து என்பது சுகாதாரத்திற்கும் போக்குவரத்திற்கும் முக்கிய தொடர்பு உள்ளது.

ஏனைய இடங்களில் யாழ்ப்பாணத்தில் இச்சிகிச்சைபெறும் நோயாளிகள் போக்குவரத்து வசதி இருப்பதனால் ஓரளவு இலகுவாக சிகிச்சையினை பெறுகின்றனர். அங்கு இடநெருக்கடி ஏற்படுகின்றபோது கிளிநொச்சியில் இருந்து செல்கின்ற நோயாளிகள் திருப்பி அனுப்பப்படுகின்றனர். அவ்வாறு அனுப்பி வைக்கப் படும் நோயாளிகளின் எண்ணிக்கை கிளிநொச்சியில் அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறு அதிகரித்துச் செல்கின்ற நோயாளிகளை குறிப்பிட்ட தற்போதுள்ள ஆளணி வளத்தை வைத்துத்தான் அவர்களை பராமரிக்க வேண்டியுள்ளது. குறைவான ஆளணி வளத்தோடுதான் எமது கடமையை செய்ய வேண்டியுள்ளது.

ஏனைய மருத்துவமனைகளைவிட அதாவது கிராமியவைத்தியசாலைகளிலும் இவ்வைத்திய சாலையிலும் ஆளணிவளம் எவ்வாறு உள்ளது.

ஆளணி வளம் இல்லை என்றே கூறவேண்டும். இங்குள்ள ஆளணிப் பற்றாக்குறை என்றால் இங்கு 19 வைத்திய அதிகாரிகள் இருக்க வேண்டும் அதைவிட 25இற்கு மேற்பட்ட தாதிய உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டும். அதைவிட 120 இற்கு மேற்பட்ட சாதாரண ஊழியர்கள் இருக்க வேண்டும். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை. இங்கு 05 வைத்தியர்களும் எட்டு தாதி உத்தியோகத்தர்களும் ஏனையதர உத்தியோகத்தர்கள் 50பேரும் இந்த பெரிய வைத்தியசாலைக்கு வருகின்ற பெருமளவான நோயாளிகளை பராமரிக்கின்றது என்பது பெரும் பிரச்சினையாக உள்ளது.

இந்த மருத்துவசேவையில் கூட கடமையை சுகாதாரத் தொண்டர்கள் மூலம் தான் செய்ய முடி கின்றது இங்கு உள்ள ஐந்து வைத் தியர்களும் 24 மணிநேரமும் தொடர்ந்து கடமையாற்ற வேண்டிய தேவையுள்ளது. அதேபோன்றுதான் ஏனைய தாதிய உத்தியோகத்தர்களும், ஏனைய ஊழியர்களும் சேவையாற்றுகின்றனர் அதனால்தான் ஓரளவு சேவையினை செய்யக்கூடியதாக இருக்கிறது.

முல்லைத்தீவு மருத்துவ மனையினை எடுத்துக்கொண்டால் இரண்டில் ஒரு பகுதிவைத்தியரும் M.B.B.S. தர வைத்தியஅதிகாரியும் என இரண்டு பேர்மட்டும் உள்ளனர். இவ்வாறு என்றால் அங்கும் ஆளணியை அதிகரிக்க வேண்டும் அவ்வாறு அதிகரிப்பதனால் நோயாளிகளின் சிரமத்தினை குறைத்துக்கொள்ளமுடியும்.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை என்று சொல்வதைவிட வன்னிப்பெருநிலப்பரப்பில் வந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கே வந்து பெரிய வைத்தியசாலையாக இது காணப்படுகின்றது. ஏனையமாவட்ட வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் (கட்டுப்பாட்டு பிரதேசத்தில்) வைத்தியர்களின் எண்ணிக்கை இங்கு தான் கூடுதலாக இருக்க வேண்டும்.

இங்கு வந்து M.B.B.Sதர வைத்திய அதிகாரிகள் 05பேரும் 1பதிவு வைத்திய அதிகாரியுமாக ஆறுபேர் கடமையாற்றுகின்றோம் அதைவிட இறுதியாண்டு பரீட்சையை முடித்து உள்ளவைத்தியர்களும் எமக்கு இங்கு வந்து உதவிசெய்து வருகின்றனர். இதனால் ஓரளவுக்கு வைத்திய சேவையை முன்னெடுக்க முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஏனைய வைத்தியசாலைகளுக்கு பெரும்வைத்தியர் பற்றாக்குறை நிலவுகிறது பூநகரி, முழங்காவில், தருமபுரம், அக்கராயன், வட்டக்கச்சி, இவ்வாறு பாரிய பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு மாவட்டமாக கிளிநொச்சியுள்ளது. இந்த மாவட்ட மருத்துவமனையில் வைத்தியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வருகின்றது. அதைவிட ஏனைய ஊழியர்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவிவருகின்றது. இவ்வாறான அளணிப் பற்றாக்குறையை சிறு சிறு உதவு தொகைகளாகப் பெறுகின்ற சுகாதாரத் தொண்டர்களின் உதவியோடு இந்த மாவட்ட வைத்திய சாலையின் சேவையை விஸ்தரிக்கின்றோம்.

### வாடகை வீடு




**வீட்டுக்காரன:-**
4 அறை இருக்கு, 2 விறாந்தை 6 கதவு பத்து ஜன்னல்.

**வந்தவா:-**
காணும் காணும் காணி நிலத்தில என்னென்ன நட்டிருக்கு.

**வீட்டுக்காரன்**
நிறைய மிதிவெடிகள் கிடக்கு, இரண்டு மூண்டு கண்ணிவெடி கிடக்கு.

# சந்திரிகாவின் முதல் எதிரி யார்?



இப்பொழுது சனாதிபதி சந்திரிகாவின் முதல் எதிரியார்? புலிகளா? ரணிலா? ஜே.வி.பி.யா? வெவ்வேறு நோக்கு நிலைகளிலிருந்து பார்த்தால் ஒவ்வொரு தரப்பும் ஏதோவொரு விகிதத்தில் சந்திரிகாவுக்கு எதிரிபோலவே தோன்றும். ஆனால், சந்திரிகாவின் எதிர்காலக் கனவுகளைக் கருதிக் கூறுமிடத்து அவருடைய உட னடிமுதல் எதிரி இந்த மூன்று தரப்பிற்குள்ளும் இல்லை. மாறாக, அவருடைய உள்வீட்டுக் குள்ளேயே அவருடைய கூட்டுமுன்னணியின் பிரதமராயிருக்கும் மகிந்தராஜபக்சதான் இப் பொழுது அவருடைய முதல் எதிரி. இதைச் சற்று விரிவாகப்பார்ப்போம்.

சந்திரிகாவின் எதிர்காலக்கனவு எனப்படுவது - அரசியலமைப்பை மாற்றியெழுதி அதன் மூலம் பிரதமராகி தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதே. இதற்கு இப்போதுள்ள நிலை மைகளின்படி அவருக்கு புலிகளும் தேவை, ரணிலும் தேவை.

ஆட்சியில் தொடர்ந்தும் இருப்பதென்றால், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதற்கு நிதியுதவிவேண்டும். நிதியுதவி பெறசமாதானம்வேண்டும். சமாதானம் வேண்டுமானால் புலிகள் வேண்டும். எனவே இப்போதைக்கு புலிகள் அவருடைய முதன்மை எதிரிகளாயிருக்கமுடியாது.

மற்றது, ரணில். சந்திரிகா ரணிலை தனக்குச் சமதையான ஆளுமையுடைய ஒரு தலைவர் என்று கருதுவதாகத் தெரியவில்லை. ரணில் யு.என்.பி.யின் தலைவராக உள்ளவரை யு.என்.பி. தனக்குச் சவாலாக வளர முடியாது என்றுமவர் நம்புவதாகத் தெரிகிறது. சிலஆண்டுகளுக்குமுன்பு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்திற்கு எதிராக கரு ஜெயசூரிய கிளர்ச்சி செய்யப் போகிறார் என்றொரு நிலமைதோன்றியபோது அதுபற்றிய தகவல்களை ரணிலுக்குக்கசியவிட்டு, ரணிலைக்காப்பாற்றியது. சந்திரிகாவே என்று ஒரு ஊகம் உண்டு. அதாவது ரணில் தலைவராக இருப்பதே தனது எழுச்சிக்கு வசதியானது என சந்திரிகா நம்புகிறார் என்று இதை வியாக்கியானம் செய்யமுடியும்.

மற்றது, ஜே.வி.பி. ஜே.வி.பி.க்கு உட னடியாக ஆட்சிக்குவரும் திட்டங்கள் ஏதுமில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஒரு பிரதான மாற்றுக்கட்சியாக உருவாக இன்னும் சில தேர்தல்கள்வரை பொறுத்திருக்கவேண்டும். அதுவரை அவர்களுக்கு சந்திரிகா தேவை. அதுபோலவே சந்திரிகா தொடர்ந்தும் ஆட்சியிலிருப்பதற்கு வேண்டிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைச் செய்வதற்கு ஜே.வி.பி.யின் ஒத்துழைப்புத்தேவை.

தனது கட்சியான எஸ்.எல்.எவ்.பி.யின் எதிர்காலம் பற்றிச் சிந்தித்தால்தான், அதாவது எஸ்.எல்.எவ்.பி.யின் தலைவி என்ற நிலையிலிருந்து பார்த்தால்தான் அவருடைய முதல் எதிரியாக ஜே.வி.பி. வரும். மற்றும்படி ஐக்கிய சுதந்திரமுன்னணியின் தலைவி என்றநிலையில் இருந்து பார்த்தால் அவருடைய கனவுகளை அடைவதற்கு குறுகியகாலநோக்கில் ஜே.வி.பி. தேவை.

இப்படிப்பார்த்தால், அவருடைய கனவுகளுக்குஉடனடியாகத் தடையாயிருப்பது மகிந்தராஜபக்சதான். ஏனெனில் சந்திரிகாவின் வீழ்ச்சிக்காகப் பிரார்த்திப்பதும் காத்திருப்பதும் ராஜபக்சதான். தொடர்ந்தும் பதவியிலிருப்பதற்கான சந்திரிகாவின் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை ஒன்றாயிருந்துகொண்டு உள்ளூர எதிர்த்துக்கொண்டிருப்பதும் ராஜபக்சதான்.

ஜே.வி.பி.யுடனான சந்திரிகாவின் நட்பு பலமடைந்துவிடக்கூடாது என்பதிலும் நீண்ட கால நோக்கங்களுடன் இருப்பது ராஜபக்சதான். நாடாளுமன்றத்தில் ஐக்கியசுதந்திரமுன்னணி ஒரு ஸ்திரமான பெரும்பான்மையைப் பெற்றுவிடக்கூடாது என்று உள்ளூரப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பதும் ராஜபக்சதான்.

ஏனெனில், சந்திரிகா அரசியலமைப்பை மாற்றத்தேவையான பலத்தைப் பெறாதவரை அவர் தொடர்ந்தும் சனாதிபதியாகவிருந்து, அவருடைய பதவிக்காலம் முடிந்தவுடன் அரங்கிலிருந்து அகன்றுவிடவேண்டியதுதான். அதோடு பலதசாப்தகால பண்டாரநாயக்காக்களின் ஆட்சி சிலசமயம் முடிவுக்கு வரக்கூடும். பிறகு ராஜபக்சக்களின் காலம் தொடங்கிவிடும். உண்மையில் அது ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றே சொல்லவேண்டும். இப்பொழுதுள்ள நிலைமைகளின்படி ஐக்கிய சுதந்திரமுன்னணிக்குள், புனிதம் கெடாதிருப்பது ராஜபக்சதான். சந்திரிகா இல்லாத எஸ்.எல்.எவ்.பி.க்குள் ராஜபக்சவுக்கு நிகராக வேறுயாருமே இல்லை. இதற்குப் பின் வரும் காரணங்களைக் கூறலாம்.

முதலாவது, அவருடைய சொந்த வாழ்க்கை ஊழல்களற்றது, கறைபடியாதது என்று ஒரு நற்பெயர் அவருக்கு உண்டு.

இரண்டாவது, எஸ்.எல்.எவ்.பிக்குள் அதிகம் இடது சாய்வானவர், ஏழைகளின் நண்பர் என்றும் ஒரு பெயர் அவருக்குண்டு.

மூன்றாவதாக, விசேசமாக மகா சங்கத்தினரின் ஆசீர்வாதங்களும் அவருக்குண்டு.

> சந்திரிகா அரசியலமைப்பை மாற்றத்தேவையான பலத்தைப் பெறாதவரை அவர் தொடர்ந்தும் சனாதிபதியாகவிருந்து, அவருடைய பதவிக் காலம் முடிந்தவுடன் அரங்கிலிருந்து அகன்றுவிடவேண்டியதுதான். அதோடு பலதசாப்தகால பண்டாரநாயக்காக்களின் ஆட்சி சிலசமயம் முடிவுக்கு வரக்கூடும். பிறகு ராஜபக்சக்களின்காலம் தொடங்கிவிடும். உண்மையில் அது ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றே சொல்லவேண்டும். இப்பொழுதுள்ள நிலைமைகளின்படி ஐக்கிய சுதந்திர முன்னணிக்குள், புனிதம் கெடாதிருப்பது ராஜபக்சதான். சந்திரிகா இல்லாத எஸ்.எல். எவ்.பி.க்குள் ராஜபக்சவுக்கு நிகராக வேறுயாருமே இல்லை

நாலாவதாக, மீடியாக்காரர்களின் மத்தியில் அவருக்கு மிகவும் செல்வாக்குண்டு. அவருடைய கட்சிக்குள் சந்திரிகாவுக்கு அடுத்த படியாக குறிப்பாக பெயர்கெடாத ஒரு அரசியல்வாதி என்றவகையில் மீடியாக்கவர்ச்சிமிக்க ஒரு தலைவராக அவர் காணப்படுகிறார்.

ஐந்தாவது, எதிர்க்கட்சிகளின் மத்தியிலும் அதிகம் மதிக்கப்படும் ஒரு ஆளும்கட்சி ஆளாக அவர் காணப்படுகிறார்.

இவைதவிர ஆறாவதாக, ஜே.வி.பி.யின் கோட்டையாகக் காணப்படும் றுகுணு பிரதேசத்தில் அவர்களுக்குச் சவாலாக நிற்கக் கூடிய ஜனவசியம்மிக்க தலைவராகவும் அவர் காணப்படுகிறார்.

மேற்சொன்ன தகுதிகள்தான் அவரை சந்திரிகா மற்றும் ஜே.வி.பி.யின் எதிர்ப்புக்களையும் மீறி பிரதமராகின. பிரதமர் தெரிவில் கதிர்காமர் விலக்கப்பட்டதற்கு காரணங்கள் எதுவாயிருப்பினும் ராஜபக்ச தெரிவுசெய்யப் பட்டதற்கு மிகப்பலமான காரணங்கள் உண்டு.

தன்னைப்போல ஜனவசியம்மிக்கவரும் பலமான குடும்பப்பின்னணியை உடையவருமாகிய ராஜபக்ச தனக்கடுத்த இடத்திலிருப்பது ஆபத்தானது என்று சந்திரிகா அஞ்சினார். தமது கோட்டைபோன்ற றுகுணு பிரதேசத்தில் தமக்குச் சவாலாகக் காணப்படும் ஒருவர் மேலும் பலமடைவதை ஜே.வி.பி. எதிர்த்தது. எனவே ஜே.வி.பியும் சந்திரிகாவும் தமக்குச் சவாலாக வளர முடியாதவரும் தென்னிலங்கை அரசியலில் வேரற்றவருமாகிய கதிர்காமரை பிரதமராக்க பாடுபட்டனர்.

ஆனால், ஜே.வி.பி.யுடனான கூட்டினால் எஸ்.எல்.எவ்.பியின் வெகுசனத்தளம் உடைந்துபோவது கண்டு விசனமுற்றிருந்த மூத்த எஸ்.எல்.பி. காரர்கள் ஜனவசியமிக்க, கறைபடாத தலைவராகிய ராஜபக்சவை முன்னுக்குத் தள்ளினார்கள். கட்சியின் எதிர்கால நலன்களை முன்னிறுத்திய மூத்தகட்சி உறுப்பினர்களை மீறிப்போக சந்திரிகாவால் முடியவில்லை. எனவே ராஜபக்ச பிரதமரானார்.

**நிலாந்தன்**

ஆனாலும் சந்திரிகா மிகவும் முன்னெச்சரிக்கையுடன் ராஜபக்சவிடமிருந்து திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதத்தைப்பெற்ற பின்பே அவரைப் பிரதமராக்கினார். அதிலிருந்து ராஜபக்சவுக்கும் சந்திரிகாவுக்குமிடையே பிரகடனம் செய்யப்படாத ஒரு பனிப்போர் தொடங்கிவிட்டது. இருவருடைய கனவுகளும் நேரெதிர் முரணானவைகளாகக் காணப்படுகின்றன.

சபாநாயகர்தெரிவில் சந்திரிகா தோற்றபோது அதிகம் மகிழ்ச்சியுற்றிருக்கக் கூடிய ஒரு ஆள் ராஜபக்சவாகத்தான் இருந்திருக்கும். அதன்பின் உபசபாநாயகர் தெரிவுக்காக ஜே.வி.பி. பெரிய திட்டங்களை வகுத்து வைத்திருக்க ராஜபக்சவும் சிலமூத்த எஸ்.எல்.எவ்.பித்தலைவர்களும் யு.என்.பி.யுடன் ரகசியமாகஒரு உடன்பாட்டுக்குவந்து ஜே.வி.பி.யை ஓரம்கட்டினார்கள். இதனால் சீண்டப்பட்ட ஜே.வி.பி. சந்திரிகாவுக்குத்தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்துவருவது தெரிந்ததே.

மற்றது, அண்மையில் பிக்குக்கள் தாக்கப்பட்டவிவகாரத்திலும் ராஜபக்ச தனக்குப் பங்கில்லை என்று வெளித்தெரியும் விதத்தில் மிகவும் சமயோசிதமாக நடந்துகொண்டார். பிக்கக்களைத் தாக்குவதென்று ஏற்கனவே திட்டம் வகுக்கப்பட்டது ராஜபக்சவுக்குத் தெரியுமாம். அவர் அதை எதிர்த்தவராம். ஆனால் அவரைமீறி நிலைமைகள் வளர்ந்தபோது இதில் தனக்கெந்தவிதமான உடன்பாடும் இல்லை என்பதுபோலவும் தானொரு கையாலாகாத சாட்சியே என்றதோற்றம் வெளித்தெரியும் விதத்திலும் நடந்துகொண்ட அவர் தாக்கப்பட்ட பிக்குக்களை முதலில்சென்று கண்டு வருத்தம் தெரிவித்தாகவும் ஒரு தகவல் உண்டு.

கடந்த இரண்டுமாதகாலமாக ஆளும் கட்சி செய்துவரும் பிழைகளுக்கெல்லாம் மன்னிப்புக்கோரும் ஒரு பாத்திரத்தை அல்லது அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வருத்தம் தெரிவித்து ஆறுதல் கூறும் ஒரு பாத்திரத்தை ராஜபக்சவே வகித்துவருகிறார். இது அவரை எதிர்க்கட்சிகளின் மத்தியில் கண்ணியம்மிக்க ஒரு அரசியல்வாதியாக இனங்காட்டிவருகிறது.

அவர் அதிகம் அவசரப்படவில்லை, அதிகம் அலட்டிக்கொள்ளவுமில்லை. ஒரு சாட்சி போல அமைதியாக இருந்தால்சரி. தன்னைச் சுற்றிநடக்கும் ஒவ்வொரு செயலும் தன்னை மேலும் மேலும் பலப்படுத்திவருகின்றது என்பதை அவர் மிகச்சரியாகவே கணித்து வைத்திருக்கிறார். நாடாளுமன்றத்தில் தனது கூட்டுமுன்னணியின் நலன்களை அதிகம் பாதுகாப்பவராக அல்லாமல் உடைந்துசெல்லும் எஸ்.எல்.எவ்.பியை மீளக்கட்யெழுப்புவதன்மூலம் தனது எழுச்சிக்கான அடித்தளத்தை திட்டமிட்டுப் பலப்படுத்துவபராகவே அவர் காட்சி தருகிறார்.

அண்மைக்காலங்களில் அடிமட்ட மக்கள் மத்தியில் அவர் அதிகமதிகம் இறங்கி வேலைசெய்து வருகிறார். எதிர்க்கட்சிகள் மத்தியிலும் அவரொரு கனவான் அரசியல்வாதியாகக்கணிக்கப்படுகிறார். இதுதான் அண்மையில் ஜே.வி.பி. அவரை நேரடியாகத் தாக்கி அறிக்கைவிடும் ஒரு நிலைக்குக் காரணம். ஆனால் ஜே.வி.பி. அவரைத் தூற்றத் தூற்ற அவருடைய செல்வாக்கு வளர்கிறதே தவிர, தேயவில்லை. இப்பொழுதுள்ள நிலைமைகளின்படி ஆளும் கட்சிக்குள் எதிர்காலத்தில் நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு கண்ணியமான தலைவராக அவர் எழுச்சி பெறத்தொடங்கிவிட்டார்.

நிலைமைகள் இந்தக்கணக்கில் வளர்ந்து செல்லுமாயிருந்தால் அரசியலமைப்பை மாற்றியெழுதும் சந்திரிகாவின் கனவுகள் ஈடேறப்போவதில்லை.

எனவே ராஜபக்ச பொறுமையாகக் காத்திருப்பது என்று முடிவெடுத்தவிட்டார்.

ரணிலும் அப்படித்தான் முடிவெடுத்திருப்பதாகத்தெரிகிறது.


அடுத்த சனாதிபதித்தேர்தல் நடக்குமாயிருந்தால் அதில் ரணிலும் ராஜபக்சவும் தான் எதிர் எதிராக நின்று மோதப்போகிறார்கள். ஆனால், அதற்கிடையில் தமது பொது எதிரியாகிய சந்திரிகாவை வீழ்த்தும்பொருட்டு இருவரும் ஒரே அலைவரிசையில் சிந்திப்பது தெரிகிறது.

எனவே, பண்டாரநாயாக்கக்களின் காலத்தை முடித்துவைக்க இலங்கைத்தீவின் அடுத்த சனாதிபதித்தேர்தல் வேட்பாளர்கள் இருவரும் காத்திருக்கத் தீமானித்துவிட்டார்கள். இந்த இருவரில் ஒருவர் அனேகமாக அடுத்த சனாதிபதியாக வரக்கூடும்.

ஏனெனில், அரசியலமைப்பை சந்திரிகாவுக்குச் சாதகமாக மாற்றியெழுதும் வாய்ப்புக்கள் வரவர அருகிச் செல்கின்றன.

ஆனால் அதேசமயம் அடுத்த சனாதிபதித்தேர்தல் ஒரு யுத்தகாலத் தேர்தலாய் இருப்பதற்கான வாய்ப்புக்கள் வரவர அதிகரித்து வருகின்றன.

## நின்றுபோன கலியாணம்



ரகு:~
என்ன மச்சான் உன்ரை கலியாணப் பேச்சு இடையில நிண்டுபோச்சு.

திரு:~
வேறயென்ன சீதனக்காணி கண்ணிவெடி பிரதேசத்திலெல்லோ இருக்குதாம்!

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 25 . 06 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# இறுதி வரை தோல்வி

கருணாவை பாதுகாப்பாகக் கொழும்பு கொண்டு சென்று படைத்தரப்பு பயன்படுத்திக் கொள்ள உதவுவதில் ஆளும் கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஒரு கூட்டுக்கட்சியாக செயற்பட்டிருப்பது போன்றுள்ளது.

ஏனெனில், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா ரணில் விக்கிரமசிங்காவின் ஆலோசகராக இருந்தவர். அப்படிப்பட்ட ஒருவர் கட்சியின் தலைமைக்குத் தெரியாது இத்தகைய செய லில் ஈடுபட்டிருப்பார் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

கருணாவை ஐக்கிய தேசியக்கட்சி பாதுகாப்பாக சுதந்திர ஐக்கிய மக்கள் முன்னணியின் கீழ்செயற்படும் படைத்தரப்பிடம் ஒப்படைக்க, படைத்தரப்பு கருணாவை நயவஞ்சக நோக்கோடு பயன்படுத்துகிறது

ஆக. படைத்தரப்பு கருணாவின் பெயரால் கிழக்கில் கட்டவிழ்த்து விட்டிருக்கும் தமிழ் இன ஆதரவாளர்கள் மீதான தாக்குதல்களும் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றுடன், இன்று கிழக்கில் தோன்றியிருக்கும் அமைதியின்மைக்கான ஆசிர்வாதத்தை இரண்டு பிரதான கட்சிகளுமே வழங்கியுள்ளன.

ஆகவே நிலையான சமாதானத்துக்கு விரோதமாக செயற்படுவதில் கட்சி பேதமின்றி கொழும்பு மையம் செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

ஆனால் கருணாவை பாதுகாப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி காட்டியுள்ள ஆர்வம் தமிழ் மக்களை பலமாக சிந்திக்க வைத்துள்ளது.

அத்தோடு ஐக்கிய தேசியக் கட்சியின் மீதும் அதன் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவின் மீதும் நம்பிக்கை யீனத்தையும் தோற்றுவித்துள்ளது.

கருணாவைப் பாதுகாத்து கொழும்பு கொண்டு செல்லப்பட்ட விவகாரம் அம்பலமானதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அவசரஅவசரமாக அந்த கட்சியின் மீது தற்செயலான கறை ஏற்பட்டுவிட்டது போலவும் அதனை நிவர்த்திசெய்ய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கிவிட்டது போலவும் காட்டியுள்ளது.

இதன் ஒரு அங்கமாக அலிசாஹிர் மௌலானா தனது பதவியை இராஜினாமாச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி வேண்டுமென்றால் அலிசாஹிர் மௌலானாவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பொருத்தமான ஒருவரை நியமித்து தனது ஆசன எண்ணிக்கையை தக்கவைத்துக் கொள்ளும்.

இந்த ஏராவூர் அலிசாஹிர் மௌலானா மீண்டும் தனது பழைய தொழிலான இரத்தினக்கல் வியாபாரத்தை தொடங்கவும் கூடும்.

ஆனால் இன்று கிழக்கில் யுத்த நிறுத்தத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆபத்தையும், சமாதானத்துக்கு விரோதமான செயற்பாடுகளை நிறுத்தி கிழக்கின் அமைதியின்மையை வழமைக்குக் கொண்டுவரக் கூடிய அதிகாரம் அந்தக் கட்சியிடம் இருக்கிறதா என்ற கேள்விக்கு அந்தக் கட்சியால் என்ன பதிலளிக்க முடியும்.

இது இவ்வாறு இருக்க, கருணா பாதுகாப்பாக கொழும்பு கொண்டு செல்லப்பட்டதும், கருணாவிற்கு இராணுவ புலனாய்வுத்துறை பாதுகாப்பளிப்பதும் மிகத்தெளிவாகவே புலனாகிவிட்டது.

இந்த நிலையில் இனியும் கருணாவின் விவகாரத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என்பது போல சிறிலங்காப் படைத்தரப்பும் அரசும் கருத்துக்களை தெரிவித்து வருவது. முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயலும் செயல் போன்றதே.

உண்மையில் நாட்டில் இன்று தோன்றியிருக்கும் சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியைப் பேணவேண்டுமாயின் கருணாவின் விவகாரத்தை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாகிறது.

இதனை செய்ய வேண்டிய பொறுப்பு அரசுக்கே இருக்கிறது. இதற்கு கருணா தொடர்பான விவகாரங்களை அரசு தெளிவாக்கி கருணாவை இந்த அரங்கிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான செயலில் ஈடுபட வேண்டும்.

இதனை அரசால் செய்ய முடியும். ஆனால் அரசு செய்யுமா என்பது தான் இன்றுள்ள கேள்வி.

இந்த நிலையில் அரசு இந்த காரியத்தில் ஈடுபடுவதே மிகப் பொருத்தமாக இருக்கும்.

ஏனெனில் காருணாவின் விவகாரத்தில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தோழ்வியை மட்டுமே சந்தித்து வருகிறார்கள்.

## தூரனின் பார்வை

# அறநனைந்தவரிற்கு குளிரென்ன கூதலென்ன

தொப்பிக்கல காட்டுப்பகுதியில் இருந்து கொண்டுமார்தட்டிய கருணா என்ற வெறும் மனிதனும் அவரது விசுவாசக் கும்பலும் முகமிழந்தவர்களாகி மட்டக்களப்பை விட்டே ஓடியதுடன் முடிந்து போயிவிட்ட 'கருணாவின் கதை' முதலாம் பாகக் கதை முடிந்து அதன் இரண்டாம் பாகம் கடந்த வாரத்தில் அரங்கே றி புருவங்களை உயர வைத்தது.



கடைசியாக கூறுகிறார்கள்?

இராணுவத்தரப்பு என்றாவது.. எதுகுறித்தாவது.. உண்மையை ஒப்புக்கொண்டதாக வரலாறு இருக்கிறதா? இல்லையே...

-'சரி எப்படியோ அவர் சேரவேண்டிய இடத்தில் தான் சேர்ந்திருக்கிறார்'.

-ஒரு தமிழினத் துரோகியின், கடைசிப் புகழிடம் அதுதானே!

-ஒரு காலத்தின், மக்கள், மதிப்பிற்குரிய தளபதி, ஒருகைக்கூலியாகத்தன்னை கைப்படுத்திக் கொள்ள நேர்ந்தது பரிதாபத்திற்குரியதே!

-அவரது தலைமைத்துவத்தை மதித்து அவரின் பின்னர் அணிதிரண்டு தமிழ்த் தேசவிடுதலைக்காக களம் கட்சியை ஆரம்பிக்கப்போகிறார். அவர் பின்னால் யார்தான் போகப்போகிறார்களாம்?

-ஆளானப்பட்ட அனுபவசாலி, அதுவும் பழுத்த அரசியல்வாதியான ஆனந்தசங்கரியாரே சோகசங்கரியாகிவிட்ட நிலையில்....

-சித்தார்த்தனே மீண்டும் புத்தராகி விடலாமா என யோசிக்க வைக்கச் செய்துவிட்ட நிலையில்..

-அகில இந்திய புகழ் வரதராஜப்பெருமாளே தேர்தலில் வராதராஜப் பெருமாளாகி விட்டநிலையில்...

டக்ளஸ்தேவானந்தாகூட மயிரிளையில் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலையில்.....

-கருணா கட்சியமைத்து அரசியலுக்கு வரப்போகிறாராம்!..?

-பேசாமல் ஆட்காட்டியாகவோ தலையாட்டியாகவோ இருந்தால் இராணுவத்திற்காவது விசுவாசமாக இருக்கலாம்... அல்லது பேசாமல் ஜே.வி.பி.யினரோ,... அல்லது மொட்டையடித்துக் கொண்டு ஹெல உறுமய விலோ கூட்டுச்

கிழக்கு மாகாண மக்களின் ரட்சகன் என தன்னைத்தானே பிரகடனம் செய்த அந்தத் துரோகி மீனகத்தை கைவிட்டு, வாலை ஒடுக்கிய பூனையாக எதிரி முகாமில் அவர்களது காலடியில் சுருண்டு படுத்துக்கொண்ட அவமானகரமான கதைகளை இந்த இரண்டாம்பாக வெளியீட்டாளர்கள் வெளிப்படையாகவே வாக்கு மூலமாக அரங்கேற்றியபோது, அந்தப் பிரதேசவாதி பேரினவாதி களின் உயிர்ப்பிச்சை கேட்ட அசிங்கம் தேசமெங்கும் தெரியவந்தது.

எந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினரை இலக்குவைத்து ஒரு காலத்தில் வீழ்த்தினாரோ, எந்த இராணுவப்புலனாய்வுப் பிரிவினரால் இவர் இலக்கு வைக்கப்பட்டாரோ... அதே பிரிவின் காலில் போய் விழும் பரிதாப நிலைக்கு அன்னார் போன கதையை அவருடன் இருந்து வெளியே வந்தவர்களே விபரித்த போது வீரம் செறிந்த கிழக்கு மண் தனக்கு இப்படி ஒரு அவமானமா? என எண்ணித் தலைகவிழ்ந்து கொண்டது.

***

கருணாவுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அவர் தப்பியோடியது முதலே கைவிரித்த பலகல்ல முதல் இன்றைய சிறில் ஹேரத்வரை எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற தொணிபடகதைத்ததும் கதைப்பதும் தான் கோமாளித்தனமானது.

அந்த முன்னாள் ஐ.தே. முன்னணிப்பிரமுகர் அலிஸாகிர் மௌலாணாவே, தான் கருணாவைப் பாதுகாப்பாக அழைத்து வந்து இராணுவத்தினரிடம் கையளித்தமையைப் பகிரங்கமாக ஒப்புக் கொண்டுவிட்டாரே.....

அவர் பொய் சொல்கிறார் என்றா படைத்தரப்புக் கூறும்...!

இராணுவப்புலனாய்வுப்பிரிவே கருணாவுக்கு முழுப்பாதுகாப்பு என்று கூறும் கருணாவுடன் இருந்து தப்பிவந்த நிலாவிணியும் ஏனைய மூன்று பெண்களும் பொய்யா புகுந்து போராடி, வீரச் சாவைத் தழுவிக் கொண்ட பல்லாயிரம் மாவீரர்களின் ஆத்ம துடிப்பை அவமதித்து எதிரியின் முகாமில் எச்சிலை நக்கும் இழிநிலையை இலக்கு வைத்துத்தான் கருணா இவ்வளவு கூத்தையும் ஆடினார்.



***

"சரி... கிழக்கில் ஸ்திரமற்ற நிலையை தோற்றுவிப்பதில் கருணா தற்போது உறுதியாக இருக்கிறாராம்"

இராணுவப்புலனாய்வுப்பிரிவு நன்றாகத்தான் அவரை வேலை வாங்கத் தொடங்கிவிட்டது.

கிழக்கின் அமைதியின்மைதான் கருணாவின் கிழக்குப்பிரதேச மண்பற்றின் வெளிப்பாடா? கிழக்கு மக்கள் அச்சத்திலும், அவலத்திலும் ஆளவேண்டும் என்பதுதான் கருணாவின் இலட்சியமா....? இப்போ தும் அவரையும் அவரது பிரதேச வாதக் கோட்பாட்டில் பொய்மையையும் ஏற்றுக்கொண்டு அவருக்கு "வக்காளத்து" வாங்கி நிற்கும் அரைகுறை அறிவு ஜீவிகள் இதனையும் ஏற்றுக் கொள்கிறார்களா?

"அது சரி ஏதோ கட்சி அமைத்து படையினரின் உதவியுடன் செயற்படப்போகிறாராம் கருணா?" இது என்ன கட்சி?

-"ராசிக்குழு", வரதன் குழு, புளொட் மோகன் குழு.... இந்தமாதிரி ஒன்றா?

-அப்படியானால் பொருத்தமானது தான்

-கைக்கூலியாகி விட்டால் எச மான் கட்டளையிட்டபடி இயங்க வேண்டியதுதானே!

வரதராஜப்பெருமாள், டக்ளஸ் தேவானந்தா, மாணிக்கு தாசன் என்ற பட்டியலில் இடம் பிடிப்பதற்காகத் தானா 'கருணா' இவ்வளவு கூத்தும் ஆடினார்.

-தன்னை நம்பி தன்னுடன் ஓடி வந்தவர்களையே இடையில் கைகழுவி விட்டவரான 'கருணா' யாருக்காக சேரலாம்.. அவர்கள் ஆனந்தசங்கரிக்கே நியமன உறுப்பினர் அந்தஸ்து கொடுக்க விரும்பியவர்கள் அல்லவா?

-எப்படி என்றாலும் நீங்கள் இனி வாழ்நாள் பூரா செய்யப்போவது விடுதலைப்புலிகளுக்கும், தமிழர்களுக்கும் எதிரான செயற்பாடுகளை மட்டுமே...!

-அதை எங்கிருந்து செய்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான்!


***

அலிஸாகிர் மௌலானா உங்களை தானே இராணுவத்தினரிடம் ஒப்படைத்தார் என்னும் உங்களோடு தனக்கு இப்போதும் தொடர்புகள் இருப்பதாகவும் உங்களின் இருப்பை தெளிவாக டக்ளஸ் காட்டுகிறார் அல்லவா?

படைத்தரப்பினர் இன்னமும் உங்களின் இருப்பை மறைக்க நினைப்பதில் அர்த்தம் என்ன உள்ளதாம்....!

'இராணுவத்தை விட்டால் உங்களுக்கு யார் கதி? தென் தமிமீழ மக்கள் நீங்கள் யார் என்பதையும், உங்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பதையும் இப்போது உங்கள் கதையின் இரண்டாம் பாகம் வெளிவந்தவுடன் நன்றாகவே தெரிந்து கொண்டு விட்டார்கள்.

அறநனைந்தவரிற்குக் குளிரென்ன? கூதலென்ன,




# புதிய உபதேசம் பெற்று உய்த்துள்ள சங்கைக்குரிய தேரர்கள்

சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி இந்தப் பழமொழி யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ போதிமாதவனின் போதனைகளுக்கு புறம்பாக பாராளும் பணிக்கு புறப்பட்ட சிறிலங்காவின் அரசியல் கட்சிகளின் கடைக்குட்டியான ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்களான பௌத்த பிக்குகளுக்கு அச்சொட்டாகப் பொருந்துகிறது.

தர்மராஜ்ஜியம் படைக்கப் புறப்பட்ட இந்த சங்கைக்குரிய தேரர்கள் தமது இலக்கு அவ்வளவுக்கு கடினமானதொன்றாக இருக்க மாட்டாது என்றே நம்பியிருந்தனர் ஏனெனில் சிங்கள பௌத்த சமூகத்தில அதியுயர் மரியாதைக் குரியவர்களாக பௌத்த பிக்குகளே விளங்கினர். கிராமங்களின் அசைவியக்கத்தின் மையப்புள்ளியாக பன்சல எனப்படும் விகாரைகளும் மையப்புள்ளியின் இயக்குநர்களாக விளங்கப்படுபவர்கள் இந்த விகாரைகளுக்குப் பொறுப்பான பிக்குகளுமே சிறிலங்காவின் அரச மதமாக பௌத்த அரசியல் யாப்பிலேயே பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதையும் அதனைப் பேணிக்காப்பது அரசின் கடமையெனவும் யாப்பில் வலியுறுத்தப்படிருப்பதுவும் அவர்களது இந்த எதிர்பார்ப்புக்கான அடிப்படையாகும். அத்தோடு தாம் முன்வைக்கும் எந்த விடயத்தையும் தமக்கெதிராக மறுத்து வைப்பது எவருக்கும் சாத்தியமான தொன்றாக இருக்கமாட்டாது என்பதுவும் அவர்களது அதீதமான நம்பிக்கை ஆகவும் இருந்தது.

இதனாலேயேதான் மிகப் பெரும்பாலானோரின் எதிர் விமர்சனங்களையும் புறமொதுக்கி, சிஹல உறுமயவின் திலக்கருணரட்ண சம்பக்க ரணவக்க ஆகியோரது உருவேற்றலுக்கு மயங்கிக்களத்திலே குதித்தனர் அவர்கள். தமது சின்னமான தனது அம்பையும் வில்லையும் விட்டுக்கொடுத்து தமது கட்சியின் பெயரையும் விட்டுக்கொடுத்து தேர்தலில் தாம் போட்டியிடுவதையும் விட்டுக்கொடுத்து முன்னாள் சிஹல உறுமிய செய்த தியாகங்களால் பூரித்துப்போன தேரர்கள் மிகுந்த தன்னம்பிக்கையுடன் தான் களம் புகுந்தார்கள். புதிதாக மாற்றப்பட்ட சங்குச்சின்ன சங்கைக்குரிய தேரர்கள் கிராமங்களின் இதயமான பன்சலகளில் தமது அரசியல் தர்மோபதேசங்களை தொடங்கினர்(தனதுதாடியினை உருவியபடி திலக்கருணரட்ணவும் கண்ணாடிக்குப் பின்னே விழிகளை உருட்டியபடி சம்பிக்கரணவக்கவும் ஓடு மீனோடி உறுமீன் வரும் வரை காத்திருப்பதை இந்த தேரர்கள் சரியாக கணிப்பிட்டிருக்கவில்லை, ஏனெனில் ஒருவருடத்தின் பின் வெற்றி பெறும் தேரர்கள் இராஜினாமச்செய்து முன்னாள் சிஹல உறுமயவி னருக்கு இடமளிப்பது என்பது இரு தரப்பு உடன்பாடாகும்)

ஆனால் பதவிக்கான போராட்டம் என்பது உறவுகள் பண்பாடு விழுமியங்கள் என்பவற்றிற்கும் அப்பாலானவை என்பதை சங்கைக்குரிய தேரர்கள் தேர்தல்



பிரசார காலத்திலேயே அறிந்து கொள்ள நேர்ந்தது. அதேவேளை பதவிப்போதை என்பது முற்றிலும் துறக்கப்புறப்பட்டவர்களுக்கும் உருவேற்ற வல்லது என்பதை மக்களும் அக்காலத்தில் காண முடிந்தது. ஏப்ரல் 4ஆம் திகதி கட்சித் தலைவர்களுக்கான கூட்டமொன்றை தேர்தல் ஆணையாளர் கூட்டியிருந்தார் அக்கூட்டத்திற்கு வருகை தந்திருந்த வண.எல்லவல மேதானந்த தேரா், வண.கொலன்னாவ தேரர் ஆகிய இருவரது முகங்களிலும் பளிச்சிட்ட வெற்றிக் களிப்பினை அவதானித்தவர்களுக்கு தேரர்கள் தமது சங்கையினை இழக்கப்போவதற்கான குறிகாட்டியாகவே அது தோன்றியிருந்தது.

இதனையடுத்த நாட்கள் தேரர்களுக்கு 'காற்று' அதிகம் ஏறியிருந்த காலமாகும். தமக்கான நாடாளுமன்ற ஆசனங்கள் எப்படி அமையவேண்டும் அவற்றின் மீது வெள்ளைத்துணி விரிப்பது யார், சபாநாயகருக்கு தாங்கள் எழுந்து மரியாதை செலுத்த முடியுமா இதற்கு சபாநாயகர் வந்த பின்னரே தாம் சமுகமளிப்பது, இந்தப் பிரச்சினைக்கு தீர்வாகத் தம்முள் ஒருவரையே சபாநாயகராகத் தெரிவு செய்தல் உகந்தது ....எனப் பல்வேறு மனோரதங்களில் மிதந்தனர் சங்கைக்குரிய தேரர்கள்.

ஆனால் பரிதாபத்துக்குரிய தேரர்களுக்கு உலக நடப்பு தெரிந்திருக்கவில்லை, நாடாளுமன்ற அமர்வுக்கு முன்பாக தமது ஒன்பது ஆசனங்களே நாடாளுமன்றச் சமன்பாட்டைத் தீர்மானிக்கும் சக்தியாக விழங்கப்போவதால் தமது எதிர்கால முக்கியத்துவம் குறித்து அதீதமாக கணக்குப்போட்டுவிட்டனர் சங்கைக்

**பு. சத்தியமூர்த்தி**

குரிய தேரர்கள். அதன் விளைவாக அரசுக்கு ஆதரவளிக்கும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையினை நிராகரித்து விட்டு ஒரு பக்கத்துக்கும் தாம் ஆதரவளிக்கப்போவதில்லை. அரசின் நல்ல விடயங்களுக்கு மட்டுமே ஆதரவளிப்போம் என்று அறிந்துவிட்டனர்.

இந்த அறிவிப்புடன் ஐ.தே. கட்சியின் ஆட்சியமைக்கும் கனவு முடிவுக்கு வந்துவிட சந்தான எனப்படும் ஐ.ம.சு.முன்னணி தனது திருவிளையாடல்களைக் காட்டத் தொடங்கியது. இரு பிக்கு எம்பிக்கள் காணாமல் போயினர் பின்னர் ஏப்ரல் 22 ஆம் திகதி அவர்கள் அரசதரப்பு ஆசனங்களில் காணப்பட்டதோடு, சபாநாயகர் தெரிவில் அரச தரப்புக்கு ஆதரவாக வாக்களிக்கவும் செய்தனர்.

சங்கைக்குரிய தேரர்களின் ஒன்றிணைவு உடைக்கப்பட்டு அவர்களும் அரசியல் வாதிகளால் கையாளப்படும் பொருட்களே என்ற படிமம் தெளிவாக வீழ்ந்துவிட்டது. இதன் பின்னான காட்சிகள் நாம் கண்டவையே.

நாட்டின் அதி மரியாதைக்குரியவர்கள அதியுயர் சபையிலேயே புத்தகங்களால் வீசி எறியப்படும் "மரியாதையை" ஏப்ரல் 22ஆம் திகதி பெற்றனர். கடத்தப்பட்டு கட்சிமாறினர். இராஜினாமக் கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்தனர் தாம் அதனைத்தம் சுயவிருப்பின் பேரிலேயே எழுதியதாகவும் தெரிவித்துவிட்டுப் பின் அதை நிர்ப்பந்தத்தின் பேரி லேயே எழுதியதாக நீதிமன்றமும் சென்றனர்.

நீதிமன்றக் கட்டளையைப் பெற்றுக்கொள்ளாமல் ஒளித்துத் திரிந்தனர். இரகசிய வழியால் வந்து நீதிமன்றக் கட்டளைக்கு மாறாகச் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

அதன் விளைவாகவே நாடாளுமன்றின் நடுவே அடியுதையும் பட்டனர் காவியுடை களையப்படனர். கிட்டிபோட்டு நெருக்கப்பட்டனர், வைத்தியசாலையில் படுத்திருந்தபடியே அரசியல் செய்கின்றனர்.

ஆகமிகச் சாதாரணர்களாய் கட்சிகளால் கையாளப்படுபவர்களாய் மக்களின் பரிதாபத்துக்கும் வெறுப்புக்கும் ஆளானவர்களாய் தம்மாலேயே தாம் கெட்டு நிற்கின்றனர்கள் ஜாதிக ஹெல உறுமயவின் சங்கைக் குரிய தேரர்கள்.

இப்போது அவர்கள் பல்வேறு புதிய உபதேசங்களைப்பெற்று விட்டார்கள். பதவிமோகம் என்பது எந்த விழுமியத் தையும் மீறியது என்பதையும் அதற்குள் இறங்கு பவர்கள் தமது அந்தஸ்தை இழந்து போகவே நேருமென்பதையும் அனுப வபூர்வமாக உணர்ந்துள்ள சங்கைகுரிய தேரர்கள், தற்போது தாம் அரசுக்கு எதிராக ஒரு போதும் செயற்படப்போவதில்லை எனச் சரணாகதியடைந்தும் விட்டனர்.

இதைத்தான் "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி" என ஆரம்பத்திலேயே குறிப்பிடப்பட்டது. யாரும் இருக்குமிடத்தில் இருக்கும் வரை மட்டுமே சௌக்கியம் அல்லவா?



## மதவடி டயிலர்

யாழ்ப்பாணம் கல்வியறிவுக்கு பேர் போன மண் பாருங்கோ...! மூளை வளம் தான் யாழ்ப்பாண மக்களின் மூலவளம் என்று எல்லோரும் பெருமையோடு புகழுவினம்.... 'பிச்சைபுகினும் கற்கை நன்றே' என்ற முதுமொழியை ஒரு இலட்சியமாகவே கருதி வந்தவை யாழ்ப்பாணத்துச் சனம்.....

'இப்ப அதெல்லாம் பழங் கதையாய் போயிடுமோ எண்டபயம் வந்திட்டுது பாருங்கோ.... என்ன பிடிச்சுதோ பருங்கோ. கண்நூறு பிடிச்சது போல யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் சீரழியத் தொடங்கிட்டுது போல கிடக்கு....

இப்பத்தைய குடாநாட்டு மாணவர்களிடையே கல்வி மீதான பிடிப்புக் குறைஞ்சு வருகிறது. எண்டு கதையடிபடுகுது.... போர், வெளிநாட்டு மோகம், அந்நிய வருமானம், அளவற்ற ஆடம்பரம்... பொழுது போக்கென்ற பெயரில் உள்நுழையும் கலாசார சீரழிவு ஊடகங்கள், எனப்பல்வேறு புறத்தாக்கங்கள் எங்கடை பிள்ளைகளை நாலா பக்கமும் திசை தடுமாறி அலையவைக்குது பாருங்கோ...!

ஆரிட்டைச் சொல்லுறது.... ஆரை நோகிறது... மாணவர்கள் தான் அப்படியெண்டால் ... பாடசாலைகள், பல்கலைக்கழகம் கல்வியற்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி, நுண்கலைக் கல்லூரி என ஒவ்வொன்றைப் பற்றியும் வந்துகொண்டிருக்கும் கதைகளைக் கேட்டால் தலை வெடிக்குது பாருங்கோ....'

'உதையெல்லாம் பொய்யென அதிகாரத்தில் உள்ளவர்கள் சமாளிக்கப் பார்க்கலாம்... ஆனால் உண்மை சுடும் பாருங்கோ. எல்லாத்தையும் பதவியாலும், அதிகாரத்தில் உள்ளோரின் செல்வாக்காலும் எத்தனை நாளைக்கு மூடி மறைக்க முடியும்.

கல்விசார் சமூகத்தவர், துறைசார் அறிஞர்கள் கலாசார சீரழிவுக்கு வித்திடுபவர்களாக, பண்பாட்டு சீரழிவுக்கு பாதுகாவலர்களாக இருந்தால், மாணவ சமூகம் மட்டுமல்ல நாட்டின் எதிர்காலமே நாசமாகி விடும். இதை சம்பந்தப்பட்டவை புரிந்து கொண்டு நடந்தா கௌரவமாக இருக்கும்....

இப்படி எழுதிட்டனே யென்று சீறவோ சினக்கவோ வேண்டாம் ஆறஅமர நெஞ்சைத் தொட்டு யோசியுங்கோ... உண்மை நிறைந்த உங்களைச் சுடும்... என்னவோ சொல்ல வேண்டும் போலையிருந்தது சொல்லீட்டன்..."

நாற்றிசை நடப்புகள்

# அடுத்த தசாப்தத்தை நோக்கி அமெரிக்க இராணுவம்



உலகளாவிய அரசியலில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி வரும் வல்லரசுகள் தமது நலன்களை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. எந்தவொரு அரசின் மக்கள் கூட்டமும் முழு உலகத்திலும் ஏற்படும் மாறுதல்களை புரிந்து கொள்ளாமல் தமது அரசியல் பொருளாதார இராணுவ இருப்புக்களை உருவாக்க முடியாது. தமது புரட்சி மட்டுமல்லாது பாரிய சர்வதேச சக்திகளதும் பிராந்திய சக்திகளதும் நலன்கள் அந்தளவிற்கு விரிவடைந்துவிட்டன. பொருளாதார சுரண்டலை மூலதந்திரமாக கொண்ட சர்வதேச அரசியல் பகுதி பகுதியாக உலகத்தை கூறுபோட்டு பொருளாதார அரசியல் நலன்களை அடைய விரும்புகின்றன. எனவே முடிந்த வாரத்தில் நிகழ்ந்த சர்வதேச விவகாரங்களின் தொகுப்பை பரிசீலிப்போம்.

அடுத்த பத்து ஆண்டுகளில் தனது இராணுவ ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்யவும் நவீனமயப்படுத்தவும் அமெரிக்கா நூறு ஆயிரம் கோடி டொலர்களை செலவு செய்ய திட்டமிட்டுள்ளது என்ற செய்தி பரபரப்பையும் அதிர்ச்சியையும் உலகத்திற்கு ஏற்படுத்தியிருக்கும். அடுத்த பத் தாண்டுகளில் உருவாக்கப்படும் கொள் வனவு செய்யப்படும் இராணுவ ஆயுதங்களும் அடுத்துவரும் 20 ஆண்டுகளுக்கு உலகத்தை அச்சுறுத்தப் போது மானதாக அமையலாம். அல்லது திடீரென ஒரு இராணுவ மாறுதலை உலகத்தில் ஏற்படுத்த வழிவகுக்கலாம். எது வாயினும் இராணுவமும் ஆயுதமும் உலகத்தை நிர்ணயிக்கும் சக்தி பெற்ற தாக எப்போதும்போல் அல்லாமல் இனி வரும் காலங்களிலும் தொடரப் போகின்றது என்பது தெளிவாகின்றது.

## மேற்காசியாவில் அமெரிக்கர்

மேற்காசியாவின் அர்சியலில் மீண்டும் சதாம்உஷைன் உச்சரிக்கப்படும் பெயராக மாறிவருகிறது. ஈராக்கின் முன்னாள் சனாதிபதியான சதாம் அமெரிக்காவின் கைதியாக இருக்கும் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாக ஈராக்கின் இடைக்கால அரசு அறிவித்தது. சதாமுடன் ஈராக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவவீரர்களும் ஈராக்கிய அரசிடம் அமெரிக்கா கையளித்து விடும் என்றும் விசாரணைகளிற்கு அவர்கள் முகம்கொடுக்கவேண்டி வரும் என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.இதே வேளை சதாம் உஷைனை அமெரிக்கா தொடர்ந்து வைத்திருக்க முடியாதென சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அறிவித்துள்ளது. போர்க்கைதிகள் உரிய குற்றச்சாட்டின்றி கைது செய்தபின் தொடர்ந்து சிறையில் வைத்திருக்க முடியாதென சார்வதேச சட்டவிதிகள் கூறுகின்றன. அதனால் சதாமுவும் அவருடன் கைது செய்யப்பட்ட ஈராக்கியரும் குற்றத்தை எதுவென அமெரிக்கா பகிரங்கப்படுத்த வேண்டும். அல்லது விடுவிக்கப்படவேண்டும். என்ற அம்சம் பரபர்ப்பாகப் பேசப்பட்டது.

இதன் மறுபக்கம் சர்வதேச அரங்கை ஆச்சரியப்படுத்தியது அதாவது அமெரிக்க சனாதிபதி அவ்வாறு உடனடியாக சதாமை ஒப்படைக்க முடியாததெனவும் சதாமுக்கு அல்கொய்தா தலிபான் போன்ற அமைப்புக்களோடு தொடர்பிருந்ததாகவும் அதற்கான வலுவான ஆதாரங்களை விசாரணை நடத்தியவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறினார். குறிப்பாக சதாமுக்கும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புக்களுக்கும் தொடர்பு இருந்ததாக தமக்கு தெரியவரவில்லை என்று விசாரணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இதனைக் கண்டித்ததுடன் புஷ் அத்தகைய உறவை கண்டு பிடிக்கமுடியாத விசாரணைக்குழு எனவும் கூறியிருந்தார்.உயிரியல் ஆயுதங்கள் ஈராக்கிடம் உண்டு என பொய்யுரைத்த சனாதிபதி சதாமை அல்கொய்தாவின் தலைவர் என்றோ செப்ரெம்பர் தாக்குதலை நிகழ்த்தியவர் சதாம் என்றோ கூறினாலும் உலகம் ஆச்சரியப்பட தேவையில்லை. இதைவிட இன்னோர் அதிர்ச்சியும் சதாமில் பரிமாற்றம் தொடர்பான காலத்தில் பேசப்பட்டது. அது ரஷ்ய சனாதிபதி புட்டினின் அரசியல் நகைச் சுவையாகும். செப்ரெம்பர் தாக்கு தலுக்குப் பின்பு ஈராக் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த பல தடவை திட்டமிட்டதாகவும் அது பற்றிய தகவல் ரஷ்யாவின் புலனாய்வு அமைப்புக்கு கிடைத்ததெனவும் அதனை அப்போது அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தியதாகவும் கூறியிருந்தார். சதாமுடன் மிக நெருக்கமான உறவை கொண்டிருந்த நாடு ரஷ்யா ஆகும் சதாம் ஈராக் நகரப் பகுதியில் அமெரிக்க கூட்டணிப்படைகளை எதிர்த்து தாக்காததிற்கு பிரதான காரணங்களில் ஒன்றாக புட்டினும். ரஷ்யாவின் ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளும் காரணமாக இருந்தன என்ற செய்தி அவ்வப்போது வெளியாகியிருந்தன இப்படியான நெருக்கத்தையும் உறவையும் கொண்டிருந்த புட்டின் அவ்வாறு கூறியது அமெரிக்க ஜனாதிபதியை பாதுகாக்க என்பது யாரும் புரிந்துகொள்ளக்கூடிய விடயம். அரசியல் என்பது குத்துக்கரணம். ஆனால் புட்டின் இப்படியான விடயத்திற்கு குத்துக்கரணம் அடித்ததே அதிர்ச்சியான விடய மாகும். எனவே சதாம் மீண்டு மொரு அரசியல் சதுரங்கத்தில் நகர்த்தப்படும் காயாக மாறியுள்ளார். சதாமை பயன்படுத்தி அடுத்த கட்ட அரசியல் நகர்வை மேற்கொள்ள அமெரிக்கா முயன்று வருகிறது. புட்டினும் புஷ்சும் தமது நாடுகளின் நலன்களில் ஒன்றாக விளங்கும் ஈராக்கினை இழப்பதற்கு தயாராக இல்லை என்பது இதனூடாகப் புலனாகிறது.

அடுத்து இடம்பெறும் மிக முக்கியமான விடயம். அமெரிக்க பிரஜைகள் மேற்காசியாவில் எதிர்நோக்கும் நெருக்கடியாகும். கொலை கடத்தல் குண்டுத் தாக்குதல் என பல விடயங்கள் மேற்காசியா எங்கும் நிகழ்கின்றன. இது மிகப்பெரும் அச் சுறுத்தலாக விளங்குகிறது. அமெரிக்க பிர ஜைகள் எவரும் ஈராக்குக்கோ சவுதி அரேபியாவுக்கோ செல்ல முடியாதென்பதுடன் அமெரிக்க ஆக்கிரமிப்புத்தன்மையின் பலம் படிப்படியாக நழுவத் தொடங்கி விட்டது. அமெ ரிக்கா மீதான வன்முறையை நியா யப் படுத்துவதை விட அமெரிக்க அரசியல் பொருளாதார நலனில் அது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தப்போகின்றது என்பதையே நோக்குதல் அவசியம். முழு

**ஐங்கரன்**

மேற்காசிவிலும் பரவுமாயின் அமெரிக்க ஆக்கிரமிப்பில் எந்தப் பயனும் அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு ஏற்படப்போவதில்லை. மாறாக ஏற்கெனவே கொதிப்படைந்துள்ள அமெரிக்கா மீதான வெறுப்பு மேலும் அதிகரிக்கவே செய்யும்.

மேலும் ஈராக்கில் வகை தொகையின்றி தற்கொலைத் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளது. அமெரிக்கர்களின் கூட்டணிப் படைகளின் இருப்பு மேலும் கேள்விக்குரியதாக மாறிவருகிறது. ஈராக்கியர் மட்டும் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்படவில்லை. அமெரிக்கரும் அதன் கூட்டணிப் படைகளும் அழிக்கப்படுகின்றனர். இஸ்லாமிய பயங்கரவாதிகள் என கருதுபவர்கள் அமெரிக்கரின் அரசியல் பொருளாதாரத்தை அழிப்பதோடு படிப்படியாக பிரதேசங்களை மீளவும் கட்டுப்படுத்தும் நிலையை அவ்அமைப்புக்கள் ஏற்படுத்தி வருகின்றன. இடைக்கால ஆட்சியை கையளிப்பது பற்றிய உரையாடல் ஆரம்பத்திலிருந்து அதன் அதிகாரிகளை இலக்கு வைத்துத் தாக்கப்படு கின்றனர். எனவே அமெரிக்கர்கள் எதனை கூறினாலும் அமுல்படுத்த முயன்றாலும் மேற்காசியாவின் அரசியல் பரிமானம் அவற்றை சாத்தியப்படுத்தும் சூழலை ஏற்படுத்தாது.

## ஐரோப்பிய யூனியன் தேர்தல்

ஐரோப்பிய யு,னியனுக்கான பாராளுமன்றத் தேர்தல் அதிக எதிர்பார்க்கையை கொண்ட அரசியலாக அமைந்திருந்தது. நடந்து முடிந்த தேர்தலில் தெளிவான ஓர் அவதானிப்பு நிகழ்த்தப்பட்டது. அது ஐரோப்பா எங்கும் ஆளும் கட்சிக்கு மக்கள் வாக்களிக்காது எதிர்க்கட்சிகளை வெற்றி வாய்ப்புக்குரியதாக மாற்றியுள்ளனர். இதனை முதன்மைப் படுத்திய அமெரிக்க ஊடகங்கள் ஐரோப்பிய யு,னியனின் ஐக்கியத்தை ஐரோப்பிய மக்கள் விரும்பவில்லை என பிரச்சாரப்படுத்த ஆரம்பித்துவிட்டன. ஆனால் அறிவு பு,ர்வமாகப் பார்த்தால் ஐரோப்பியர் சரியான முடிவையே செய்துள்ளனர். எல்லா நாடுகளிலும் எதிர்க் கட்சிகளை ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகளாக அனுப்பினால் கூட்டுத் தன்மை ஐரோப்பாவுக்குள் வலுவடைவதுடன் அக்கட்சிகளது அரசியல் நடவடிக்கையையும் ஐரோப்பா பகிர்ந்து கொள்ளலாம் என்பதாகும்.


ஐரோப்பிய யு,னி யனின விரிவாக்கம் (25நாடுகள்) தொடர்வதோடு மிகப் பெரும் வல்லரசாக பொருளாதாரத்தில் மாறி வருகின்றது இம் மாற்றம் ஐரோப்பாவின் எதிர்காலத்தை மட்டுமல்ல முழு உலகத்தின் எதிர் காலத்தையும் மாற்றக் கூடிய வலுவைக் கொண்டிருக்கும். இவற்றை விட இத்தேர்தல் இன்னோர் அம்சத்தையும் தொட்டுக்காட்டியுள்ளது இடதுசாரிகட்சிகளின் கொள்கைகளையும். அவைசார்ந்த போக்குகளையும் ஐரோப்பிய மக்கள் நினைவு படுத்தியுள்ளார்கள் என்பதை உணரக் கூடியதாக உள்ளது. ஆனால் அத்தகைய சித்தாந்தம் அதே அர்த்தத்தில் எத்தனை நாடுகளின் அரசியல் கட்சிகளிடம் காணப்படுகின்றது என்பதே பிரச்சினையாகும். இது மேலும் அமெரிக்காவின் பலத்துக்கு சவாலான ஓரம்சமாகும். இத்தகைய விஸ்தரிப்பு மேலும் தொடர்ந்து கிழக்கு ஐரோப்பா முழுவதையும் இணைக்குமாயின் அமெரிக்கா வறிய நாடுகளின் ஒத்துழைப்புடன் எதனையும் சாதிக்க முடியாத அரசாக மாறும்.

## அணுவாயுத விவகாரம்

அணுவாயுத பரவல். மற்றும் தடை தொடர்பான அமையத்தின் (NPT, CTBT) தொழில்பாடு நெருக்கடிக்குள் சிதைந்தாலும் அமெரிக்கா என்ற தனியமைப்பு அணுவாயுதத்தின் விஸ்தரிப்புக்கு எதிராகப் போராடிக்கொண்டே இருக்கின்றது. தற்போது வடகொரியா. ஈரான் தொடர்பான உரையாடல் சூடுபிடித்துள்ளது. வியன்னாவில் நடந்த அணுப்பரிசோதனை தொடர்பான உரையாடல் மாநாட்டில் ஈரான் மேற்கொண்டுவரும் முயற்சிக்கு கடும் கண்டனம் தெரிவித்திருப்பதுடன். பொருளாதார தடைபற்றிய மிரட்டலும் விடப்பட்டுள்ளது. ஈரானின் அணுவாயுதத் திட்டம். இரகசியமான அணுப் பரிசோதனைக்கான முயற்சி பற்றி கண்டித்ததுடன். வடகொரியாவின் அணுவாயுத விவகாரம் தொடர்பாக நீண்ட பேச்சுவார்த்தை நிகழ்கிறது. ஏறக்குறைய ஆறுகட்டப் பேச்சக்களில் வடகொரிய அணுவாயுதம் பற்றி அமெரிக்கா. யப்பான் . தென் கொரியா. சீனா. வடகொரியா என்பன ஈடுபட்டு வருகின்றன. இதில் பிரதான பகைநாடுகள் அமெரிக்காவும் வடகொரியாவுமாகும். இதே போன்றுதான் ஈரானும் அமெரிக்காவும். ஒருவகையில் அமெரிக்க நலனுக்கு எதிரான அணுவாயுதத்திட்டத்தை முறியடிப்பதே அதன் அச்சுறுத்தல்களின் பின்புலக் கருவிகளாகும். தனிப்பட்ட அரசியல் போட்டிகளை கருத்தில் கொண்ட அணுவாயுத விவகாரம் அதீதமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்காவின் அணுவாயுதத் திட்டம் பற்றி வேறு எந்த அரசும் கேள்வி எழுப்ப முடியாத வங்குரோத்து அரசியல் நிலை நிலவுகிறது. அல்லது அமெரிக்காவின் தோழமை நாடான இஸ்ரேலின் அணுவாயுதத் திட்டம் பற்றிய உரையாடல் எதுவும் நிகழாத வரை யில் வடகொரியா ஈரான் விவகாரம் அமெரிக்க அரசியல் நலனை நோக் காகக் கொண்டதாகும். எனவே இம் முரண்பாடு தீர்க்கப்படுவது என்பதிலும் பார்க்க அழிக்கப்படும் சூழல் மட்டுமே கொண்டிருக்கிறது.

எனவே தொகுத்து நோக்கும் போது அமெரிக்காவின் இராணுவ விஸ்தரிப்புக் கொள்கை அடுத்துவரும் பலதசாப் தங்களை நோக்கி தயார் செய்யப்படுகின்றது என்பதும் அதற்கு தடையான அரசுகள் மீது அழுத்தங்கள் அதிகரிக்கின்றதையும் காணமுடிகின்றது. இதனால் முழு உலகத்திலும் இராணுவத்தின் வலிமையும். ஆயுததளபாட உற்பத்தியும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படப் போகின்றது. சிறிய ஆயுதங்களைக் காட்டிலும் பாரிய ஆயுதங்களின் வருகை எல்லா நாடுகளிலும் அதிகரிக்கும் என்பதையே அமெரிக்க கொள்கைப்போக்கு உணர்த்துகிறது.. ●



அவசர உதவி



# நேர்நோக்கு

"ஐக்கிய தேசியக் கட்சியே எமது பிரதான எதிரி எனவே எதிர்காலத்தில் எமது பிரதான எதிரி யாரென்பதை இனங்கண்டு அவர்களை நாம் தாக்குவோம். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசையோ, இலங்கைத்தொழிலாளர் காங்கிரசையோ ஹெல உறுமயவையோ இனிமேலும் தாக்கும் திட்டம் எமக்கில்லை"

இவ்வாறு கூறியிருக்கிறார் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்தின் ஊடக அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான மங்கள சமரவீர இதுவரைகாலமும் செய்துவந்த அதிலே முக்கியமாக ஐக்கிய தேசியக்கட்சியினர் முன்னர் செய்த ஊழல்கள் அதிகாரதுஷ் பிரயோகங்கள் தொடர்பாக அரசு ஊடகங்கள் அம்பலப்படுத்த வேண்டும் அவற்றிலே கவனம் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

## அரச ஊடகங்கள் அனுமதிக்குமா?



அமைச்சர் இவ்வாறு கேட்டுக் கொண்டால் தான் அரசஊடகங்கள் அவ்வாறான பிரச்சாரத்தில் ஈடுபடும் என்றில்லை. ஏனெனில் அரச ஊடகங்கள் அரசாங்கம் செய்யும் சாதனைகளை வெளியிடுவதைவிட எதிர்க் கட்சிகளை அவதூறு செய்வதை அல்லது அமைச்சர்கள் கூறுவதைப் போல எதிரிகளைத் தாக்குவதையே தமது கடமையாகக்கொண்டுள்ளன. இதிலே அரசாங்கம் உண்மையிலேயே பெருமைப்பட்டுக்கொள்ளக்கூடியதாக எதையும் சாதித்து விடவில்லை என்பது அவை சாதனை களைக்கூறாமைக்குக் காரணமாக இருக்கலாம்.

1977 ஆம் ஆண்டில் பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தனது 17 வருடகால ஆட்சியின் இறுதிக்கட்டப்பகுதியில், குறிப்பாக பிரேமதாசவின் ஆட்சிக்காலப் பகுதியில் ஊடகங்களின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியது அரச ஊடகங்கள் ஆட்சிக்குச்சார்பான பிரசாரங்களில் ஈடுபட்டிருந்த போதும் ஏனையவை ஆட்சிக்கு ஏதிரான பிரசாரங்களிலேயே ஈடுபட்டன.

இந்தப்பிரசாரங்கள் தான் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசியலில் ஈடுபடவும் ஆட்சிக் கட்டிலில் ஏறவும் காரணமாக இருந்தன. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சுற்றி அக்காலப்பகுதியில் காணப்பட்ட புத்திஜீவிகள் குழாத்தை எடுத்துக்கொண்டால் இவர்களில் அரைவாசிப் பேருக்கு மேல் ஊடகங்களுடன் தொடர்புடையவர்களாகவே இருந்தனர்.

இவர்கள் சந்திரிகா குமாரதுங்கவின் கல்வித்தகைமையில் நம்பிக்கை வைத்து பெரும் எதிர்பார்ப்பொன்றை வைத்திருந்தனர். இறுதியில் இரண்டாவது தடவையாக சனாதிபதி சந்திரிகா பதவியேற்ற போது இந்த புத்திஜீவிகள் குழாம் காணாமல் போயிருந்தது மட்டுமல்ல இவர்களின் முக்கியமானவர்களாய் இருந்த விக்டர் ஐவன், லசந்த விக்கிரமதுங்க ஆகியோர் மீது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கியமான உரை ஒன்றின்போது பலகுற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ச தாங்கள் இவ்வாறான ஊடகவியலாளர் குழாத்தை வீணாகப் பகைத்துக்கொண்டது கட்சிக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தெரிவித்தார்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது கட்சியினரின் கருத்துக்களைக் கூடக் கேட்கும் வழக்கமுள்ளவரல்ல. அதனால் அவர் இதனைப் பொருட்படுத்தவில்லை.

அவரது ஆட்சிக்காலத்தில் ஆறு தேர்தல்களை நடத்தி அந்த ஆறிலும் வெற்றி பெற்றதாகப் பெருமை பேசுவது வழமை. ஆனால் அவற்றின் போது அவர் கையாண்ட தந்திரோபாயங்களில் ஒன்று படையெடுப்பு இரண்டாவது ரணில்விக்கிரமசிங்கவிற்கு எதிராக பட்டலந்த வதைமுகாம், ஐ.தே.க.வுக்கு எதிராக யாழ் நூல் நிலைய எரிப்பு இவை தொடர்பாக அவர் ஆக்க பூர்வமாக எதுவும் செய்யாவிடினும் போரில் வெற்றிப்பிரசாரமும் ரணில் மீது சேறுபூசும் பிரச்சாரம் தவறாது செய்து வந்தார். நூல் நிலையத்திற்கு புத்தகமும் செங்கல்லும் சேர்ப்பதாகப் பிரசாரம் செய்வார். ஆனால் நடைமுறையில் எதுவுமே இராது.

அதாவது அவர் போரில் வெற்றிபெறவும் இல்லை ரணிலை பட்டலந்தை வதை முகாம் விடயத்தில் குற்றவாளியாக நிரூபித்து விடவுமில்லை, நூல்நிலையத்திற்கு பெரிதாக எதுவும் செய்து விடவும் இல்லை வெறும் பிரச்சாரம் மட்டுமே அதிலும் அரசு ஊடகங்களூடாக செய்யமுடிந்தது.

யுத்த காலத்தில் புலிகளைப் பயங்கரவாதிகளாகவும் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு வருபவர்களாலும் அவரால் பிரச்சாரம் செய்ய முடிந்ததே தவிர அவரால் அதனை செயலில் காட்டமுடியவில்லை.

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களூடாக பக்கச்சார்பான பிரசாரங்களை அவர் வெட்கதுக்கமின்றி நடத்திவந்தார். அவரைப் பொறுத்தவரை தேர்தல் வெற்றிபெற ஊடகத்துறைக்குள் இருக்க வேண்டுமென்பது அடிப் படையான ஒரு விடயமாகும்.

இறுதியாக ஜே.வி.பி. யுடனான கூட்டு ஏற்பட்டதும் அவர் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து பறித்துக்கொண்ட மூன்று அமைச்சர்களில் ஒன்று ஊடகத்துறையாகும் ஏனெனில் மீண்டும் ஒரு தேர் தலைச்சந்திக்க அவருக்கு அத்துறை அவசியமாக இருந்தது.

இப்போது சிறுபான்மை அரசாங்கமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பொறுப் பேற்றுள்ளது ஊடகத்துறை அவர்வசமுள்ளது முதல் தாக்குதல் ஊடகங்களூடாக பௌத்த பிக்குகளுக்கு எதிராகமேற்கொள்ளப்பட்டது. பின்னர் ஐ.தே.கவினரின் ஊழல் என்று கூறி கூரைத்தகடு விவகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டது. பின்னர் ரவூப் ஹக்கீமை வழிக்குக் கொண்டு வர அவரது தனிப்பட்ட நடத்தை தொடர்பான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை இன்றைய சமாதான நடவடிக்கைகளின் பங்காளிகளான புலிகள் மீது அவர்களே சுட்டிக் காட்டுமளவிற்கு விசமப்பிரசாரம் மேற் கொள்ளப்பட்டது.

இப்போது, எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து விட்டன அரசாங்கம் தனது உறுதித்தன்மையை நிரூபிக்க சிறிய எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கூடப் பெறமுடியாத அளவுக்கு முர ண்பாடுகள் வளர்க்கப்பட்டுள்ளது. குறைந்தது பிரேரணைரீதியாகவேனும் எவரதும் ஆதரவைப் பெற முடியாத முரண்பாடுகள் இப்பிரசார நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ளன.

இப்போது சந்திரிகா ஆட்சியின் முக்கிய குறிக்கோள் அரசியலமைப்பு மாற்றமாகும் இதற்கு சிறிய எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஆதரவளித்தாலும் போதாது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க.வின் ஆதரவு தேவை. ஆனால் அதற்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகள் எதையும் சந்திரிகா அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

முக்கியமாக அவ்வாறான ஓர் ஒருமைப்பாடு ஏற்படுவதற்கான சூழல் உருவாக்கப்பட அரச ஊடகங்கள் அனுமதிக்கப்போவதில்லை.

**வேலவன்**

### காலை இழக்கும் செயல்



கண் மண் தெரியாமல் கண்ட இடங்களிலும் கால்பதிப்பது பாதத்தோடு காலை இழக்கும் செயல்.


போரும் இனவாதமும் தந்த அவலங்கள் இன்னும் தீரவில்லை எனும் சூழ்நிலையில் சுடுகுழல்கள் மௌணித்த இரு ஆண்டுகள் கடந்தபின்னும் துயரம் தீராதவாழ்க்கை எங்கள் வாழ்வு. இந்த மண்ணில் அமைந்திருக்கிறது. அச்சம் துறந்த ஒரு இயல்பு வாழ்வு இன்னும் கிட்டவில்லை என்பதற்கும் அப்பால் தங்கள் சொந்தவீடுகளுக்கு திரும்பமுடியாது இன்னும் நலன்புரிநிலையங்களின் ஒழுகும் கூரைகளின்கீழ் வாழ்வைத் தொடர்கின்றனர். தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பமுடியாதபடி தடுத்துநிற்கும் உயர்பாதுகாப்புவேலிகள் இன்றும் பலப்படுத்தப் படுகின்றன.

சொந்த வீடுகளுக்குத் திரும்பியவர்கள், தங்கள் வீடுகளை அமைத்துக் கொள்ளவும், தமது வேர்களை நிலத்தில் பதித்து (Puttinq down roots) வாழ்வை நிலை நிறுத்தக்கூடிய பொருளாதார பாதுகாப்பை ஏற்படுத்தி பாதுகாப்பும்.. கௌரவமும் மிக்க வாழ்வை மீள்கட்டுமாணம் செய்வதற்கான (Rebuildinq lives in safty and dignity) ஏற்பாடுகளும் இன்னும் ஏற்ப



## உலக அகதிகள் தினமும் ஈழத்தமிழர் வாழ்வும்

டுத்தப்படவில்லை. இந்த நிலையில் கடந்த யூன்20இல் 'உலக அகதிகள் தினம்' எமது மண்ணில் கொண்டா டப்பட்டது. காலையில் இன்னும் நிறைவுசெய்யப் படாத தேவைகளையும் எங்கள் மீது காட்டப்படும் அக்கறை யின்மையையும் உலகுக்கு உணர்த்தும் ஊர்வலம் ஒன்று பிற்பகல் யூ.என். எச்.சீ.ஆர் இனால் நடத்தப்பட்ட சைக்கிள் ஓட்டப்போட்டி ஆண்களுக்கானது மல்லாவியில் இருந்து கிளிநொச்சிக்கும், பெண்க ளுக்கானது மாங்குளத்தில் இருந்து கிளிநொச்சிக் குமாக நடத்தப்பட்டது. மல்லாவியில் ஆரம்பிக்கப்பட்ட சைக்கிள் ஓட்ட நிகழ்வின் ஆரம்பத்தில் போட்டியின் ஒழுங்கமைப்பாளரும், யூ.என்.எச்.சீ.ஆர். பணியாளருமான






செல்வி ஜேய்பார்க் (Jai park) மல்லாவியிலிருந்து கிளிநொச்சிக்கு இப்போட்டி ஏற்படுத்தப்பட்டது. இடம்பெயர்ந்து மல்லாவிப்பகுதியில் தஞ்சமடைந்திருந்த மக்கள் கிளிநொச்சிக்கு மீண்டும் திரும்பியதன் அடையாளம் எனவும், சைக்கிள் ஓட்டம் என்பது வலிமையுடன் மீளத் திரும்பியது என்பதைக் குறித்து நிற்கிறது எனவும் தெரிவித்திருந்தார்.

யூ.என்.எச்.சீ.ஆர்.என்பது ஐ.நா ஸ்தாபனத்தால் 1950இல் 1.2 மில்லியன் ஐரோப்பியர்கள் இரண்டாம் உலகயுத்தம் காரணமாக வீடு இழந்து நின்ற போது அவர்களுக்கு உதவு முகமாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் தொடர்ந்த பிராந்திய, உள்நாட்டுப்போர்களால் இதன் செயற்பாடு இன்றுவரை தொடர்கிறது. என அதன் அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. கௌரவமும் பாதுகாப்பும்மிகுந்த மீள்வாழ்வை அளிப்பதற்கு உதவுவதன்மூலம் "அகதிகள்" என்ற சொல்லை உலகின் அகராதிகளில் இருந்து அகற்றுவதே இதன் இலக்காகும் என குறிப்பிடப்படுகிறது.

உலகமெங்கும் அகதிகள் பரந்து வாழ்ந்த போதும் அகதிகள் நிறம், இனம், கண்டம் எனும் பாகுபாடுகள் காட்டப்பட்டனர் எனும் குற்றச்சாட்டுகளும் கடந்த கால வரலாறுகளில் பதிவாகியிருப்பதை வேதனையுடன் நினைக்க வேண்டியுள்ளது.

ஆசிய ஆபிரிக்க அகதிகளை விட ஐரோப்பிய கொசோவா அகதிகள் நன்கு பராமரிக்கப்பட்டனர். ஒரு காலத்தில் ஆபிரிக்காவில் நாள் ஒன்றுக்கு பட்டினி, மற்றும் மருத்துவ வசதிகளின்றி 6000 அகதிகள் மரணித்த சம்பவங்களும் உண்டு. ஒரு இலட்சம் ஆபிரிக்கர்களுக்கு ஒரு மருத்துவரின் பராமரிப்பு மட்டுமே கிடைக்க700 கொசோபியர்களுக்கு ஒரு மருத்துவரின் பராமரிப்பு கிடைத்திருக்கிறது. கொசோபிய அகதிகளுக்கு உதைபந்தாட்டத் துக்கான வசதி சிறுவர்களுக்கான கணனி விளையாட்டு, சுத்தமான தண்ணீர், இலவச மொபைல்தொலைபேசி என வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது. இவைகள் ஆசிய, ஆபிரிக்க கறுப்புத் தோல்மனிதர்களுக்கோ எட்டாத விடயங்களாக இருந்தன. இன்று எட்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் உலகின் பல இடங்களிலும், உள்ளூர் அகதிகள் என்ற அடையாளத்துடன் அலைகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பும், கௌரவமுமான வாழ்வு உலகத்தால் இன்னும் உறுதி செய்யப்படவில்லை என்பது துயரம்மிகுந்த உண்மையாகும்.

**அ. அன்பழகன்**

# நறுக்கென...



## திறந்துவிடப்பட்ட பூதம் அம்மாவை ஆட்டிப்படைக்கும் கோலம்

ஒற்றுமையில்லாத கட்சிகள் உறுதியற்ற கொள்கைகள் நேர்மையற்ற சுயநலத்தலைமைத்துவம். அதிகாரத்தைப் பலப்படுத்தும் இலட்சியம் சொந்த நலங்களுக்காக தேசிய நலன்களை புறம் தள்ளும் துரோகத்தனம்.... ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அடிப்படைக் கோட்பாடுகளாகி விட்டன. என்பதை அதன் இருமாதகால தொங்கு பாராளுமன்ற ஆட்சி நடவடிக்கைகள் தெட்டத்தெளிவாக்கி வருகின்றன.

நினைத்தது ஒண்ணு நடந்தது ஒண்டு அதனாலே முழிக்குதே அம்மா பெண்ணு" என்ற பழைய கினிப்பாடல் இன்று சந்திரிகாவிற்கு மிகவும் பொருத்தமானஒன்றாகிவிட்டது.

ஜே.வி.பி.யினர் தமது கணவரைக் கொன்ற கொலையாளிகள் என்பதை வெளிப்படையாகவே கூறி குற்றஞ்சாட்டிய பின்னரும்அரசியல் ஆதாயங்களுக்காக அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைத்ததன் ஆபத்தை அம்மணி இப்போது நன்றாக உணர்ந்து செய்வதறியாது விக்கித்து நிற்கிறார்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி" பெருமளவில் மக்கள் ஆதரவைப் பெறமுடியாது கிடந்த ஜே.வி.பி.க்கு தனது முட்டள்த்தனமான கூட்டணித்திட்டத்தால் அசுர பலத்தை வழங்கி விட்டு அம்மா முழிக்கும்முழி பரிதாபகரமானது.

சாடிக்குள் மூடப்பட்டிருந்த பூதத்தை திறந்துவிட்டு சிம்மாசனம் ஏற்றிவிட்டு... இப்ப அந்த பூதம் தன்னையே ஆட்டிப்படைக்கும் அவலத்தை ஜீரணிக்கமுடியாத நிலையில் அந்தப்பூதத்தை எப்படிச்சமாளிப்பது என்று வழிதெரியாது திணறிக்கொண்டிருப்பதாக அரச உள்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசு இப்போது ஜே.வி.பி.யின் செடில் பிடிக்கு ஏற்ப காவடி ஆடவேண்டிய நிலை... இந்தப்போக்கில் இன்னும் சிலமாதங்கள் போனால் இந்த ஜே.வி.பி.ப்பூதம் என்னென்னவெல்லாம் செய்யுமோ என்ற அச்சத்தில் அலமலந்து இருக்கும் அம்மணியார் இந்தக்கூட்டணிக்கு காரணமான தனது அருமைத்தம்பி அனுராவையும், அமைச்சர் மங்கள சமரவீரவையும் சபித்துக்கொண்டிருப்பதாகக் கேள்வி....



இதேவேளை ஜே.வி.பி.யினரின் நுழைவால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது முகவரியை இழந்து வருகிறது.... என்று கருத்து வெளியிட்டுள்ள அந்தப் பதவியற்ற பரிதாப அரசியல் ஜெனரல் ரத்வத்த ஜே.வி.பி.யை கட்டுப்பாடுகள் வைத்திருக்குமாறே கட்சியின் சிரேஷ்ர தலைவர்களுமாக சந்திரிகாவுக்கு அறிவித்துள்ளனராம்.

தேர்தலுக்குப்பின் மாமா மருமகள் உறவிற்கு விரிசலதிகமாகிவிட்டதாம் அக்கா தம்பி உறவில் இடைவெளி கூடிவருகிறதாம்.....!

இந்த நிலையில் எல்லா தலைவலிக்கும் முடிவுகட்ட அரசைக்கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்த யோசிக்கிறாராம் அம்மணி அப்படியென்றால் ஜே.வி.பி.யுடன் மீண்டும் கூட்டுச்சேர்வாரா என்ற கேள்விக்கு விடையில்லை. நாட்டின் எதிர்காலம் சமாதானத்தின் எதிர்காலம் குறித்தகேள்விகளுக்கும் அதேநிலைதான்.....!

## ஆசி வழங்கவேண்டியவர்கள் அடிவாங்கும் அவலம்

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் அரங்கேறிவரும் 'அமர்வுகள்' என்ற கூத்துக்களில் ரசனைக்குரிய சம்பவங்களை உருவாக்கும் பாத்திரங்களாக அந்த நவக்கிரக நாயகர்தான் தொடர்ந்தும் விளங்கிவருகிறார்கள்.

ஜாதிக ஹெல உறுமயவின் அந்த ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட காவியுடைதாரிகளைத் தான் குறிப்பிடுகிறேன்.

ஆசி வழங்கும் நிலையில் கௌரவமாக இருக்க வேண்டியவர்களை அடிவாங்கும் அவமான நிலைக்குக் கொண்டு வந்த பெருமை முழுவதும் அந்த சிஹல உறுமயவின் திலக் கருணாரத்னவுக்கும் சம்பிக்க ரணவக்கவுக்கும் உண்டு... நன்றி அவர்களுக்குக் கூறவேண்டும்.

பௌத்த பிக்குகளான, தர்மராஜ்ஜிய கனவு வாதிகளான தங்களுக்கே இந்த அராஜக ரீதியிலான மரியாதை தான் நாடாளுமன்றில் கிடைக்கிறதென்றால் பாவம் சிறுபான்மை மக்களின் உறுப்பினர்களுக்கு என்னென்னவெல்லாம் கிடைக்கும் எனப் புரிந்துகொள்ள இந்த அனுபவங்கள் அவர்களுக்கு உதவுமா உதவுமானால் நல்லது தான்...

அதற்கான சாத்தியம் இருக்குமா என்பது சந்தேகம் தான்...!

பிக்குமாருக்கு நடந்த நாடாளுமன்ற வரவேற்பின் அலங்கோலம் தந்த அதிர்ச்சிதான் அஸ்கிரிய பீடாதிபதியின் மரணத்திற்கு ஒரு காரணமாக இருக்கும் என்று ஒரு சிங்கள சகோதரர் கூறினாராம்....!

இது எப்படி இருக்கு..?

பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றால் விடுதலைப் புலிகளுடன் பேசத்தயார் என்று ஹெல உறுமய பேச்சாளர் கூறியிருப்பது குறித்து ஒரு நபரிடம் கேட்டேன்...

அதற்கு அவர் சாட்சிக் காரனிடம் சாட்டையடி வாங்குவதிலும் பார்க்க சண்டைக் காரனின் காலில் விழுவது நல்லது என்று நினைத்துவிட்டார்கள் போலும் என்று கூறியவர் ஆனால் என்று இழுத்தார்... பின் சொன்னார்.

இவ்வளவு நாளும் அரசாங்கக் கட்சிக்காரர்களிடம் மட்டும் அடிவாங்கியவர்கள் இனி, இப்படிச் சொன்னதற்காக தங்கடை சிகல உறுமயக்காரரிட்டை உதையும் வாங்கப் போகினம் போலை கிடக்கு....!

'புத்தத்தை சரணடைவதை விட்டு, அரசியலை சரணடைந்ததற்கு இதுவும் வோணும் இன்னமும் வேணும்' என்று இப் பிக்குகள் எதிர் காலத்தில் புலம்பக் கூடும் என்றே தோன்றுகின்றது.

"உங்களுக்கு ரோகன விஜயவீரவைத் தெரியுமா?"

"ஓ... நன்றாகத் தெரியுமே... ஜே.வி.பி.யின் அந்த பிரபலமான தலைவர்தானே....!"

சரியாகச் சொன்னீர்கள்... அவரை பிரேமதாஸ ஆட்சி படுகொலை செய்து



ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் போய்விட்டாலும் உங்களுக்கு நினைவிருக்குது... ஆனால் நினைவில் வைத்திருக்கவேண்டியவர்கள் மறந்து விட்டார்கள்...!

"யாரைச்சொல்கிறீர்கள்..?"

## அரசியல் இலாபம் தேடும் போது; பழைய நினைவுகள் எப்படி வரும்?

'ஜே.வி.பி.யினரைத்தான் சொல்லுகிறேன்... அவர்களுக்கு விஜேவீரவை நினைவிருந்தால் அவருடைய மனைவியும் பிள்ளைகளும் இன்னமும் கடற்படையினர் காவலில் இருக்கவேண்டிய அவசியமில்லையே...!'

ஓ அதைச்சொல்கிறீங்களா?... விஜேவீரவை காட்டிக்கொடுத்தவர்தான் இப்போதைய அவர்களின் தலைவர் சோமவன்ச அமரசிற்க என்றும் கூட ஒருகதை பரவலாக அடிபடும் நிலையில்... விஜேவீரவின் மனைவி பிள்ளைகளை எவராவது கவணிப்பார்களா?

'ஓ...இப்ப அவர்கள் தங்கள் தங்கள் பதவிகளை காப்பாத்திறத்திற்கே ஆலாய்ப்பறந்து திரியேக்கை விஜேவீரவையை மறந்து சந்திரிகாவின் ஆட்சிக்காலத்துக்குள்ள அவரை ஓரங்கட்டி எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்றும் "இலட்சியச் சதி" நோக்குடன் இயங்கிக் கொண்டிருக்கையில் அவரின் மனைவியாவது? பிள்ளைகளாவது? அதுதான் அவர்களின் புரட்சிகர அரசியல் சித்தாந்தம்."

"சிலவேளை அவரின் மனைவி வெளியே வந்தாலோ... வெளிநாடு சென்றாலோ ஜே.வி.பி.யின் வண்டவாளம் வெளிச்சத்துக்கு வந்துவிடுமோ. என்ற பயமும் அவர்களுக்கு இருக்கலாம்.... இதெல்லாம் அரசியல் லாபத்தை இலக்குவைத்து அணுகவேண்டிய விடயங்கள்...."

ஒரு முன்னாள் ஜே.வி.பி.யின் (முன்னாள்) தோழரை இது பற்றி விசாரித்தபோது... இப்போது உள்ள ஜே.வி.பி. ரோகன விஜய வீரவின் ஜே.வி.பி.யல்ல... தலைமறைவுத் தலைவர் சோமவன்சவின் ஜே.வி.பி.பேரினவாத சித்தாந்தத்தை வரித்துக்கொண்ட ஜே.வி.பி அது விஜயவீரவின் மனைவி பிள்ளைகள் கடற்படையின் காவலில் இருப்பதையே விரும்பும் ஜே.வி.பி...."



'போதும்.... போதும்.... அதிகாரப் பீடப்பதவிகளில் அமர்ந்துகொண்ட பின்னர் தமது கட்சியின் மறைந்த தலைவரின் குடும்பத்தையே மதிக்காத ஜே.வி.பி.யின் சமகால தலைமை தமது தொண்டர்களை எப்படி மதிக்குமா?

அது பற்றி அவர்களுக்கு வாக்களித்த மக்கள்தான் யோசிக்கவேண்டும்.....!

## ஆளாய்ப் பறக்கும் சந்தகிரி அவசரப்படுவதேன்?

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுவது ஒரு பெரிய அயோக்கியத்தனமான கலை.

இதில் அமெரிக்காவுக்கு நிகர் அமெரிக்காதான்.

சண்டைக்கு பயிற்சியை வழங்கிக்கொண்டே சமாதானம் பற்றி உபதேசிக்கும்... அதுவும் சாதாரணமாக அல்ல... வலியுறுத்தி உபதேசிக்கும்.

சமாதானத்தை வலியுறுத்திக்கொண்டே சண்டைக்கு வேண்டிய இராணுவ ஆயுத தளபாடங்களையும் அதே நாட்டுக்கு விற்பனை செய்து அந்த நாட்டை ஒட்டாண்டியாக்கி அழிவு நிலைக்குத் தள்ளும்...

பிறகு அதேநாட்டுக்குள் புணர்வாழ்வு புனரமைப்புப் பணிகள்க்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு உள்ளே நுழையும்.

பிறகு?

பிறகென்ன அந்தநாடு தனது சுதந்திரத்தை இழந்துவிடும் அவ்வளவுதான்.

பிறகு உலகமயமாதல் அமெரிக்கமயமாகிவிடும்...

இந்த-ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசு ஆட்சிபீடம் ஏறியதும் சமாதானப்பேச்சுக்களை உடனேயே ஆரம்பிக்கவேண்டும் என்று வற்புறுத்தி சிறிலங்கா அரசுக்கு அழுத்தம் கெடுத்தது அமெரிக்காதான்....

ஆஹா.... சமாதானத்தில் அமெரிக்கா எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கு என்று சந்தோஷப்பட அவகாசம் தராமலே இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம், இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி... இலங்கை கடற்படைக்கு பாரிய போர்க்கப்பல் ஒன்றை விற்பது.... போன்ற செயற்பாடுகளை அடுத்தடுத்து மேற்கொள்ளத் தொடங்கி அதிரவைத்துள்ளது.....

சமாதானம் பேச நோர்வேயை அனுப்பிவைத்து விட்டு போர்க்கப்பலை வழங்கவும் அதில் பயிற்சியளிக்கவும் அந்த சமாதானக் குழப்பியான கடற்படைத்தளபதி தயாசந்தகிரியையும் அவரது பரிவாரங்களையும் அமெரிக்காவுக்கு அழைத்துள்ளது.

இப்போது நாடுள்ள வங்குறோத்து நிலையில், அதுவும் போர்நிறுத்தம் நடைமுறையிலிருக்கும் சமாதான சூழலில் ஏராளமான கோடிப் பணச்செலவில் ஒரு போர்க் கப்பலை அதுவும் அமெரிக்கா கழித்துவிட்ட போர்க்கப்பலை வாங்க சந்தகிரி ஆலாய்ப்பறப்பதேன்?

அவரின் பிரதம கட்டளை அதிகாரி சந்திரிகா அம்மணிக்குத்தான் வெளிச்சம். மீண்டும் சமாதானத்துக்கான யுத்த ஏற்பாடுகளை அவர் முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறாரோ?

சமாதானத்தைப்பற்றி சந்திரிகா வாய்கிழியப்பேசினாலும் அதற்கு விசுவாசமாக ஒருபோதுமே செயற்பட்ட வரலாறே கிடையாது.

சந்திரிகாவின் போன சமாதானத்திற்கான யுத்தத்தில் இந்தியா சரயு என்ற கப்பலை வழங்கி தமிழ்களை அழிக்க உதவியது.... எதனையும் சாதிக்க அதனால் முடியவில்லை... இந்தமுறைக்கு அமெரிக்கா 'கறேஜஸ்' என்ற கப்பலை வழங்குகிறது...

சமாதானம் தப்பிப்பிழைப்பது சந்தேகம்தான்.../..

*செங்குட்டுவன்*





## சிந்தனைத் துளிகள் சில

* மாபெரும் வெற்றியை அடையமுன் அதை அடைவதற்கான நம்பிக்கையைப் பெறவேண்டும்.
* ஒவ்வொரு கல்வியும் ஒரு வகையான உள்நோக்கிச் செல்லும் பயணம். இப் பயணத்தின் பாதையே கற்றல்.
* வெற்றி என்பது ஒரு தந்திரச் செயலோ அல்லது புரியாத புதிரோ அல்ல. அடிப்படைத் தன்மைகளை முறையாகவும் இடைவிடாமலும் பின்பற்றுவதன் விளைவாக வெற்றியை அடைய முடியும்.

ஈழவிழி

## எங்கள் மயில்

எங்கள் தாயகத்தில் மிகப்பெரிய பறவை மயில். இது எங்களின் காட்டுப் பறவை, இந்த மயிலின் அழகு அதன் வண்மையான தோகையில் தான் உள்ளது. இந்த தோகை அதன் வாயிலிருந்து மூன்று அடி நீளமானதாக இருக்கும். மழை மூட்டம் ஏற்படும்போது இந்த மயில் தோகையை உயர்த்து நடனமாடும். இந்த தோகை ஆண்மயிலுக்கு மட்டுமே உளளது. இந்த மயில் இயல்பில் உயர்வலய புதர்க்காடு, ஆற்றங்கரை, குளக்கரையோர காடுகளில் தான் வாழும். ஆனால் மக்களும் மயிலை வளர்க்கிறார்கள், மயில் கூரிய பார்வையும் கூரிய கேட்டலும் உடையவை. அதனால் அதிகம் எச்சரிக்கையுடனேயே இருக்கும். மயிலுக்கு பாம்புகள் சரியான பயம் மயிலின் உணவு தானியங்கள், பழம், பூரான், தேள், பல்லி, புழு, பாம்புகள், பூச்சிகள் ஆகும். பகலில்



கூடுதலாக பதுங்கியிருந்து விட்டு- வெயில் தணியும் போதுதான் அது அதிகம் நடமாட்டத்தை தொடங்கும். பாதுகாப்புக்கு என அது இரவில் உயரமான- அதிகம் பட்டமரங்களிலேயே தங்கும். ஆனால் பெண்மயில்கள் தரையில் புதர்களில் தான் முட்டைகளை இடும். ஐந்து முட்டைகளை இட்டு அது அடைகாக்கும். ஒரு ஆண்மயிலின். நீளம்-120 சென்ரி மீற்றர் வரைக்கும் இருக்கும்.

மயிலின் உயிரியல் பெயர்- பவோ கிரிஸ்ரஸ்லின் ஸயிஸ் மயிலின் கத்தல் சத்தம் எங்களின் காதை கிழிக்கும் அளவு உரப்பானது.

மயில் எமது காட்டின் மிகப் பெரிய பறவை. இது எமது காட்டுப்புறவயல் நிலங்களில் பயிர்களை அழிக்கும் எலிகளை அழிக்கும். விவசாயிகளின் நண்பனாகவும் உள்ளது. மயில் இந்தியாவின் தேசியப் பறவை. கானமயில் ஆட கண்டிருந்த வான் கோழி தானும் தன் பொல்லாச் சிறகை விரித் தாடிதாம் என்ற பழமொழியும் எம்மிடம் உண்டு.

## சொற்சிலம்பம் - 41

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஈ | மூ | கா | டி | தி | அ | ன |
| தா | க | ளி | ப | க | ள் | ர் |
| கை | ர | ம | மி | ங் | தா | லை |
| தி | ன் | கி | ழ | த | னி | க |
| ம் | ப் | மி | கு | தி | யொ | த |
| ய | கு | மி | த் | பா | யி | ம் |
| சு | அ | ச | ல் | தா | ழ் | ர |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 39 இன் விடைகள்

01. மஞ்சள்.
02. நீலம்.
03. சிவப்பு.

01. மாதுளை.
02. அன்னாசி.

### சொற்சிலம்பம் - 39 இன் பரிசுக்குரியவர்

த.பிரியந்தன், 495/10D
ராணிமில் ஒழுங்கை,
இறம்பைக்குளம், வவுனியா.

### சொற்சிலம்பம் - 39 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தி.கோகிலவதனி, சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார்,
02. வி.பமேலா, திருக்குடும்ப கன்னியார், மிருசுவில்.
03. நா.சுஜிதா தரம் - 09, தங்கோடை வீதி, வட்டுக்கோட்டை.
04. மா.புஸ்பகுமார், புனிதபூமி சிறுவர் இல்லம், ஒட்டுசுட்டான்.
05. க.தருண்நிலா, 3ம் வட்டாரம், முள்ளியவளை.
06. கோ.போசகாந், தரம்-4B பூநகரி, கிளிநொச்சி.

01. பறவைகள் மூன்று?
01) ..............................
02) ..............................
03) ..............................

*சொற்சிலம்பம் -41*
*ஈழநாதம்.*
*யாழ் சாலை.*
*கிளிநொச்சி.*

02. சந்திரனின் வேறு பெயர் இரண்டு?
01) ..............................
02) ..............................

பெயர் :- ..............................
முகவரி :- ..............................
..............................

## கிளச்சஸ்ஸே கதி



எண்ணாமல் கால் வைப்போருக்கு கடைசியில் கிளச்சஸ்ஸே கதி.

## ஒதுங்கி வாடா தம்பி



*சாலை ஓரம் கவனமாகத்*
*தம்பி நடந்து வாடா!*
*வேலை செல்வோர் விரையும் வண்டி*
*மிகுதி! ஒதுங்கி வாடா!*


*சாலை ஓரம் கவனமாகத்*
*தம்பி நடந்து வாடா!*
*வேலை யற்ற வீணர் வண்டி*
*மிகுதி! ஒதுங்கி வாடா!*

*சாலை ஓரம் கவனமாகத்*
*தம்பி நடந்து வாடா!*
*வேலி யெல்லாம் நகர்ந்து வீதி*
*மெலிந்தது! ஒதுங்கி வாடா!*

*சாலை ஓரம் கவனமாகத்*
*தம்பி நடந்து வாடா!*
*ஓலம் செய்யும் ஊதல் நூறு!*
*தம்பி ஒதுங்கி வாடா*

## முயலாரின் பரிசு

பகுதி - 02



யாழ்பண்ணைப் பாலத்தின் இருபக்கமும் சிறிலங்கா இராணுவ வேலிகள் இருக்க, அதன் நடுவே நகரும் போக்குவரவு 1990ல் இவ் வீதி அழிக்கப்பட்ட சிறிலங்காப்படை நடவடிக்கையை நினைவூட்டியது. யாழ்ப்பாண நகரை ஆக்கிரமிக்க கோட்டை இராணுவமுகாமை சிறிலங்காப் படையினர் பயன்படுத்தினர். எறிகணைகள் மூலம் கொக்கு

# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்... 02



வில் வரையான பகுதிகளை படையினர் ஆக்கிரமித்தனர். முதலாம் ஈழப்போர் காலத்தில் யாழ்நகரை இது துவம்சம் செய்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பத்தில் கோட்டை இராணுவமுகாம், நகரை துவம்சம் செய்தது. இதனைத் தகர்க்க முதலாம் ஈழப்போர் காலத்திலிருந்து விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடர கோட்டை இராணுவ முகாமை அழிக்க விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டது. இதில் சிறிலங்கா இராணுவத்தின் ஆறாம் சிங்க றெஜிமன்ட் பிரிவினரும் யாழ் நகர் பொலிசாரும் இம் முற்றுகைக்குள் சிக்கியிருந்தனர். இந்தப் படையினரை மீட்க சிறிலங்கா இராணுவத்தினர் யாழ் தீவுகளை இலக்கு வைத்தனர்.

கோட்டை முற்றுகை ஆரம்பமானபின் தீவகமக்களின் போக்குவரத்து அராலித்துறை வழியாக இரவு நேர தோணிப்பயணம் நடந்தது. பகலில் படையினர் உலங்குவானூர்திகள்மூலம் தாக்குதல் நடத்தியதால் இரவுவேளைகளில் இப்பயணம் ஆரம்பிக்கப்பட்டது. காலை விடியும்வரை மட்டுமே தீவக மக்களின் யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து நடைபெற்றது. இந்த நிலையில் யாழ். சிறிலங்கா இராணுவத்தினர் பலாலியிலிருந்து 2ம் டிவிசன் படையினர் திட்டமிட்டு கோட்டைப் படையினரை மீட்கவந்தனர். இராணு வத்தினரின் முதலாம் சிங்க, முதலாம் கஜபா, 4ம் கஜபா, முதலாம் விஜிபா, பற்றாலியன்கள் 120 MM மோட்டர்கள் இரண்டு உட்பட 8 மோட்டர்கள் சகிதம் பலாலியிலிருந்து காங்கேசன்துறை முகாம் வழியாக நகர்த்தப்பட்டன. சிறிலங்காப் படையினர் தரையிறங்கு கப்பல்கள்மூலம் 1990 ஓகஸ்ட் 15 ஆம் நாள் அதிகாலையிருளில் காரைநகருக்கும் எழுவைதீவுக்கும் இடைப்பட்ட ஆழ்கடல் பகுதிக்கு கொண்டுசெல்ல அங்கிருந்து வலம்புரி,குமுதினி படகுகளில் ஊரூண்டி முனைக்கு கொண்டு சென்று இறக்கப்பட்டனர். குமுதினி, வலம்புரி என்பன நெடுந்தீவுக்கான மக்கள் போக்குவரத்தில் ஈடுபட்ட படகுகளாகும். இவை இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான காலங்களில் நயினதீவு சிறிலங்கா படையினரால் பறிக்கப்பட்டதாகும். இரவோடு இரவாக குமுதினி வலம் புரிப்படகு மேலும் சிறிய கடற்படை படகுகள் மூலம் இத்தரையிறக்கம் நிகழ்ந்தது. ஊர்காவற்துறையின் வடமேற்காகவுள்ள ஊரூண்டி வழி படைத்தரையிறக்கம் நடத்தப்பட்டது ஒரு தந்திரோபாயமாகும். காரைநகர் நீலம்காட்டிலுள்ள சிறிலங்கா கடற்பை-வட தலைமையகம் (COMNO RTH) அருகே ஊர்காவற்துறை இருந்தது. காரைநகர் வழியாக படையினர் ஊர்காவற்துறையைக் கைப்பற்றியிருக்கலாம். ஆனால் அதில் விடு



(படம் திரு)

தலைப்புலிகள் காப்பு இருப்பதால் ஊரூண் டியை இராணுவம் நாடியது. ஊர்காவற் துறைக்கும் காரைநகருக்குமிடையே சுமார் 150மீற்றர் நீரிணை வழியிலான மக்கள் போக்குவரத்தில் வீதிஅபிவிருத்தி அதிகார சபையின் பாதைப்படகு ஈடுபட்டிருந்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகையில் காரைநகரிலிருந்து கடற்படையினர் ஊர்காவற்துறையை தாக்கத் தொடங்கினர். இதனால் ஊர்காவற்துறை இருந்த முழு நிர்வாகமும் நாரந்தனை என்ற கிராமத்துக்கு கிழக்காக நகர்ந்தன. பாதைப் படகு விடுதலைப்புலிகளால் காப்பாற்றப்பட்டு தம்பாட்டிக்கிராமமான பருத்திமுனைக்கு நகர்த்தப்பட்டது. அங்கிருந்தே காரைநகர் தென்கிழக்கு முன்ன வழியாக பாதை போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது. காரை நகருக்கு வடக்கே ஆழ்கடலில் டோரா பீரங்கிப் படகு ஒன்றும் உட்கடலில் சிறிய கடற்படைப்படகுகளும் ஒரு தாய்க்கப்பலும் கடலிலிருந்து பீரங்கிகள் கனரகத் துப்பாக்கிகள் இயக்க காத்திருக்க, காரைநகர் கடற்படைத்தளத்தில் 33MM பீரங்கிக் குண்டுகளை உமிழ தயார் நிலையிலிருந்த Y8, Y12, 2 உலங்கு வானூர்திகள் குண்டுகளைப் பொழிய தயாராக 8 உலங்கு வானூர்திகள் 2 பயணிகள் விமானங்கள் பலாலியில் துருப்புக்களைக்காவத்தயாராக இருக்க,

விடிகாலையில் ஊரூண்டி முனையில் சிங்களப் படையினர் தீவகத்தில் ஒரு நரபலிவேட்டைக்குத் தயாராகினர். விடிகாலை மழையாக குண்டுகளைப் பொழிய அந்த நரபலிவேட்டை ஆரம்பமானது. ஒரு புயல்வேக நரபலி வேட்டை அது.

**துருவன்**

## காணி விற்பனை



"புறோக்கர்...! மூண்டு வருசத்துக்கு முந்தி மூண்டாவது காணிக்கை வெடிக்காத செல் லொண்டு கிடந்தது எண்டதுக்காக 30 லட்சம் தீர்த்த வீடுவளவை 30 ஆயிரத்துக்கு தா எண்டு நிக்கிறது அவ்வளவு நல்லாயில்லை."

## தொல்லியல்

# வன்னியில் கண்டுபிடிக்கப்பட்ட மூத்த இரும்பு உருக்கு உலைகள்


3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இரும்பு உருக்கு உலைகள் வன்னியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வன்னியில் கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் குளத்தின் அலைகரைப்பகுதியில் இரும்பு உருக்கு உலைகள் 2002ஆம் ஆண்டு தொல்லியல் தேடலாளர் ந. குணரட்னத்தினால் கண்டுபிடிக்கப்பட்டது.






வட்டவடிவ இரும்பு உருக்கு உலையின் அடித்தளம் உலையின் ஊதுலையாக இருந்த மண் துருத்திகள், குவியல்களாக இரும்பு கசடுகள் என்பன இப்பகுதியில் கண்டு எடுக்கப்பட்டன. இந்த உருக்குலையின் கசடுகள் வேதியியல் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டபோது அதில் 68.12 விழுக்காடு இரும்பு இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதேபோன்ற இரும்பு உலை கசடுகள் முறிகண்டி- அக்கராயன் சாலையோரம், கோணாவிலில் அக்கராயன் கழிவாறின் கரையோரம், முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்தின் கோட்டைகட்டினகுளம் என்பவற்றிலும் கொக்காவிலிலும் காணப்படுகின்றன.



(படங்கள் திரு)



கொக்காவிலில் கண்டுபிடிக்கப்பட்ட இரும்பு உருக்குலைப் பகுதிகள் A-9 சாலை புனரமைப்புக்காக கிரவல் மண் அள்ளப்பட்டவேளையில் அழிக்கப்பட்டுவிட்டன. ஏனைய உலைகள் அப்படியே உள்ளன. இரும்பு உருக்குலைப்பகுதிகள் காலக்கணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளன. அதன் பெறுபேறு இந்த உலை கி.மு 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை உறுதிசெய்தது.

இலங்கைத்தீவில் சிறிலங்கா தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி மிகத் தொன்மையான இரும்பு உருக்குலை 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இது அநுராதபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரும்பு உருக்கு உலையே சிங்கள வரலாறு கூறும் விஜயன் வருகை என்பதற்கு முன்பாகவே இலங்கைத் தீவில் மனிதர்கள் வாழ்ந்து வேளாண்மை, மந்தை மேய்ப்பு, இரும்புப் பயன்பாடு என்பவற்றை மேற்கொண்டிருந்தனர் என்ற அறிக்கையை சிறிலங்காவின் தொல்லியல் திணைக்கள முன்னாள் ஆணையாளர் S.U.தெரனியகலையினை வெளியிடச்செய்தது.

இதைவிட 3000 ஆண்டுகள் வரை தொன்மையான புத்தளம் பொம்பரிப்பு முதுமக்கள் தாளிகளில் எடுக்கப்பட்ட இரும்புப் பாகங்களும் இத்தீவில் இரும்புப் பயன்பாட்டை உறுதிசெய்தது.

தமிழர் தாயகப்பகுதிகளில் பூநகரியில் மேலாய்வு மேற்கொள்ளப்பட்டு இரும்பு உருவாக்கங்கள் எடுக்கப்பட்டபோதிலும் அவை காலக்கணிப்பு மூலம் இதுவரைகாலம் உறுதிசெய்யப்படவில்லை:

ஆனால் அக்கராயனில் கண்டுபிடிக்கப்பட்ட இரும்பு உலை காபன்-14 கதிரியக்க காலக்கணிப்பு செய்யப்பட்டு அது கி.மு 1300 ஆண்டுகள் தொன்மையானது என அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

நவீன அறிவியல் உலகில் தொல்லியல் சான்றுகள் காலக்கணிப்பு மூலம் உறுதிசெய்யப்படும்போதே அவை அங்கீகரிக்கப்படுகின்றன. ஒப்பீட்டு காலக்கணிப்பு முறைகள் தொல்லியல் என்ற அறிவியல்துறையில் ஏற்புடையதாக்கப்படுவதில்லை. அந்த ரீதியில் அக்கராயன் இரும்பு உலை அறிவியல்மூலம் காலக்கணிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழரின் பெருங்கற்காலம் எனப்படும் (கி.மு.0 முதல் 1000 வரையான) காலம் இரும்புக்காலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. பெருங்கற்காலத்திலேயே தமிழர்கள் இரும்பினைப்பயன்படுத்தியதால் இது இரும்புக்காலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய இரும்பு உலைகள் தமிழர் தாயகத்தில் இருப்பதான விடயங்கள் ஆதாரபூர்வமாக இதற்கு முன்னர் வெளிவரவில்லை. ஆதாரபூர்வமாக காலக்கணிப்புடன் தமிழர் தாயகத்தில் இரும்பு உலைகள் பற்றிய விடயம் வெளியாவது இதுவே முதல் தடவையாகும்.

தமிழர் தாயகத்தில் இரும்புத்தாது திருக்கோணமலையின் சேருவலையில் உள்ளது. இந்த இரும்புத்தாதுதான் தமிழர்தாயக இரும்பு உலைகளில் பயன்படுத்தப்பட்டதாக கூறமுடியாது. ஏனெனில் சேருவிலை இரும்புத்தாது இன்னமும் பயன்படுத்தாத நிலையில்தான் இருக்கின்றது. இந்த நிலையில் தமிழகத்தில் இருந்து அது வந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. தொழில்நுட்பங்கள் எல்லாமே ஒரே இடத்தில் தோன்றின என அடிப்படைவாதம் பேசினால் அதுவே உண்மை வரலாறின் தவறாகும். ஆக எமக்கு இரும்பு நுட்பம் வேறெங்கோ இருந்தே கிடைத்திருக்க வேண்டும். 16 ஆம் நூற்றாண்டில் வருகைபுரிந்த பிரிட்டிஸ் பயணியான 'றொபேட் நொக்ஸ்' தான் இத்தீவில் பாரம்பரிய இரும்பு உருக்கு உலைகளை கண்டதாகவும் கூறி அதன் நுட்பத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

நவீனத்துவம் வரும்வரை இப்பாரம்பரிய உருக்குலைகள் இத்தீவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் தமிழர் தாயகத்திலும் மூத்த இரும்பு உருக்குலைகள் உள்ளன. இதனை வன்னி இரும்பு உருக்குலைகள் எடுத்துக்கூறுகின்றன.

**குரலோன்**



# மண்ணின் மைந்தர்களின் கதை

# மீட்பின் உயிரோட்டம்

**க.மிரேசு**

இரத்தம் தோய்ந்த அந்த உருவத்தையும். சல்லடையாக்கப்பட்ட, உடலில் சில துவாரங்களையும், வழிந்தோடிய இரத்தத்தோடு மண்ணை அணைத்தெடுத்து தாய்மண்ணே! உனக்காகவே எனது உடலும், உதிரமும் என்று உணர்த்திய கணப்பொழுதிலேயே,' தாய் மண்ணிற்கான உயிரும் மண்ணை கட்டி அனைத்திட்டவாறே அமைதியானது. ஆ........ ஆ.....என்று விக்கித்துக்கொண்டே உடலை விட்டு உயிர் விடைபெற ஆயத்தமானது. கண்கள் வானத்தை அன்னார்ந்து பார்த்து, ஏதோ கதைகள் கேட்கவே செய்தாலும் விம்மி, விம்மியும் இழுத்து இழுத்தும் தொய்ந்து போனதாயும் ஆனது. இருதயத்தின் செயல் கண்கள் தனது இறுதி பார்வையை பிரகாசமாக்கி ஏதோ ஒரு செய்தி சொல்லி இருக்க வேண்டும். அப்படி ஏதோ நடந்ததனால்தான் உயிர்விடும் நேரத்திலும் அந்த உன்னத உடலிலிருந்து சிரிப்பு மேலெழுந்து சிரித்த சில வினாடிகளில், விடுதலையின் வீர விதையொன்று தமிழ் மண்ணை தன் கையால் தொட்டவாறு காவியமாகியது.

அணைகின்ற விளக்கு பிரகாசிக்கத்தானே செய்யும். எனவேதான் அந்த விடுதலை வீரனின் இறுதி மூச்சும், சிறிய ஆத்மார்த்தமான புன்னகையுடன் தாயக விடுதலைக்கு உரமூட்டி எம்மையெல்லாம் பிரிந்துசென்றது. தாயகத்தை நேசிக்கின்ற எந்தவொரு விடுதலைவீரனின் வீரச்சாவும் நிச்சயமாக புனிதமான மேன்மையானதொரு சாவாகவே நிகழ்ந்திருக்கிறது. ஆனால் சில விடுதலை வீரர்களின் வீரச்சாவானது மாபெரும் சாதனைகளினதும் உயரிய உழைப்பின் அர்ப்பணிப்புக்களாலும், நிகழ்வதுண்டு. சில மயிர்கூச்செறியும் சாதனைகளும், வீரமும் களத்திலே இரத்தத்தாலே எழுதப்படுகிற வரலாறாகவே குடிகொள்கிறது. அப்படிப்பட்ட வரலாற்று கதாநாயகர்களில் சிறுவயதிலேயே தனது தாயக விடுதலைப்போராட்டத்தை நேசித்து அதில் இணைந்து சதா தோளிலே மருத்துவப் பைகளுடனும் பல்துறைசார் அறிவியலாளனாகும் களத்தையே தனது வாழ்வாக்கிக்கொண்ட மாவீரர்களில் மேஜர் பிரியக்கோனும் ஒருவன். மன்னார்மாவட்ட சிறப்பு தளபதியாக இருந்து வீரச்சாவடைந்த மாவீரன் லெப். கேணல் சுமனால் வளர்த்தெடுக்கப்பட்ட அந்த இளம் வேங்கை எவருமே எதிர்பாராத நேரங்களில் எவருமே நினைத்தும் பார்க்காத சாதனைகளை செய்த வீரன் மேஜர் பிரியக்கோன்.

அந்த தலைசிறந்த வேங்கையின் வாழ்வில் எத்தனையோ சாதனைகளும் வீரச்செயல்களும் பொதிந்து கிடந்தாலும் அவனது உயிர் உடலை விட்டுப்பிரிந்த அந்த கடைசி நாட்களையும் அவனது வீரச்செயல்களையும் நாம் நினைத்துப்பார்க்கின்றோம். அவனது இறுதி உயிரில்! முழுமையான உயிர்பெற்றது தான் நாம் இப்போது சமாதானத்தின் சாட்சியாக உருவாக்கிக்கொண்டிருக்கும் புதிய கிளிநொச்சி நகரம், என்பதையும்விட அந்த மாவீரனின் பலதுளி இரத்தங்களின் விலையே இன்று வாசகர்களாகிய நீங்கள் கையிலேந்தி புதினங்களை அறிந்திடும் இந்த வெள்ளிநாதப் பத்திரிகையின் கிளிநொச்சி காரியாலய உயிர்ப்பாகும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்காது. காரணம் இப்போது எம்கண் முன்னே பெரும் பிரகாசமாய் தெரிந்திடும் இந்த கிளிநொச்சி நகரத்தை மீட்டிட எத்தினையே உயிர் தியாகங்களையும், ஆர்ப்பணிப்பையும் எமது விடுதலை இயக்கம் செய்தது என்பது உண்மையே.

இரத்த வெள்ளமும், தசைகளின் சிதறல்களும் அனுங்கியபடியே உயிர்விட்டுப் போன உன்னதங்களையும் நாம் மீண்டும் நினைத்துப் பார்க்கிறோம். கொடூரத்தை உணர்த்தும் அந்த கரிய இருளுக்குள் ஓட்டமும், நடையுமாக ஊர்ந்தும், தவழ்ந்தும் எமது இலக்கை அடைந்த எம் உயிர்த் தோழர்களை நான் நினைக்கும்போது எமது காதுக்குள் அந்த அற்புதமானவர்களின் குசுகுசுப்பும், வீர வசனங்களும் ஒலிக்கும்போது எமது நெஞ்சை அது அடைத்து விடும்போல் இருக்கிறது.

என்னடா இன்னும் சண்டை தொடங்கவில்லை...., ......, ..... என பலமுறை குசுகுசுத்த மேஜர் பிரியக்கோனின் குரல் இப்பொழுது ஒலிக்கிறது, அவன் கேட்டது போலவே சண்டை தொடங்கிவிட்டது. நந்தவனமாய் இருந்த எங்கள் கிளிநொச்சி, நாய்களும் பேய்களும் குடிகொண்ட சுடுகாடாய் மாறி கண் முன்னே கிடக்கிறது. இங்கேதான் சிங்கள எதி



ரிக்கு இடுகாடமைக்கவேண்டும் என்பது எல்லோரினதும் ஆசை, ஓயாத அலைகள் -02 சண்டை கிளிநொச்சியில் தொடங்கி மண்மீட்பு போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சண்டை உக்கிரம் அடைந்துவிட்டது.

வழமையைவிட மேலாக மேஜர் பிரியக்கோன் மூர்க்கமாக சண்டை செய்கிறான். சண்டை தொடங்கிய நேரத்திலிருந்து சுமார் 30 மணித்தியாலமாகியும் எதிரியின் கடுமையான தாக்குதலை சந்தித்தவண்ணமே இருந்தோம். களநிலைமை மிக மோசமாகிக்கொண்டிருந்தது. விடாதே..... விடாதே.... அடியடா..... அடியடா.... என்ற குரல் ஒலித்துக்கொண்டிருந்த இடத்தைப் பார்த்தால் அந்த இடம் பிரியக்கோன் இருக்கின்ற இடமாகவே இருந்தது.

தடைஉடைக்கப்பட்ட நேரத்திலிருந்து நாம் சிறிது சிறிதாகவே முன்னேறிக் கொண்டிருந்தோம். கிளிநொச்சி நகர்ப்பகுதியில் கட்டடங்ள் எதிரிக்குக் காப்பாக இருந்தமையினால் எதிரி நன்கு காப்பெடுத்து தாக்கிக் கொண்டிருக்க, எமது நகர்வுகள் மிகுந்த இடருக்குள்ளானது. அந்த நேரத்தில்தான் பொறுப்பாளரிடம் மேஜர் பிரியக்கோன் அனுமதி கேட்கிறான். என்னோடு ஒரு மூன்று பேரைத் தாருங்கள். பின்பக்கமாக சென்று தாக்குகிறேன் என்று, அதற்கு பொறுப்பாளரும் சம்மதிக்க, பிரியக்கோன் தனது துப்பாக்கியுடன் எதிரியிடமிருந்து எடுத்த 40. மி.மி டொங்கானுடனும், ஒரு இலகு இயந்திர துப்பாக்கியும் ஆர்.பீ.ஜீ உடனும் சில போராளிகளை கூட்டிக்கொண்டு முன் நகர்கிறான்.

இடர் நிறைந்த அந்தச் சமரில் பிரியக்கோன் வழமையான தனது வீரமான ஆற்றலால் ஏதோ சாதிக்கப் போகிறான். சண்டை தொடங்கி சுமாராக 26 மணிநேரமாகியும் முன்பக்கமாக எந்தவொரு முன்னேற்றத்தையும் காணாது இழப்புக்களை சந்தித்துக்கொண்டே இருந்த எமக்கு பிரியக்கோன் பக்கவாட்டாக எதிரியைத் தாக்குவது பெரும்பாலும் வெற்றியைத் தரும் என நினைத்த போதே பிரியக்கோன் தவழ்ந்து கொண்டேஇருக்கிறான். அவனது உருவம் மறைந்து சில வினாடிகளில், அந்த இடத்தில் பெரும்வெடிச்சத்தம் கேட்டது. மாவீரன் லெப் இளவீரனின் ஆர்.பீ.ஜீ இருந்து வெளிக்கிட்ட உந்துகணை வெடித்து பெரும் சத்தத்தை ஏற்படுத்தியது. பிரியக்கோன் எதிரியின் மறைவிடம் ஒன்றை தாக்கி இருக்கவேண்டும். அதனால் எதிரியும் நிலை தடுமாறி எங்கெங்கெல்லாமோ சுட்டுத்தீர்த்தான். பெரும்பாலும் அது சத்த வேட்டாகவே இருந்தது. மாறிமாறி பலமுறை கைக்குண்டு வெடிக்கும் சத்தம்கேட்டது. பெரும்பாலும் பிரியக்கோனின் கை எறிகுண்டுகளாகவே அது இருக்கும். ஏனெனில் போகும்போதே அவன் சில கைக்குண்டுகளை மேலதிகமாகக்கொண்டு சென்றிருந்தான். பிரியக்கோன் சென்ற இடத்தில் பல மின்னல்கள் தோன்றி மறைந்தன. தொடர்ச்சியாக எம்மவர்கள் 5 நிமிடம் சண்டை செய்து முடிந்துவிட்டது. அந்த இடத்தில் முதலிலிருந்த எதிரியின் வேட்டோசை அதன் பின் ஏற்படவே இல்லை. எதிரிக்கு ஏதோ நடந்து விட்டதென நாம் நினைக்கும் முன்னே பக்கவாட்டாக எதிரியின் துப்பாக்கிகள் அந்த இடத்தை சல்லடை போட்டன. மேஜர் பாப்பாவும் அவனது அணிகளுடன் லெப். நித்தியனும் பாண்டித்தேவனுமாக நாங்கள் இடம்வலமாக எதிரியை நோக்கி சுட்டுக்கொண்டிருக்க, மேலும் கைக்குண்டின் சத்தம் கேட்டு அடங்குவதற்குள் எமது இலகு இயந்திரத் துப்பாக்கியுடன் லெப். இளவீரணின் உந்துகணைகள் இரண்டு பக்கமாகவும் இரண்டு இலக்கைப்பதம்பார்த்தன, சிங்களத்தில் எதிரி ஏதேதோ சொல்லி கத்திக் கொண்டிருக்க பிரியக்கோன் எம்மை நோக்கி ஓடிவந்து களைப்பில் அமர்ந்தான். வந்தவர்கள் களைப்புத்தீர மூச்சிவிட்டு சில நிமிடங்களின் பின் பிரியக்கோன் சொன்னான், நல்ல வேட்டையடா, பக்கத்து பக்கத்தில ஏதோசெய்து கொண்டிருந்தான். இளவீரன் ஆர்.பீ.ஜீ அடிக்க நான் குண்டெறிந்து அடித்தோம். அந்த இடத்திலிருந்து ஒரு சத்தமும் வரேல்லை என்றான்.

அன்றைய இருள் விலகி கதிரவன் தலை நிமிர்ந்து பல நிமிடங்கள் ஆகிவிட்டன. எமது அணிகள் நிலைகொண்டிருந்த இடத்தில் எந்த ஒரு சத்தமும் இல்லாமல் அமைதியாக இருந்தது. எதிரி எங்களையும், நாம் அவனையும் எதிர்பார்த்து, அல்லது அவதானித்துக் கொண்டிருக்கவேண்டும். அதுதான் அந்த அமைதியின் இரகசியம். சமநேரத்தில் நாமிருந்த பக்கமாக எம்மில் ஒரு போராளி ரவைகளை வாங்கி எடுத்து பிரியக்கோனின் அணிகளுக்கு கொடுப்பதற்காக நகர்வரணில் மெதுவாக நகர முட்பட்டபோது எதிரியின் ரவை ஒன்று அவனது தோள்பட்டையை பதம்பார்த்தது. நாம் அவனை அவதானித்து அப்படியே படடா என்று சொன்ன அதேவேளை இஞ்சதாடா என்று லெப் இளவீரனின் ஆர்.பீ.ஜீயை பறித்தெடுத்தான். சில வினாடிகளில் ஒரு உந்துகணை ஒரு மலசல கூடத்தைப் பதம்பார்த்தது. அந்த இடத்தில் பெரும்புகை எழும்பி மறைவதற்குள் சொன்னான், அதில இருந்துதான் சினைப்பண்ணினவன் என்று நாமெல்லாம் ஏதோ பார்த்துக் கொண்டிருக்க பிரியக்கோன் எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து எதிரிக்கு தக்க அடிகொடுத்துவிட்டான் என்று அவனை மெச்சினோம்.

இப்போது சண்டை தொடங்கி 39 மணித்தியாலமாகி இருந்தது. நேரம் மாலை 03 மணி ஆகிவிட்டதனால் இன்று இருள்வதற்கிடையில் எப்படியும் கிளிநொச்சி நகரத்தை மீட்டுவிடவேண்டும் என்ற உள்மன ஆழத்தில் எல்லோரும் இருந்தோம். மீண்டும் ஒரு சேர எல்லோரினதும் தாக்குதல்கள் முன்பக்கமாக தொடங்கப்பட்டது. மேஜர் பிரியக்கோன் இப்போது களமிறங்கிவிட்டான். டேய் அடிச்சுக் கொண்டே உள்ளே போவம் என்று அவனே இறுதிக்கட்ட சண்டையை தொடங்கினான். பலமுறை தாக்குதலை எதிர்கொள்ள எதிரியும் தயாராக சண்டை உக்கிரமடைந்தது. எதிரியின் தாக்குதலை முறியடித்தவாறு தொடர்ந்து முன்னேறிக்கொண்டே இருந்தோம். ஒரு குறிப்பிட்டளவு தூரத்தைக் கடந்து நாமும் எதிரியோடு எதிரியாக கட்டடத்தில் புகுந்து குறிப்பிட்டளவு எதிரியை தாக்கி அழித்துவிட்டு அடுத்தகட்டத் தாக்குதலை தயார்ப்படுத்தினோம்.


வழமைபோல மேஜர் பிரியக்கோன் சண்டையை தொடங்கினான். அவனது கைக்குண்டொன்று எதிரியின் இருப்பிடம் சென்று தனது வேலையை முடித்தது. எல்லா இடங்களிலிருந்தும் எதிரிதாக்கத் தொடங்கினான். ஓடிவா... ,ஓடிவா... எனச்சொல்லி சொல்லி சுட்டுக்கொண்டே முன்சென்ற பிரியக்கோனின் உடலை எதிரியின் துப்பாக்கி ஒன்று பதம்பார்த்து ஓய்ந் தது. எங்கோ கட்டடத்தின் மேலே இருந்து எதிரி சுட் டிருக்க வேண்டும். கீழே விழுந்தவன் தனது உடலில் ஏற்பட்ட காயத்தையும் பாராது படுத்தவாறே கட்டடத்தின் மேல்நோக்கிச் சுட்டுக்கொண்டிருக்க ஐயோ அம்மா...வென மறுபக்கம் புரண்டான். எங்கள் பிரியக்கோனுக்கு மீண்டும்சூடுபட்டு விட்டது. மச்சான் என்னை பார்க்காதயுங்கோ... சுடுங்கடா... என்று சொன்னவறே நாதளதளத்தான். அவனுக்கு வியத்துக்கொட்டியது. ஐயோ பிரியக்கோன்... என ஓடிச்சென்று, மருந்துகட்ட முற்பட்டபோது அவனது கை அதைத்தடுத்தது. வேண்டாம்... என்று ஏதோசொல்ல நினைத்தவன் கை சாடையில் என்னை விட்டுவிட்டு போங்கோ... என கைகாட்டினான்.

அப்போதுதான் அந்த அற்புதமானவனின் முன்னைய சம்பவம் ஒன்று ஞாபகம் வந்தது. ஆனையிறவு பரந்தன் சண்டையில் காயமடைந்த அந்த மருத்துவப்போராளியை ஏனடா காயத்திற்கு மருந்துகட்டேல... என்று கேட்க, சே..இதென்னடா காயம்... இதற்கு கட்டு கிற மருந்தை இன்னுமொரு போராளிக்கு கட்டினால் காப்பாற்றிவிடுவேன்... என்று சொன்ன அந்த புனிதமான மருத்துவப் போராளி மேஜர் பிரியக்கோன் இப்போதும் அதே சேதியை சொல் லுவதாகவே இருந்தது. நான் மீண்டும் மருந்து கட்ட உடலில் கை வைக்க என்னை தடுத்தவன் ஏக்கத்துடன் ஏதோ சொல்ல நினைத்து உயிர் பிரியும் வேளையிலும் தனது இயலாத ஒரு கரத்தால் மண்ணை அள்ளியவாறே தாய் நாட்டின் விடுதலைக்கு வித்தாகிப் போனான். ஒவ்வொரு மாவீரரினதும் சாவு என்பது சரித்திரத்தின் புதிய உயிர்ப்பாக ஒளிர்கிறது.

எமக்கு மருத்துவப்போராளியாக மட்டும் அல்லாது அன்னையாய் எல்லா உறவுமாக இருந்தவன், தனது தாய் நாட்டின் விடிவிற்காய் மண்மீட்க வந்தவன் மண்மீட்பின் வெற்றியுடனேயே தாய் மண்ணையும் அள்ளி முத்தமிட்டு வெற்றி வெற்றி எனச்சொல்லிச் சென்றுவிட்டான். அந்த வீரனின் உயிர்மூச்சிலுறைத்த தாயக தாகமே அன்று கிளிநகரை மீட்டெடுக்க எமக்கு உயிரோட்டமாகி உந்தித்தள்ளியது.




## யமலோகத்தில்



யமன்:- மாலை மணி சரியாக மூண்டுதானே கந்தனின்ர கடைசி நேரம்...? 2.45க்கு ஏன் எடுத்தாய்?

தூதன்:- செல்லைக் கழற்று வான் எண்டு பார்த்தா... அந்தரப்பட்டு குத்திப் போட்டான் பிரபு..!

# சங்கைக்கழுகிறமே சபையார் சிரிக்காம...




பிச்சைக்காறக்கந்தசாமியர் செத்துப்போனார்.

முச்சக்கரவண்டியிலிருந்து இறக்கப்பட்ட சவப்பெட்டி பத்தாயிரம் ரூபாய். மாலை முன்னூறு ரூபாய் பத்துக்குப்பத்தடி நூறடி தகரப்பந்தல், முன்னூறு பிளாஸ்டிக் கதிரை, ரீவீயில ரேடியோவிலயெல் லாம் அஞ்சலி, லவுஸ்பீக்கரில இழவு சொல்லும் வயதானவர், இடையிடையே தேவாரம்பாடிக் கொண்டும் போனார். இதற்காக அவருக்கு விசேடபடி. கந்தசாமியர் செத்துப்போனார்.

கிழவன் கிடையில் விழ முதலே பெண்சாதி வந்துவிட்டாள். வெளிநாட்டிலிருந்து பிள்ளைகள் வர முடியாது பணம் அனுப்புகிறோம் நல்லவடிவாச் செய்யுங்கோ என்று ரெலிபோனில் சொல்லிவிட்டார்கள்.

"கந்தசாமி இறுதி மூச்சுவரை பிள்ளையள் வரயில்லயே பிள்ளையள் வரயில்லயே எண்டபடிதான். நினைவு தப்பின பிறகு நான்தான் கையப்புடிச்சு மோன் வந்திருக்கிறன் எண்டநான்." சீவன் பெயர்சொல்லி அழைக்க வாய்வரவில்லை. அப்படி உரிமையாக அழைப்பதை அவர்கள் விரும்புவார்களோ... மன உறுத்தல் இருந்தது. தங்கை இருந்தால்... உரிமையோடு போகக்கூடிய வீடு தான். அவள் இல்லாவிட்டாலும் அவள் கணவன் இருக்கத்தான் செய்வான் எப்போதுமே இறுமாப்பு அவனுடனிருக்கும். எப்படி யாரோ வரும் சந்தடி கம்பிக்கதவின் சிறு சந்தினூடாகப் பார்க்கிறாள். வருவது கமலினி. அதே கறுப்புக்கன்னம் வரிசைப்பறக்கள் சிவந்த உதடுகள் சுருண்ட தலைமுடி குழந்தையில் சரியாக ஒரு ஆறுவயதில் பார்த்திருந்த அந்த முகம் கமலினிதான். "ஆர்..." என்றவள் சற்றுத் திகைத்துப் பின் "டீயேய் நந்தினீ... பெரியம்மாடி" என்று குரல் கொடுத்தவாறே கதவைத் திறக்கிறாள் உள்ளே பதினான்கு வருடங்களுக்கு முன் பார்த்த அந்தப் பழையவீட்டின் ஒரு பகுதி அழிந்துபோக ஒரு பகுதி திருத்திக் கட்டப்பட்டிருந்தது.

"வாங்கோ பெரியம்மா.... வாங்கோ..."

அவள் நினைத்தது போலல்லாமல் வரவேற்பு பெரிதாகவேயிருந்தது. நந்தினி தனியாக ஒரு வீட்டைக் கட்டியிருந்தாள். அங்கே தான் அவளையும் கூட்டிக்கொண்டு கமலினி நடந்தாள்.

நந்தினியின் வீடு மிக அலங்காரமாகக் கட்டப்பட்டிருந்தாலும் அழகாகப் பேணப்படவில்லை. கதிரைகள் கோணல்மாணலாகச் சிதறிக் கிடந்தன. குளிர் பதனப்பெட்டி, அறுயரத்தில் தொலைக்காட்சிப்பெட்டி, டெக், இரண்டும் வரவேற்பறையில் கிடந்தன. பின்புறம் தொலைபேசி இருந்தது. காறை பெயர்ந்துபோன அவர்களின் பழைய வீடு அவள் நினைவுக்கு வந்தது. அதைப் பழுது பார்த்து யாருக்காவது வாடகைக்கு விடுவதற்கே அப்போது வசதியிருக்கவில்லை. அக்காளும் தங்கையும். மாறிமாறிப் பேசிக் கொண்டிருந்தார்கள். இரண்டு சிறுவர்கள் முழு நிர்வாணமாக அழுக்கடைந்துபோய் ஓடிவந்தார்கள், பேசிக்கொண்டிருந்த போதே இடையே புகுந்து ஒருவனையொருவன் அடித்தான், போங்கடா அங்கால என்று நந்தினி அவர்களை அடித்தாள். அழுக்குத் துணிகள் ஆங்காங்கே போட்டுக்கிடந்தது. அவர்களின் பழைய வாழ்க்கைமுறை அப்படியேயிருப்பதைத் தெரிவித்தது. நந்தினிகூட ஒரு அழுக்குச் சட்டைதான் போட்டிருந்தாள். "வந்துசேர்ந்த நேரத்துக்குஒரு தேத்தண்ணி தரமாட்டியளோ" அவளாகத்தான்கேட்டாள்.

"ஓ... அதை மறந்து போனம்..." என்றவாறே குளிர் பதனப் பெட்டிக்குள்ளிருந்து ஒரு சோடாவை எடுத்து கிண்ணத்தில் வார்த்துக் கொடுத்தாள்.

நல்ல இடத்தில் திருமணம் செய்திருப்பாள்போலும். கமலினியின் வாழ்க்கை வசதியாக இருக்கவில்லை.. நந்தினியின் கதையில் லட்சங்கள் புரண்டன.

"ரெண்டு லச்சத்துக்கு வாங்கின நகை, எட்டுலச்சத்துக்கு மேல சிலவு. லச்சக்கணக்கில போட்டு படிக்கவைக்கிறன்" என்று வளர்ந்தது பேச்சு.

இரண்டு அண்ணன்மார் வெளிநாடுகளில் சம்பாதித்தார்கள். அக்காள் நல்ல இடத்தில் வெளிநாட்டிலேயே திருமணம் செய்துகொண்டு போயிருந்தாள். தாயும்கூட மத்திய கிழக்கில் எங்கோ வேலை செய்தாள். தந்தை. கந்தசாமி இதுவரை எங்கேயோபோயிருந்தவன். இப்போதுதான் வருவதாக கமலினி சொன்னாள். காணவில்லை, ஆனால் வாசற்படலையிலிருந்து ஒரு வயோதிபர் தடியூன்றியவாறு மெல்லமெல்ல வந்துகொண்டிருந்தார். அழுக்கடைந்து கிழிந்துபோன ஒரு சாரம்கட்டி மேலே ஒரு அழுக்குச் சேட்டணிந்திருந்த அந்த வயோதிபனை தூரத்திலிருந்தே கண்ட நந்தினி கத்தினாள் "இஞ்சேயேன் வாறாய் இஞ்சவராத... போய் போய் அங்க கிட"

அவர் அதைக் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. "ஆர் வந்த... பெரியம்மா வந்தவளாம்"

என்றபோதுதான் அவள் அதிர்ந்தாள். அது... தங்கையின் கணவன். அவளுடைய மைத்துனன். "என்ன...கோலமுது.. எங்கயிருந்து வாறியள்" என்ற அவளுடைய கேள்விக்குப்பதில் இல்லை" "பிள்ளை எப்பன் தேத்தண்ணிதாவன். நான் போறன்" என்றார் அவர்.

"நான் தேத்தண்ணி வைக்கேல்ல"

"என்ர குஞ்செல்லே எப்பன் வைச்சுத்தாணை"

அவர் வெகுநேரம் வெளிவாசலில் குந்தியிருந்தார். "இந்தாங்கோ இந்தச் சோடாவைக் குடியுங்கோ"என்று தூக்கிக்கொடுத்தான் நிர்வாணமாக நின்ற பேரன். அதை வாங்கிய கந்தசாமி அழுதவாறே கமலினியின் வீடுநோக்கிப் போனார். முற்றத்துப் புழுதியில் மாமர நிழலில் படுத்துக்கொண்டார்.

இப்போது இவளுக்கு தான் வந்தவிடயம் முற்றாக மறந்து போனது. ஒரு ஐயாயிரம்ரூபாய் கடனாகக் கேட்க வந்தவள் தன் மனதுக்குள்ளேயே அதை அடக்கிக் கொண்டாள்.

"ஏன் கொண்ணையாக்கள் காசனுப்பிறேல்லயே. அம்மா ஏன் சவுதிக்குப் போனவா"

"அவவுக்கு கொழுப்பு, அவங்களும் எங்க, அங்கயும் கஷ்டந்தானாம். என்றாள் நந்தினி.

அவள் எழுந்து "அப்ப நான் வாறன்" என்றாள். நேரம் பகல் ஒரு மணியைத் தாண்டியிருந்தது. என்றாலும் "பெரியம்மா சாப்பிடுங்கோவன" என்று யாரும் கேட்கவில்லை.

அவள் அப்படியே கமலினி இருந்த பழைய வீட்டுக்குப் போனாள். அங்கும் ஒரு தொலைக் காட்சிப்பெட்டியில் ஏதோ நாடகம் போய்க்கொண்டிருந்தது.. நல்ல வேளை வன்னியில் இந்தத் தொந்தரவு குறைவு. பெண்களைக் கவரும் அழகு.சாதனங்கள் சோப்புகள் பானங்கள், பிஸ்கட் வகைகள் என்பவற்றுக்கான விளம்பரங்கள் அவர்களைக் கவரக் கூடியதாக வந்துபோனது. "ம்...

நல்ல நாடகங்கள். அத்தை,சித்தி, குங்குமம், கோலங்கள், கோபுரம், தாலி, மெட்டியொலி, அகல்யா அட அட பெண்களை அழவச்சே வாங்குறவரயுக்கயே நினைச்சன்"

அவள் தனக்குள் விரக்தியாகச் சிரித்துக்கொண்டாலும் நான் வந்திருக்கக் கூடாது. என மறுகினாள்.

பஸ் அவளருகே நின்று அவளை விழுங்கியது.

"அம்மா... அந்தியேட்டிக்கு நல்லூரிலயிருந்து மேளங் கொண்டரவேணும்"

அது... இல்லாமலே எங்கட ஊரில செய்யிறது போலதான் போனபோது நான் பக்கத்தில் நின்றேன் என்பதுகூடப் பெருமையாகப் பேசப்பட்டது.

கந்தசாமிக்கு சவக்கிரிகை செய்யவேணும். அவன்தீட்சை கேட்டவனில்லைத்தான். அதனாலென்ன அது ஐயா காசுகட்டினா செய்வார். என்றாள் மனைவி.

அவளும் அங்கேதான் இருந்தாள் கடந்த இரண்டுமாதங்களின் முன் அங்கு வந்ததன் பின் கந்தசாமியை கடைத்தெருவில் கண்டவள். பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். அவளுக்கு மிகவும் கஷ்டமான நிலை. உதவ இனி ஒருவரும் இல்லை. கேட்கவோ பார்க்கவோ இனி ஒருவரும் இல்லை. அவளுக்கு என்னசெய்வதென்று தெரியாத நிலையில்தான் அங்கு போவதென்று முடிவெடுத்தாள் என்னவோ மனதுக்கு கஷ்டமாத்தான் இருக்கு.

வீட்டுப்படலை ச்சாய் அது படலையில்லை உருக்குக் கம்பியில் செய்த உறுதியான கதவு. ரெட்டைக்கதவு. உட்புறம் பூட்டப்பட்டிருந்தது. மதிலுக்கு அப்பால் ஆடிய வாழைகளும் ஒற்றைத்தென்னையும் அவளைப் பலவருடங்களுக்குப் பின் இப்போதுதான் சந்திக்கின்றன. நந்தினியும் கமலியும்கூட.

ஏறக்குறைய பதினான்கு வருடங்கள் வட்டுகளில் புதுக் குரும்பைகளுடன் நின்ற தென்னை இப்போது வானத்தைத் தொட்டிருந்தது. வாழைகள் மீளச் செப்பனிடாமலே ஊசிபத்திப்போய் நின்றன. உள்ளே பேச்சுக்குரல் கேட்டது.

"பிள்ளை... பிள்ளை..." சாமானுகள வித்துப்போடுறாங்கள். அவள் புறுபுறுத்தாள். 'கிழவன் மாமரத்துக்குக்கீழே பிரண்டு போச்சு' கமலினி புறுபுறுத்தாள்.

கிழவன், மூன்று பிள்ளைகளும் மனைவியும் வெளிநாட்டில் உழைக்க இங்கே ஒருவேளை சோற்றுக்கும் தேத்தண்ணீருக்கும் பிள்ளைகளைக் கெஞ்சியும் கிடைக்காமல் பசியில் விழுந்து போய்க்கிடந்தது.

"என்ன பெரியம்மா கன நாளைக்குப் பிறகு வந்தநீங்கள் சொல்லுங்கோ..."

"நான் ஒரு ஐயாயிரம்ரூபா மாறுவம் எண்டு..." நேரடியாகவே சொன்னாள். "ஐயோ... எங்க பெரியம்மா அவங்கள் காசனுப்பினாத்தானே. இஞ்சயே கஷ்டம்." "ம் எல்லார்பாடும் அப்பிடித்தான்... கொண்ணன்ர விலாசமிருந்தாத் தாவன்" என்னட்ட இல்லப் பெரியம்மா... நந்தினியிட்டத்தான் இருக்கு அவள் எனக்கே தரமாட்டாள். அவனிடம் காசுகேட்பேன் என்ற பயமோ! அவள் புறப்பட்டு வெளியே வந்தாள். கந்தசாமி தலையைத்தூக்கிப்பார்த்தான். தன் கையில் வைத்திருந்த ஐம்பது ரூபாவை அவனிடம் கொடுத்தவள், அப்ப 'நான் போயிற்றுவாறன்' என்றபடி வெளியேறினாள்.

கடவைக்கருகே பஸ் தரிப்பு நிலையம் இருந்தது. மதிலுக் குப் பின்புறம் பேச்சுக்குரல்கேட்டது -பஸ் இன்னும் வரவில்லை.

"பெரியம்மா - காசுக்காம் வந்தது"

"குடுத்திட்டு என்னண்டு செய்யவேணும். அந்தாள் எவளத்த உழைச்சு.... உந்தப்பிள்ளையள வெளியில அனுப்ப என்னபாடுபட்டது...

அவள் கந்தசாமியின் உடலருகே நின்று மீண்டும்,


"என்ர ராசா... என்னத் தனிய விட்டிட்டுப் போனியோ... ஐயா... கோட்டையில் வாசலய்யா... இண்டைக்கு கூகை குடிகொள்ளுதெல்லோ... இவளுக்குந்தான் பொறுக்குதில்லை. தங்கையைக் கட்டிக் கொண்டு கதறுறாள்.

அய்யோ...நாங்கள் ஒப்புக்கழுகிறமே ஊரார் சிரியாம...

நாங்கள் சங்கைக் கழுகிறமே சபையார் சிரிக்காம...

ஆ........ஹ..........ஹ..........அ... மூக்கைச் சிந்திச் சுவரில் தடவியபடி கழுத்துச்சங்கிலியை எடுத்து முன்னுக்கு விட்டுக்கொண்டாள்.

தமிழ்க்கவி




## கடைக்குப் போகவேண்டாம்




உந்தக் கடைக்குப் போக வேண்டாமப்பா.... மிதிவெடி... மிதிவெடி... எண்டு சத்தம் போடுகினம்.



கவிதைகள்

# முதிர் கன்னியின் பாடல்

கட்டாயமான வாழ்வு
நெஞ்சு நிறைய
ஆசை.
பூட்டுப் போடும்
மானம்.
மாடி வீட்டு மகுடத்தில்
திறப்பு.

"நிரந்தர ஏழையை
நிமிர விடாது அழுத்தும்
நேர்மை"

நேர்மை சுமந்து
படிகளை உதைத்து
உயரப் போனேன்.
கடைசிப் படியைப் போல
முதுமை வளர்க்கும்
நரையும்.
இளமை குடிக்கும்
திரையும்,
என்னை
நெருங்கி விட்டன.

இளமைதின்ற - கிழமை
எனதுணர்வுகளையும்
உறிஞ்சி விட்டது.
ஆதலால் இப்போதெல்லாம்
மாலை சூடும் நாளை எண்ணி
"மௌனத்தின் மீது
குந்தியிருந்து
ஒப்பாரி பாடுவதில்லை"

மாறாக
"என் பிறவா
மழலைகளை
ஆயுட்கால துன்பியலில் இருந்து
பாதுகாத்ததாய்
திருப்திப்படுகின்றேன"

தொடரட்டும்
கட்டாயமான வாழ்வு
வாழ்ந்து விட்டால் சாவு
சாவோடு முடிகிறது
இந்த ஏழையின் பாடல்.

"கறுப்பு நிலா"

# அன்றைய ஞாபகம்

மறக்குமா
அந்த நிமிடங்கள்
மஞ்சள் நில வொளிக்கு
மறைக்க முடியாமல்
தெரிந்து போயிற்று
தேகம் அவனுக்கு.
வேண்டுதல்கள் தோற்றது
வேதம் பொய்த்தது
நெற்றியால் வடிந்தது
இரத்தம்.
சத்தமில்லை,
அசைவில்லை,
புரிந்து போனதெனக்கு.
அச்சமில்லை, அலறவில்லை.
இன்னும் கிடக்கிறோம்.
வந்த வேலை முடியும்வரை
மூன்றாமவனும் அலறுகிறான்
இழுத்து அவன் வாயை
பொத்தியபடி நான்,
கண்ஜைசத்த என் கேள்விக்கு
பதிலில்லை.
நிலமை மோசமாக
தயாராகிறேன்
எனது பதிலுக்காக.....
இன்னொரு முனகல்
அதோடு அந்த இரவு
இடிந்து மூடிக் கொண்டதாக
எனக்கு ஞாபகம்
இன்று
ஒரு கல்லறை
ஒரு ஊன்று கோலோடு
நான் மட்டும் முழுதாக
நிலவின் வண்ணங்களை
பார்க்கமுடியாமல்.....

ப.அருள்நேசன்

## படித்ததில் பிடித்தது

### கானாநாட்டுக் கவிதை
### கருணைக்காய் ஒரு மனு


இந்த மண்ணின் மைந்தர்கள்
நாம்.
உன் ஆலயத்துக்கு
கும்பிட வந்திருக்கிறோம்.
நிர்வாண மேய்ப்போன்
பசுக்களை
பத்திரமாய் கூட்டி வந்து
வீடு சேர்த்து விட்டு
நெற்றியில் உருளும்
மழைநீரைத் துடைத்து விட்டபடி
தன் மூங்கில் புல்லாங்குழலுடன்
அமைதியாய் நிற்கிறான்.

பாடப்படாத ராகங்களுடன்
விடியலின் வரவை நோக்கி
பறவைகள் தம் கூடுகளில்
தூங்கி வழிகின்றன.

கரையில் குவியும் நிழல்கள்
தங்கள் இதழ்களை
கடலின் மார்பகங்களில்
இறுகப் பதிக்கின்றன.
உழைப்பு முடிந்து
வீடுவந்த
உழவர் கூட்டம்
கணப்பருகே இருந்தபடி
பழங்கதை சொல்கின்றனர்.

எங்கள் இதயங்களில்
பாடல் நிறைந்திருக்கையில்
துக்கத்தில்
எங்கள் இதழ்கள்
நடுங்குகையில்
இந்த மண்ணின் மைந்தர்
ஏன்
உன் ஆலயத்துக்கு முன்
கெஞ்சிக் கொண்டிருக்கவேண்டும்?
மின்மினி தாரகைகளோடும்
கணப்பின் தீ சூரியனோடும்
சுரைக்குடுவை நீர்
வலிய வோல்ரா நதியோடும்
போட்டி போடுகையில்
கந்தைகளே சொந்தமான
ஏழ்மையோடு
பிச்சை கேட்டு
நாம்
எசமான் வீட்டுக் கதவருகே
வந்திருக்கிறோம்.

ஆங்கிலத்தில்:- குவேசி புறா
தமிழில்:- வின்சென்றபுஸோறன்ஸ்



1994இன் ஆரம்பத்தில் காலமான டானியல் அன்ரனி அவர்களின் சிறுகதைத் தொகுப்பு ஒன்று விரைவில் வெளிவர இருப்பதாக அறியப்படுகிறது.

ஏற்கனவே 1987இல் "வலை" என்ற அவரது சிறுகதைத்தொகுப்பு வெளிவந்து பலரதும் கவனத்தை ஈர்த்தது. சிறிலங்கா அரசு அப்போது யாழ்ப்பாணமக்கள் மீது விதித்த கடல் வலய சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உயிர்ப்புள்ள வாழ்க்கையினை முழுமையாக இத்தொகுதியில் உள்ள சிறுகதைகளில் இனங்கண்டு கொள்ளலாம்.

# இலக்கியப்பகிர்வு

"தமிழ் இலக்கியப்பரப்பில் புதிய பரிமாணங்களை எல்லைகளை தொட்டு வளர்த்து வருபவர்களில் டானியல் அன்ரனி முதன்மையான ஒருவர் என்பதை "வலை"என்னும் இவரது சிறுகதைத் தொகுதி நிலை நிறுத்துகிறது என அப்போது "வலை" தொடர்பாகக் குறிப்பிடப்பட்டது. இப்போது அவர் எழுதிய சகல சிறுகதைகளையும் தொகுத்து தொகுப்பாக வெளியிட முனைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையைப்பிறப்பிடமாகக் கொண்ட டானியல் அன்ரனி வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தில் வெளிக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர்.

"கலை இலக்கிய முயற்சிகள் அனைத்தும் ஒரு புதிய வாழ்க்கைக்கான மாபெரும் போராட்டத்தின் ஒருபகுதி"என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இயங்கியவர் டானியல் அன்ரனி அவர்கள்.

ஒருபடைப்பாளியாக ஒரு சஞ்சிகை ஆசிரியராக, விமர்சகராக செயற்பட்ட அவர் தனது 47வயதில் மரணமடைந்தது துரதிர்ஷ்டவசமானதே.

எழுதும்ஆர்வத்தால் ஆரம்பத்தில் அவர் எழுதிய கதைகளுக்கும் பின்னர் நல்ல இலக்கியங்கள் தொடர்பினால் ஏற்பட்ட மாற்றத்தினால் அவர் எழுதத் தொடங்கிய கதைகளுக்கும் இடையே பாரிய வித்தியாசம் இருந்ததாக அப்போது அவருடைய நண்பர்கள் கூறுவார்கள்.



அவரது படைப்புகள் உழைக்கும் மக்களின் மேம்பாடு தொடர்பான கதைகளாக பின்னாளில் அமைந்தன.சமூகப் பார்வை கொண்டவையாக அவை திகழ்ந்தன.வீரகேசரி, சிந்தாமணி, மல்லிகை, கணையாழி, தாயகம், மாற்று போன்ற பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகின.

டானியல் அன்ரனி அவர்களின் இலக்கிய வெளிப்பாட்டுக்காலம். வியட்நாம் போர் நடைபெற்ற காலம், அதேவேளை யாழ்ப்பாணத்தில் சாதிப் போராட்டத்தின் தாக்கமும் சீனப் புரட்சியால் மாஓவின் மேன்மையும் நிலவியகாலம் இவைபல படைப்பாளிகளை பாதித்தது போலவே டானியல் அன்ரனியையும் பாதித்ததாகச் சொல்லுவார்கள்.



1970இல் யாழ்ப்பாணத்தில் செம்மலர் என்ற இலக்கிய வட்டத்தினை டானியல் அன்ரனி போன்றவர்கள் உருவாக்கினார்கள். அதில் ராதேயன் (தற்போதைய நமது ஈழநாடு ஆசிரியர்) பாலகிரி, சசி கிருஸ்ணமூர்த்தி போன்றவர்கள் முக்கியமானவர்களாகச் செயற்பட்டார்கள்."செம்மலர்" அமைப்பின் தலைவராக டானியல் அன்ரனி செயற்பட்டார். செம்மலர் வட்டம் இலக்கியக் கலந்துரையாடல்களையும் நூல் விமர்சனங்களையும் செய்து தமது இலக்கியப் பசியைப் போக்க முனைந்தனர்.

வ.ஐ.ச. ஜெயபாலன், நந்தினி சேவியர்,பூநகரி மரியதாஸ், சேரன், திக்குவலைகமால், அன்பு ஜலிஹா்ஷா, கலைவாதிகலீல் போன்றவர்களும் அவ்வப்போது இந்த வட்டத்தில் இணைந்து செயற்பட்டார்கள்.

"செம்மலர்"வட்ட செயற்பாட்டின் ஒரு பகுதியாக "அணு"என்ற சஞ்சிகையினை வெளியிட முனைந்தனர்.எனினும் இரண்டு இதழ்களுடன் அது நின்று போனது.

எனினும் சில ஆண்டுகள் கழித்து டானியல் அன்ரனி தனது தீராத தனித்த முயற்சியினால் "சமர்" என்ற சிறுசஞ்சிகையை ஆரம்பித்தார்.இலக்கிய பெறுமதி மிக்கதாக வெளிவந்த அது கிட்டத்தட்ட எட்டு இதழ்கள் வெளிவந்தபின்னர் வெளியீட்டை நிறுத்திக் கொண்டது.

எட்டு இதழ்களிலும் அவர் சாதித்தது கணிசமானது. பேராசிரியர் க.கைலாசபதி, சேரன், எம்.ஏ.நு'.மான், வ.ஐ.ச.ஜெயபாலன், முருகையன், சாந்தன், கே.எஸ்.சிவகுமாரன், கந்தையா சண்முகலிங்கம் போன்ற பல இலக்கியவாதிகளின் படைப்புகளுக்கு "சமர்"களம் கொடுத்தது. 1985களின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கலாச்சார அமைப்பாக கால்ஊன்றிய யாழ். கலாச்சாரக் குழுவிலும் அது வெளியிட்ட "எக்காளம்" சஞ்சிகை வெளியீட்டிலும் டானியல் அன்ரனி ஆர்வத்துடன் செயற்பட்டார்.

யாழ் கலாச்சாரக்குழு பின்னர் தமிழர் கலாச்சார அவையாக மாறி வின்சர்தியேட்டரில் வாராந்த கலை நிகழ்ச்சிகளை நடத்திய போதும் டானியல் அன்ரனி இணைந்து செயற்பட்டார்.

அவர் இறக்கும்வரை சகஇலக்கிய நண்பர்களுடன் மென்மையான சுபாவத்துடன் ஆழமாக பழகியே வந்தார். பல்வேறு வாழ்வியல் கஷ்டங்களை அவர் எதிர்கொண்ட போதும் முற்போக்கு சிந்தனை கொண்ட உயர்ந்த பண்பாளராக மிளிர்ந்தார்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு அவரது முழுச்சிறுகதைகளையும் தொகுத்து தற்போது புலம் பெயர் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டு வரும் அவர் சகோதரர் டானியல் ஜீவா அவர்களின் முயற்சியினாலும், கவிதைகளில் ஆர்வம் உள்ள அவரது மற்றொரு சகோதரரான டானியல் அன்ரனி அவர்களின் முயற்சியினாலும் தொகுப்பாக வருவது அவசியமானதே.

இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

## மிதிவெடிப்பாதை



சுப்பு! நீ என்ர காதலை
ஏற்கேல்லை எண்டு சொன்னா
நான் உந்த மிதிவெடி ஒற்றையடிப் பாதையால போடுவன்.




# இயற்கைக்கு திரும்புதல் இதுவே நவீன அறிவியல்...

அதிவேகக் கணனி, விண்வெளிப்பயணம்,எனநாளும் நாளும் கவர்ச்சியான செய்திகளாக வரும் புதுப்புனைவுகள்தான் அறிவியலின் நவீனம் என்று நீங்கள் மயங்கினீர்களானால் அதுவே உங்களில் பெருந்தவறாகும்.

உண்மைதான். திகைக்காதீர்கள்-

உயர்தொழில்நுட்பம் தான் இன்றுள்ள உலகின் அறிவியல் என நீங்கள் நினைத்தீர்களானால் அது உங்களின் முட்டாள்த்தனம். அப்படியானால் எது தான் நவீன அறிவியல் என்ற கேள்வி உங்களுக்கு எழலாம்.

இயற்கைக்கு திரும்புதல் தான் நவீன அறிவியல்.

இயற்கைக்கு திரும்புதல் என்பது என்ன? என்ற குழப்பமும் உங்களுக்குவரும்.

இன்றைய அறிவியல் முழுச்செயற்கை .

செயற்கை என்றால் உண்ணும் உணவிலிருந்து உடுக்கும் உடை, சுவாசிக்கும் காற்று எல்லாம் செயற்கை, அதாவது செயற்கையாக்கப்பட்ட இயற்கை. இதனால் இன்று உடலுக்கும் வாழ்வுக்கும் கடும் கேடு ஏற்பட்டுவிட்டது. குறிப்பாக தொழில்நுட்பம் வளர்ந்த நாடுகளில்தான் இப்பிரச்சினை அதிகம்.

உண்ணும் உணவில், இரசாயனங்களால் விளைந்த புறோயிலர் கோழிகளின் இறைச்சியினால் உடல் உபாதைகள் (பெண்கள் சிறுவயதில் பூப்படைதல் உட்பட) மரபணு மாற்றம் செய்யப்பட்ட காய் கறிகள், செயற்கை உரம், கிருமிநாசினிகளில் விழைந்தவை உள்ளிட்ட உணவுகளில் நுழைந்த செயற்கையால் மனிதனின் அடிப்படை வாழ்வே சிதைந்து போய்விட்டது. செயற்கைகளுள் வாழ்வு மற்றொரு வகை உபாதை.



இதிலிருந்து விடுபடலே அறிவியலின் முதன்மையான வளர்ச்சி. அதற்காக அறிவியல் இயற்கையை நோக்கித்திருப்பியிருக்கின்றது.

இயற்கையில் சைவ உணவு வகைகளை (மரக்கறி) உற்பத்திசெய்தல், கால்நடைகளை வளர்த்தல் பற்றியே அறிவியல் இயற்கையில் ஆராயப்படுகின்றது.

இதில் முதன்மை நாடுகளாக அமெரிக்கா,பிரிட்டன், ஜேர்மனி,இஸ்ரேல்,இந்தியா ஆகியன உள்ளன. குறிப்பாக இயற்கை தொழில்நுட்பத்தில் கூடுதலாக இஸ்ரேல் வளர்ச்சியடைந்துவருகின்றது.

இன்று உலகளவில் இயற்கையில் விளையும் உணவுப் பொருட்களின் விலை ஏனையவற்றின் விலையை



விட இரண்டு மடங்கு அதிகம். மேற்குலகினரும், அமெரிக்கரும் கிழக்கு உலகினரும், இயற்கைகளில் விளையும் பொருட்களை அதிகம் நாடுகின்றனர்.

இன்று அதிக கிராக்கி அதற்கே உள்ளது.


பூகோள மயமாக்கல் என்ற இன்றைய பொருளாதார கொள்கையில் சிறிய விவசாய நாடுகள் வாழ இந்த இயற்கை விவசாயமேஆதாரமாக இருக்கப்போகிறது. சிங்கள தேசத்தில் ஏற்றுமதிக்கிராமம் என்ற கொள்கை அடிப்படையில் முழுதும் இயற்கையில் விளைவு மேற்கொள்ளல் நடக்கின்றது. முழுதும் இயற்கை வேளாண்மையில் விளையும் ஒரு கிலோ அரிசி 80 ரூபா. வெளிநாடுகளுக்கு இது ஏற்றுமதியாகின்றது.

வேளாண் நிலங்களை அதிகம்கொண்ட நெல் உற்பத்தி அதிகம் கொண்ட நாம் நவீன இயற்கை வேளாண் உத்திகளைக்கொண்டால் இந் நெல்லை நல்ல விலைக்கு சந்தைப் படுத்தலாம். இதற்கான வழிகளை நாடவேண்டும். வன்னியில் இதற்குரிய அடிப்படைத்திட்டம் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராச நாயகத்திடம் உண்டு.

எங்கோ சென்ற நாம் எங்கோ வந்துவிட்டோம் என நினைக்கிறோம். நவீன அறிவியல் இப்பொழுது எதுவென்பதைப் பற்றிச் சொல்லப்போனதால் எங்களின் பிரச்சினைக்கு வந்துவிட்டோம். அதிநவீன அறிவியல் இயற்கைக்குத் திரும்புதல் இந்த இயற்கைக்குத் திரும்புதல்தான் நமக்கான ஒரு வாய்ப்பை பூகோளமயமாக்கல் பொருளாதாரத்துக்கு ஏற்ப வாழவிடப்போவதாகும்.



**த.அருவி**




## குந்தைக்கு காய்ச்சலா?

காய்ச்சல் கண்ட குழந்தைக்கு சிறுநீர் மஞ்சள் நிறத்தில் வெளியேறும், நாவறட்சி, தாகம் ஆகியன ஏற்படும்.

சாதாரண காய்ச்சலில் டெம்பரேச்சரைக் குறைக்க பாரஸிட்டமால் திரவம் ஐந்து சொட்டுகள் வரை 3-4 மணி நேர இடைவெளிகளில் கொடுக்கலாம். மருந்தின் அளவைக் கூட்டவோ, குறைக்கவோ கூடாது. குழந்தையை வெப்பத்திலிருந்தும், குளிர்ச்சியிலிருந்தும் காக்க வேண்டும். கோடை காலத்தில் சுத்தமான நீரில் நனைத்த துணியை நெற்றியிலும், தலையிலும் சுற்றி வைக்கலாம். காய்ச்சலின் அளவு குறைந்ததும் எடுத்து விடலாம். குளிர்காலத்தில் வெதுவெதுப்பான துணி கொண்டு குழந்தையைப் போர்த்தி வைக்கலாம்.

காய்ச்சலுற்ற குழந்தை பசியின்மையால் சரிவர உட்கொள்ளாது. மேலும் தாகத்தைத் தெரிவிக்க அதனால் இயலாது. ஆகவே காய்ச்சலில் அவதிப்படும் குழந்தைக்கு உணவும் நீரும் அளவாய்க் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். பார்லி நீர் அல்லது பாலில் குளுக்கோஸ் கலந்து தாராளமாய்க் கொடுத்துக் கொண்டிருந்தால் நீரிழப்பு கட்டுப்படும்.

## கண்ணைக் காக்க!

01) ஓடும் வாகனங்களில் படிக்கக்கூடாது.
02) மங்கலான ஒளியில் படிக்கக்கூடாது.
03) மிகச் சிறு சிறு எழுத்துக்களைப் படிக்க முயலுதல் கூடாது.
04) கண்களில் எண்ணெய் விடுதல் கூடாது.
05) மிக அதிகப் பிரகாசமான ஒளியை நேராகப் பார்த்தலைத் (கண் கூசும் ஒளி) தவிர்க்கவும்.
06) தொலைக்காட்சிக்கு அருகில் அமர்ந்து படம் பார்த்தலைத் தவிர்க்கவும்.
07) தேவையான பொழுது மட்டும் கண் கண்ணாடிகள் தவறாது உபயோகித்தல்.
08) சத்தான உணவுகளை, குறிப்பாக விட்டமின் ஏ உள்ள உணவுகளை, கரட்,பப்பாளி, கீரைவகைகள், மாம்பழம்,பால், முட்டைக்கோஸ் மற்றும் அனைத்து ரக காய்கறிகள், பழங்களை உட்கொள்ளுதல்.
09) சரியான கண் பயிற்சி செய்தல்.
10) மன அழுத்தத்தை குறைத்தல் போன்ற சிலவற்றைக் கடைப்பிடித்து முடிந்த அளவு கண் பார்வையைக் காத்துக் கொள்வோம்.

## குழந்தைக்கு தாய்ப்பால்; ஆகாரம் மட்டுமல்ல...

தாய்ப்பால் என்பது குழந்தைக்கு ஆகாரம் மட்டுமல்ல. அதுதான் தாய்சேய் பந்தத்திற்கான அத்திவாரம். தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுக்கக் கொடுக்க, அவள் மூளையில் சுரக்கும் ஆக்ஸிடோஸின் எனும் ஹார்மோன், அந்த தாய்-சேய் பந்தத்தைப் பலப்படுத்துகிறது.

பால் கொடுக்கும் போதும், தாயின் நெஞ்சில் சாயும்போதும் குழந்தை தன் தாயின் இதயத்துடிப்பை தன்னை அறியாமல் உணர்ந்து கொண்டேதான் இருக்கும். இந்த இதயத்துடிப்பு அது கர்ப்பத்தில் இருந்த அந்த ஒன்பது மாதமும் வெகு அருகில் சதாகேட்டுப் பழகிய தாயிற்றே.... அதனால் அந்த "லப்டப்" சத்தம் அக்குழந்தைக்கு ஓர் இயல்பான தாலாட்டாகி விடுகிறது. எவ்வளவுதான் அழுது ஆர்ப்பாட்டம் செய்யும் பிள்ளையும் தன் தாயின் இடது தோள் மேல் கிடத்தி அணைக்கப்பட்டதும் உடனே கப்சிப் ஆவதற்கு இதுவே காரணம்.

இப்படி தாயும் சேயும் உறவாடுதோதான சந்தர்ப்பம் பாலூட்டும் நேரம் என்பதால் குறைந்தபட்சம் எட்டு மாதம் வரையாவது தாய்ப்பால் தருவது அவசியம். இப்படி ஆக்ஸிடோஸின் மற்றும் அம்மாவின் 'லப்டப்' சத்தம் ஊறிவளரும் குழந்தைகள் பிற்காலத்தில் அதிக தாய்ப் பற்றும், ஸ்திரத்தன்மையும், தன்னம்பிக்கையும் கொண்டவர்களாய் வளர்கிறார்கள் என்பது ஓர் அறிவியல் உண்மையாகும்.

**"எதை சாப்பிட்டாலும், எப்போது சாப்பிட்டாலும் சாப்பிடுவதற்கு முன்பு தூய நீரில் கையை நன்றாகக் கழுவவேண்டும். சவற்காரம் போட்டு கழுவினால் மிகவும் நல்லது. இந்த சுத்தத்தின் மூலம் நம்மை பாதிக்கக்கூடிய 80% நோய்களை தவிர்க்கமுடியும்."**

### போகாதே என்கணவா



போகாதே.....
போகாதே என்கணவா....
அந்த வீதியில் பொல்லாத மிதிவெடிகள் இருக்கக் கனவுகண்டேன்...

# கரும்புலிகள் நாள் 2004 - யூலை 05ஐ முன்னிட்டு

# மாபெரும் விளையாட்டுப்போட்டி

கரும்புலிகள் நாள் 2004-யூலை 5ஆம் திகதியை முன்னிட்டு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் அதன் சங்கங்களும், கரைத்துறைப்பற்று ப.நோ.கூ.சங்கம், முல்லை நகர் புனரமைக்புக் குழு, முல்லைப் பட்டின வர்த்தகர் சங்கம், ப.தெ.வ. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தமிழீழ விளையாட்டுத்துறையினரும் இணைந்து நடத்தும்.

# மாபெரும் விளையாட்டுப்போட்டி

## நிகழ்வுகளின் விபரமும் அவை நடைபெறும் திகதிகளும்
## 2004.07.02 - 2004.07.05

| விளையாட்டு | திகதி நேரம் |
|---|---|
| 1. முன்பள்ளி சிறார்களுக்கானது | 2004.07.02 மாலை 4.00 — 5.00 வரை |
| 2. தலையணைச்சண்டை (ஆண்) | 2004.07.02 மாலை 5.00 — 6.00 வரை |
| தலையணைச்சண்டை (பெண்) | 2004.07.02 மாலை 5.00 — 6.00 வரை |
| 3. கபடி (ஆண்) | 2004.07.02 மாலை 6.00 — 11.00 வரை |
| கபடி (பெண்) | 2004.07.02 மாலை 6.00 — 11.00 வரை |
| 4. கயிறு இழுத்தல் (ஆண்) | 2004.07.03 மாலை 4.00 — 6.00 வரை |
| கயிறு இழுத்தல் (பெண்) | 2004.07.03 மாலை 4.00 — 6.00 வரை |
| 5. குத்துச் சண்டை (தெரிவு விளையாட்டு) | 2004.07.03 மாலை 6.00 — 11.00 வரை |
| 6. மல்யுத்தம் (தெரிவு விளையாட்டு ) | 2004.07.03 மாலை 6.00 — 11.00 வரை |
| 7. குத்துச் சண்டை / மல்யுத்தம் (இறுதித்தெரிவு) | 2004.07.04 மாலை 4.00 — 11.00 வரை |
| 8. நீச்சல் போட்டி (2 கடல் மைல் தூரம்) | 2004.07.05 மாலை 6.00 — 9.00 வரை |
| 9. படகோட்டம் | 2004.07.05 காலை 9.00 தொடக்கம் |
| 1.வெளி இணைப்பு இயந்திரம் முன்கியர் 9.9 15 கோஸ் பவர் | |
| 2. சைற் கியர் உள்ள வெளி இணைப்பு இயந்திரம் 9.9 15 கோஸ் பவர் | |
| 3. சுசுக்கி வெளி இணைப்பு இயந்திரம் 9.9 15கோஸ் பவர் | பாடசாலை ரீதியாக நடைபெறும் |
| 10. பாடசாலைப்போட்டி | |

## "தகுதியான பரிசில்கள் வழங்கப்படும்."

மேற்குறிப்பிட்ட விளையாட்டுக்களில் கலந்துகொள்ளவிரும்புபவர்கள் அனைவரும் குறித்த விளையாட்டு நடைபெறும் திகதிகளில் கீழ்க்குறிப்பிடும் இடத்தில் உடன் பதிவை மேற்கொண்டு, விளையாட்டுக்களில் பங்குபற்றலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

தகவல்:- அ. மரியராசா,
தலைவர்,
மு.மா.க.தொ.கூ.ச.சமாசம்,
முல்லைத்தீவு.

பதிவு கொள்ளும் இடம்:- சுற்றுலா மையம்,
கடற்கரை,
முல்லைத்தீவு.

(சி:9827)

# உறங்கும் அபாயம் விழிப்பு நிலை அவசியம்



மிதிவெடிகளின் விழிப்புணர்வு தொடர்பான செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற விழிப்புணர்வு தற்பொழுது ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பரந்தன் பகுதியில் இடம்பெற்ற வாகன நிலக்கண்ணி வெடியில் மூவர் உயிரிழந்துள்ளமையை அடுத்து இந்த விழிப்புணர்வு முன்பிருந்ததைவிட அதிகரித்துள்ளது.

மிதிவெடிகளின் விழிப்புணர்வு தொடர்பாக மக்கள் அசமந்தப்போக்கை கடைப்பிடித்ததன் காரணமாக இவ்வாறான இழப்புக்கள் ஏற்படுவதாக மிதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிறுவனங்கள் கூறுகின்றன.

இதேநேரம் மிதிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வை தொடர்ந்தும் ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிறுவனங்களுக்கு இந்த சம்பவம் உணர்த்தியுள்ளது.

தமது காணிகளில் மிதிவெடிகளை அகற்றப்பட்டு மக்கள் மீளகுடியமர மக்கள் படும் இன்னல்களும் ஏராளம்.

மன்னார் மற்றும் வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து இன்று மீள் குடியேறிவரும் மக்கள் இந்த விடயத்தில் பெரிதும் சிரமப்பட்டுவருகின்றனர்.

மீளக்குடியேறுவதற்காக வந்த மக்கள் தமது காணிகளில் கண்ணிவெடி அகற்றப்படும்வரை தற்காலிகக்கொட்டில் அமைத்து மீண்டும் ஒரு இடப்பெயர்வு வாழ்வையும் அல்லது நலன்புரி நிலைய வாழ்வையுமே நடத்துகின்றனர்.

மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடுகளின் சாத்தியப்பாடுகளையும். வெற்றிகளையும் திரும்பிப்பார்த்தால் கவலைக்குரியதாகவே இருக்கின்றது.

ஏனெனில் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் மிதிவெடிகளை அகற்றும் FSD நிறுவனம் தெரிவித்துள்ள கருத்துகளின் படி தமது நிறுவனத்தின் ஆளணி பற்றாக்குறை என்றும் தமது பணியை மேற்கொள்ள தம்முடன் இணைபவர்களின் தொகை குறைவாகவுள்ளதாகவும் எவ்வாறு கண்ணிவெடி அகற்றப்படினும் நூறு விழுக்காடு தம்மால் உறுதிப்படுத்த முடியாது என்றும் 80 விழுக்காடே தம்மால் உறுதிப்படுத்த கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்திருக்கிறது.

இது அந்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் முதலில் தமது நிறுவனங்களை வளப்படுத்த முயற்சிசெய்யவேண்டும் என்ற அவசியம் உணர்த்துகிறது. இந்நிலையில் சென்ற ஆண்டுகளை விடநடப்பாண்டு மிதிவெடிகளால் ஏற்பட்ட இழப்பு அதிகம் என தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மிதிவெடி செயற்பாட்டறிக்கை கூறுகிறது. யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் மிதிவெடி அனர்த்தங்களால் 4 பேர் உடல் அவயங்களை இழந்து பாரிய சிகிச்சைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக யாழ் போதனா மருத்துவமனை அறிக்கை கூறுகிறது.

இதன் பின்னணியில் பார்த்தால் மிதிவெடிகளால் ஏற்படும் இழப்புகள் தொடர்ந்தும் நடந்தவண்ணமேயிருக்கின்றன. மிதிவெடிகள் அகற்றுவதற்கென சில நாடுகளின் இராணுவப்பிரிவின் குழுவினரும் செயற்பட்டுவருகின்றனர். அவர்களின் பின்னணியில் தமது உள்நோக்க செயற்பாடுகளுக்காகவே அவர்கள் தாயகப்பிரதேசங்களில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவருவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வறான குழுவினர் மிதிவெடி அகற்றும் செயற்பாட்டினூடாக தமது தேவைகளை மட்டும் நிறைவேற்றுவதில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர். மிதிவெடிகள் அகற்றுவதில் ஏற்படும் தாமதங்களுக்கு இதுவும் ஒரு காரணமாகிறது.

15 லட்சம் மிதிவெடிகள் கடந்த காலப்போரின் போது புதைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. ஆகவே இந்த 15 இலட்சம் மிதிவெடிகளும் அகற்றப்பட்ட நிறுவனங்கள் சடுதியாக பணிபுரியவேண்டிய தேவைப்பாடுகள் அதிகமாகவே இருக்கின்றன.

மிதிவெடிகளால் ஏற்படும் அனர்த்தங்கள் அதிகரிப்பதற்கு சில அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களும் அரச அதிகாரிகளும் காரணமாகிவருவதாக மிதிவெடி அகற்றுதல் ஒருங்கிணைப்பு நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தெரிவிக்கின்றது.

இது உண்மையானதாகவே தெரிகின்றது. மீளக்குடியேறும் மக்களுக்கு குடியமர்வு கொடுப்பனவு வழங்கும் விடயத்தில் தொண்டு நிறுவனங்களும் அரச அதிகாரிகளும் கடைப்பிடித்து வரும் கடும்போக்குகள் இவ்வாறான அனர்த்தங்களுக்கு வழிவகுக்கின்றன.

சொந்தக் காணிகளில் மீளக்குடியேறி கொட்டில் அமைத்து சமைத்தால் மட்டுமே அவர்களுக்கு கொடுப்பனவு பதிவுகள் மேற்கொள்ளப்படும் என்ற அரச அதிகாரிகளின் கட்டளை காரணமாக மிதிவெடி அகற்றப்பட்ட காணிகளிலும் 25000 பணத்திற்காக மக்கள் துணிந்து இறங்குகின்றார்கள். இதனால் பெருமளவு இல்லாவிட்டாலும் சிறிதளவாயினும் மிதிவெடி அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

எனவே அரசமற்றும் தொண்டு நிறுவன அதிகாரிகளுக்கு இவ்வாறு பணிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். என்ற கருத்து முன்வைக்கப்படுகின்ற போதிலும் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தாக தெரியவில்லை.

எந்தப் பிரதேசத்தில் எந்த மக்களுக்காக உதவி நிறுவனங்கள் உதவிசெய்ய வருவதாகவே அந்த பிரதேசமக்களின் வாழ்க்கை முறைக்கேற்ப தமது கோட்பாடுகளிலும் மாற்றங்களை செய்துகொள்வது அவசியம்.

தமது சொத்துக்களை இழந்து இடம்பெயர்ந்த ஒருவர் மீள குடியேற வசதியற்ற நிலையில் அதிகாரி களின் அழுத்தம் காரணமாக கடன்பட்டு தனது காணியில் கொட்டில் அமைத்த போதிலும் அவருக்கான மீள் குடியமர்வு கொடுப்பனவு இழுத்தடிப்பு செய்யப்படுகிறது. ஆகவே சொத்துக்களை இழந்த மக்களை மீளவும் கடனாளிகளாக இந்த சமூகம் மாற்றுகிறது. இதுதான் இன்று மீளக்குடியேறும் மக்களின் எண்ணிக்கை குமுறங்களாகின்றன.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரங்களும் தொண்டு ஸ்தாபனங்களும் தமது செயல்வடிவங்களை மக்களின் நிலைக்கேற்பகொண்டு வருதல் வேண்டும்.

மிதிவெடிகள் அகற்றுவதும் அதனை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கமைய ஒப்படைப்பதும் கடினமான ஒரு காரியம்தான்

தற்போது மிதிவெடி அகற்று வதிலும் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் நிறுவ னங்கள் அக்கறை கொண்டு மிதிவெடி விழிப்புணர்வு வார செயற்பாடுகளையும் மீள ஆரம்பித்திருக்கின்றன. இது ஆரோக்கியமானதுதான் எனினும் இது தொடர்பான செயற்பாடுகள் நிறுத்தப்படாது அவ்வப்போது மக்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

எனவே மிதிவெடி அகற்றுதல் மற்றும் மக்களின் மீளக்குடியமர்வு செயற்பாடுகளில் மிதிவெடி அகற்றும் நிறுவனங்களும் அரசஅதிகாரிகளும் மக்களின் நிலைக்கேற்ப பணியாற்ற வேண்டியுள்ளது. இதைவிட மக்களின் வேண்டுகோளாகவும் இருக்கின்றது.

தேவி

---



# ஏ9-ஏரம்பு

எல்லோருக்கும் வணக்கம் நான்தான் மிஸ்ரர் ஏரம்பு. பென்சன் வயசு வந்ததும் கொஞ்சக்காலம் அதுக்கு மேலால உழைச்சுப்போட்டு. போன வருசத்தில இருந்து பென்சனியர் ஆக இருக்கிறன். எல்லோரும் நினைப்பியல் எவ்வளவு சோக்கான வாழ்க்கையென்று. ஆனா அப்படியில்லையங்கோ. ஐம்பது வருசமா வேலை செய்துகொண்டிருந்த என்னை சும்மா இருக்கச்சொன்னால் அதைப்போல் ஒரு சுமை இல்லையங்கோ. எங்கையாவதுபோய் ஒருவேலையில் சேரலாம் என்று பார்த்தால் எழுவது வயசுக் கிழவன் எண்டு ஏளனமா எல்லே சிரிக்கினம். அதுதான் நானும் இப்ப அந்த முயற்சிகளை கைவிட்டு ஓய்வு நேரங்களில் எங்கட பிரதான நெடுஞ்சாலை எ9 இற்குப் பிராக்குப்பார்க்க வந்திடுவன். காலம் போகப்போக இந்தப்பிராக்குப்பார்க்கிறது ஒரு தனித்துவமான கலை என்று புரிஞ்சு கொண்டன். இந்தக் கலையை ஆழமாக புரிஞ்சுகொண்டதிலை. கன விசயங்களையும் விளங்கிக்கொள்ளமுடிஞ்சது. சிலநேரம் விளங்கினதெண்டு நினைச்சவிசியங்கள் விளங்காமலும் போட்டுது. எனக்குள்ள ஒரு ஆசை. நான் கண்டுபிடிச்ச இந்த கலை நுனுக்கத்தை எல்லாரோடையும் பகிர்ந்து கொள்ளனும் எண்டு. நேரை சொன்னால் நிண்டு கேக்க மாட்டினம். அதாலை இப்படி எழுதலாமெண்டு நினைச்சன். நான் சொல்லுறதிலை நியாயம் இருக்கோ இல்லையோ எண்டு வாசிச்சுப்போட்டுச்சொல்லுங்கோ.

பின்னேரத்திலை பெரிசா வெக்கை இல்லாததால காத்து வாங்க நல்ல பொறுத்தமான நேரம். ஆனாபாருங்கோ நீங்கள் சில நேரம் கேட்டுச் சிரிப்பியள். எனக்கும் வேற வழி தெரியேல்லை அதாலதான் பக்கத்திலை நுளம்புத்திரி கொளுத்திப் போட்டுத் தான் இருக்கிறநான். பிரதான வீதி ஓரத்தில நுளம்புத்திரியோட இருக்குதே பே மனுசன் எண்டு நினைப்பியல். நாளைக்கு டெங்கு மலேரியா ஏதாவது வந்தால் அவதிப்படப்போறது நான் எல்லே. பத்திரிகை வானொலி எல்லாத்திலையும் தண்ணீர் தேங்கி நிக்கிறதுக்கான வாய்ப்புக்களை இல்லாமல் செய்தால் நுளம்பு பரவாதெண்டு சொல்லினம். ஆனா என்னவோ கனபேரின்ர போக்கு எனக்கு பிடிக்கேலை பாருங்கோ. தங்கட வளவுக்கு வெளியால என்ன கவிண்டு கிடந்தாலும் ஒருத்தரும் கவனிக்கிற மாதிரித்தெரியல்ல. ஒவ்வொருதரும் தங்கட பகுதிலை சுத்தியுள்ள பிரதேசத்திலை நீர் தேங்கி நிற்கிற குட்டைகளை மூடுறத்துக்கு முயற்சிக்கமெல்லோ. அப்படிச் செய்தால் எவ்வளவு நல்லது! ஆமிக்காரனை எங்கட இடத்துக்குள்ள வரவிடக்கூடாது வந்தால் ஒழுங்கா இருக்கவிடக்கூடாது எண்டுறதைப்போலதான் நுளம்பு விசியமும் கவனிக்காமல் விட்டால் எங்கடகதை கேள்விக் குறியாகிவிடும்.

உங்கை பாருங்கோ! நான் உங்களோடை நுளம்பை தடுக்கிறது பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறன். அதில ஒருத்தர் காலி ஐஸ்கிறீம் கப்பை சுழற்றி வீசிப்போட்டுப் போறார். எட கொஞ்சம் கூட சிந்தனை இல்லையே. மூலைக்கு மூலை சூழல் பாதுகாப்பு அது இதெண்டு தொங்கிறதைக் காணேலையே உவன். சீ! என்ன மனுசர்! வீதி மருங்கிலை உதுகள் சேர்ந்து நாளைக்கு எத்தனை பிரச்சினைகள் வரலாம். நுளம்புப் பிரச்சினை மட்டும் ஒண்டில்லாம பயிற்செய்கை கால்நடை எண்டு எத்தனை பாதிப்புக்குள்ளாகும்! எனக்கென்னா மனசு கேக்கலை .பொறுங்கோ! அதை அப்படியே விடாமல் எடுத்துக் கடையில கொடுத்துவிடலாம்.

என்னடாப்பா! பழசு பழசுகளைப் பொறுக்குது! திரும்பிப் பார்க்கத்தான் சைக்கிளிலை பறந்த இளவலுகள் கண்ணுக்கு சின்னனாத் தெரிஞ்சினம். நான் என்னத்தைப் பதில் சொல்ல!

தங்கச்சியவை! உங்களிட்டை வேண்டின ஐஸ்கிறீம்கப் தான் வீதியிலை எறிஞ்சுட்டுப் போட்டார் ஒருத்தர். இந்தாங்கோ!

அப்பு உதை வைச்சு நான் என்ன செய்ய?

உங்கன்ர கடையிலை உப்படிப்பட்ட சாமான்களைச் சேகரித்துச் சுத்திகரிக்கிறதுக்கான கொள்கலனுகள் இல்லையோ?

அந்தக் குப்பைக்குள் போட்டு விடுங்கோ!அப்பு

தங்கச்சி! இது சாதாரண குப்பையில்லை. இதாலை வெளிப்படக் கூடிய டயோக்சீன் எண்ட நஞ்சைத் தான் அமெரிக்காக்காரன் வியட்நாமிலை பாவிச்சு இண்டைக்கும் குழந்தையள் ஊனங்களோட பிறக்கி னம் இதுகள் தானா அழிஞ்சு போகாது எரிச்சாலும் கூடாது.கன வருத்தங்கள் வரக்காரணமா வேற இருக்குது.

அப்பு!வயசு போறதை தடுக்கிறத்துக்கு தவிர மற்ற எல்லாத்துக்கும் இப்ப மருந்து வந்திட்டுது. எல்லா விசியத்திலையும் ஆகலும் ஓவராக இருக்கக் கூடாது.

எனி நான் உதுக்கு மேலை என்னத்தைச் சொல்ல!கண்ணீருக்கும் காரணமாய் இருந்திட்டு கவலையும் படும் இவையளை என்ன சொல்ல. பத்து ரூபா ஐஸ் பிஸ்கற் கோணிலை இல்லாட்டி மட்டையில செய்த கப்பில கொடுக்கலாம் தானே. அப்பிடியும் கிடைக்காட்டி ஓலையிலை ஏதாவது செய்யலாமெல்லே. சின்னனாப் பின்னே லாது எண்டு அவசரப்பட்டுச் சொல்ல வேண்டாம். விரும்புறவனுக்கு வேணுமெண்ட காரியம் எப்பவும் முடியும்.

எட உந்த வெளிநாடுகளிலை கூட கடையளிலை சாமான் வாங்கினால் பை வேணுமோ எண்டு கேட்டுத்தானாம் குடுப்பினம். இலவசம் எண்டாலும் தேவையா இருந்தா மட் டும் தானாம் சனமும் ஓம் சொல்லும். பேந்து அந்த பிளாஸ்ரிக் பையள் உட்பட எல்லாப் பிளாஸ்ரிக் சாமானும் மீளுற்பத்திக்கு உட்படுதாம். சனமும் பிரத்தியேகமான குப்பைத் தொட்டிக்குள்ளை பிரிச்சுத்தானாம் பக்குவமாய் போடுவினமாம். சில கடையளிலை மரத்தால் பைதானாம் நடைமுறையிலை இருக்கு. அப்படியான கடைகளை சனமும் விரும்புதாம். இஞ்சை என்னடா என்றால் குண்டூசிக்கு ஒரு பை நெருப்பெட்டிக்கு இன்னமொரு பை! ஏன் பஸ்ரிக்கற்றுக்குக் கூட பை கொடுத்தாக் கூட ஆச்சரியமில்லை.

வரட்டுவாதம் கதைக்கிறனென்டு சிலர் நினைக்கலாம். எங்களுக்கெண்டு நிரந்தரமான தீர்வு ஏற்படுகிற வரைக்கும் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கெண்டிறது உண்மைதான். ஆனால் அத்தியாவசியங்களுக்கு மட்டும் அவற்றை அனுமதித்துக்கொண்டு அவதானமாக இருந்தால் எங்களுக்குத் தானே நல்லது. ஓமோம் போட்டுக்கொண்டு ஒழுங்கா இருக்காட்டி கஸ்ரப்படப் போறது நாளைக்கு நாங்கள்தானே! கொஞ்சம் சிந்திச்சு சகல பங்களிப்பையும் அன்றாட வாழ்க்கையிலை அவதானமாக இருக்கப் பாருங்போ!

இன்னுமொறு விசியத்தோட இண்டைக்கு முடிக்கிறேன். இருளப்போகுது. கொழும்பில ஒரு பெரிய சாப்பாட்டுக் கடை...சீ..ரெஸ்ற்ரோறன்ற் எண்டு சொல்லலாம்.அதின்ரை பேரே வாழைஇலை தான். வெள்ளைக்காரர் எல்லாம் விரும்பிப் போய்தோசை இடியப்பம் எண்டு வாழையிலையினை வைச்சச் சாப்பிடுவதைப் பார்க்கவே சந்தோசமாக இருக்கும். அவ்வளவுக்கு வாழையிலை வசதி எங்களுக்கில்லை எண்டு ஆரோ சொல்லிறது எனக்கு கேக்குது. ஓமோம்... பொலித்தீன் மட்டும் இவற்றை பெரியப்பா வீட்டில தானே விளையுது! சாட்டுச்சொல்லி சமாலிக்க எங்கட ஆக்களுக்குச் சொல்லிக் கொடுக்கத்தேவையில்லை.

-அ.ஞாலவன்-

## வாடகை வீடு



**வீட்டுக்காரன்:~**
4 அறை இருக்கு, 2 விறாந்தை 6 கதவு பத்து ஜன்னல்..

**வந்தவர்:~**
காணும் காணும் காணி நிலத்தில என்னென்ன நட்டிருக்கு.

**வீட்டுக்காரன்:~**
நிறைய மிதிவெடிகள் கிடக்கு, இரண்டு மூண்டு கண்ணிவெடி கிடக்கு.

# “கடலே உயிர்களின் கருவறை”



'கடல்களும் சமுத்திரங்களும் உயிர்ப்புடனிருக்கவேண்டும்' என்ற குரல் தான் இந்த ஆண்டின் சுற்றுச் சூழல் கவனம். அதாவது நமது கருவறையைப் பற்றிய கூடுதல் கவனமிது. உயிர்களின் கருவறை கடலிலிருந்து - நீரிலிருந்து தானே ஆரம்பிக்கிறது!

பூமியில் பெரும்பகுதி கடல்களும் சமுத்திரங்களும் தான் தொடர்ச்சியாக பூமியெங்கும் நீண்டிருக்கும் இந்த நீர்ப்பரப்புக்கும் இன்று அச்சுறுத்தல். இயற்கையின் பேரிருப்புக்கு நாங்கள் சவாலாகி விட்டோம்.

கடல் இயற்கையின் ஆதிமுகம். பூமியின் இதயம். குளிர்ச்சி எங்கிருக்கிறது? சூரிய மண்டலத்தின் எல்லாக் கோள்களிலும் மனிதன் எதைத் தேடுகிறான்...? நீரையல்லவா? நீரிருந்தால் நிச்சயம் உயிர்வாழ்வுக்கான சாத்தியங்களிருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆனால் பூமிக்கு நீர்க்கொடை ஒரு அற்புதம்தான். நீர்தான் அதனுடைய உயிர்ப்பு. கடல்களும் சமுத்திரங்களும் தான் பூமியின் ஆதாரம். இந்த ஆதாரம்தான் பூமியின் அடையாளமும்.

இயற்கையைச் சமநிலைப் படுத்துகின்றன கடல்களும்,சமுத்திரங்களும் சூழலை உயிர்ப்புடன் வைத்திருக்க ஆதாரமாயிருக்கின்றன. கடல்களும், சமுத்திரங்களும் இதில் முக்கியமானவை கடல் உயிர்கள்.

இன்று கடலுக்கும், சமுத்திரத்திற்கும் சவாலாக இருப்பது இந்த உயிர்களின் பாதுகாப்புத்தான்.

கடல் உயிர்கள்தான் கடலை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன.

கடல்என்பது வெறும் நீர்ப்பரப்பல்ல.

அது பல்லாயிரம் உயிர்களின் தாய்மடி. இந்தத் தாய்மடிக்குத் தான் இப்போது பேரிடி.

கடல் உயிரிகள் பற்றி பல அதிசயமான தகவல்களையெல்லாம் இந்த ஆண்டுச் சுற்றுச்சூழல் ஏற்பாடுகள் மூலம் எங்களாலும் அறிய வாய்ப்பேற்பட்டிருக்கிறது. ஊடகங்களும் உலகெங்குமுள்ள பொது அமைப்புகளும் கடல்கள் மற்றும் சமுத்திரங்கள் பற்றி கூடுதல் கவனிப்புச் செலுத்தியிருக்கின்றன.

கடல்களும், சமுத்திரங்களும் கண்டங்களை இணைப்பதால் தேசங்களைத் தொடுப்பதால் இன்று இந்த இணைப்பும் தொடுப்பும் மனிதப் பயணத்தின் பெருவழியாகிவிட்டது.

கண்டங்களைப் பிரிப்பதே கடல்தான, சமுத்திரங்கள்தான் என்று யாரும் வாதிடலாம்.

ஆனால் உண்மையான அர்த்தத்தில் அவை எல்லாவற்றையும் இணைக்கின்றன.இந்த இணைப்பினூடாகத்தான் மனிதன் ஒரு கண்டத்திலிருந்து இன்னொருகண்டத்திற்குப் போனான்.நாடுகாண் பயணங்கள் எல்லாமே கடல் வழிப்பயணங்கள் தான். வெளியும் கடலும் ஒருவிதத்தில் இணைப்புக்கருவிகளாகத்தான் இருக்கின்றன. இந்தக் கருவிகளைக் கையாள்வதுதான் மனித சாகசமும், வல்லமையும்.

இப்போது அதிகம் பாதிப்புக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருப்பவையும் இவை இரண்டும் தான். மனித சாகசத்தாலும் அது பெற்றுவரும் பெரும்வல்லமையாலும் இயற்கை பெரும் பாதிப்புக்குள்ளாகிவருகிறது.

முடிந்த அளவுக்கு இயற்கையை சுற்றுச்சூழலைப்பேண வேண்டிய அவசியம் தீவிரஅவசரமாக உருவாகியிருக்கிறது இன்று.

கடலுக்கும் சமுத்திரங்களுக்கும் பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத அடிமையாகவும் ஆகியிருக்கின்றன. வணிக மயமாகிவரும் உலகில் கப்பற்போக்குவரத்துத்தொடக்கம் கடல் வளப்பயன்படுத்துகை வரையில் இதுநீழ்கிறது.

இந்தப் 'பொருளாதார அடிமையம்' கடல் உயிரிகளுக்கு பேராபத்துக்களைத் தருகின்றன. வணிகப்போட்டிகள், அரசியல் நெருக்கடிகளாகி போராகப் பரிணாமம் கொள்கையில் இன்னும் இன்னும் ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருக்கின்றன கடல் மற்றும் சமுத்திர உயிரிகள்.

கடல் உயிரிகள் இல்லை என்றால் கடல் இல்லை. பெரும் நீர்ப் பரப்பாக அதை நாம் கருதிவைத் திருக்கவும் முடியாது.

எனவே கடல்களையும் சமுத்திரங்களையும் அவற்றின் உயிரிகளோடேயே நாங்கள் வைத்திருக்க வேண்டும்.

வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இதில் கூடுதல் பொறுப்புண்டு.

வணிகத்தையும், போரையும் அவையே கூடுதலாகச்செய்து வருகின்றன. அதிகமாக கடல் வளத்தைச் சுரண்டுவதும் அவைதான். ஆனாலும் ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் கடல்களைப் பேணவேண்டிய பொறுப்பும் அவசியமும் இருக்கிறது என்பதும் புரிந்து கொள்ளப்ப வேண்டிய உண்மை.

நாங்கள் கடலால் சூழப்பட்டிருக்கிறோம். அல்லது எங்களைச் சுற்றிக் கடல் இருக்கிறது. அழகிய கடல், வளம் நிறைந்த கடல், சிறு கடல், பெருங்கடல், சமுத்திரம் எல்லாவற்றோடும் இணைந்திருக்கிறது எங்களின் நாடு. சரியாகச் சொன்னால் கடலின் மடியிலிருக்கிறது எங்கள் நாடு.

தீவுகளெல்லாமே கடலின் மடியிலிருக்கும் குழந்தைகள்தானே.!

ஏன் புவிப்பரப்பில் ஏன் மூன்றில் இரண்டு பங்கு நீராலானது என்பதால் அது மடியாக விரிந்திருக்கிறது.மிஞ்சிய மூன்றில் ஒரு பகுதி நிலப்பரப்பு விரிந்திருக்கும் நீர் மடியிலிருக்கும் பிள்ளைமுகமே. ஆக எல்லாத் தேசங்களுமே கடல்மடிக் குழந்தைகளே.

கடலில் மனிதத் தலையீடுகள் பெருகப்பெருக கடல் அமைதியிழக்கிறது. கடல் வளப் பாதிப்பும் உயிரிகளின் சிதைவும் அழிவும் கடலை எதிர்த் தளத்திற்குத் தள்ளிவிடும். எதிர் நிலைக்கடல்-சமுத்திரம் சூழலில் சமனின்மையை உருவாக்கிவிடும் என்று சூழலியலாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் எச்சரிக்கின்றார்கள்.

எனவே சூழலைச் சிதைவடையவிடாமல் அமைதித்தன்மையுடன் பராமரிக்கவேண்டிய இன்றைய அவசியம் ஒவ்வொரு மனிதரும் சூழலியலாளராக அறிவு பெற்றிருப்பது தவிர்க்கமுடியாதது. அப்படியில்லாமல் தவறும் போது சூழல் பற்றிய அக்கறையும் விளக்கமும் இல்லாமல் போய்விடும். இது சூழலைச் சிதைவுக்குள்ளாக்கும்; நெருக்கடிக் குள்ளாக்கும். நெருக்கடிக்குள்ளாக்கும். சூழல்மனிதனையே திருப்பித்தாக்கும் நெருக்கடிக்குள் இழுக்கும்.

கடல்கள் மற்றும் சமுத்திரங்கள் பற்றிய கூடுதல் கவனத்துக்குரிய இந்த ஆண்டிலிருந்து இன்றும் விரிவாக கடல்களையும், சமுத்திரங்களையும் அறியவும், அவதானிக்கவும் தொடங்குவோம்.இதில் முக்கியமானது கடலோர மக்களுக்கு கடல்பற்றிய அறிவை மேலும் வளர்ப்பது. கடலோடு தங்களைப் பிணைத்திருக்கும் அவர்கள் கடலைப்பற்றி கடல் உயிரிகள் மற்றும் கடல் வளங்களைப்பற்றி அவற்றின் சிதைவுகள், சிதைவுகளால் ஏற்படும் விளைவுகள், ஆபத்துகள், இழப்புகள் எல்லாவற்றையும் அறிய உதவ வேண்டும். அவர்கள்தான் கடலின் முதலாவது காவலர்கள். எப்போதும் கடலோடு இணைந்திருப்பார்கள். கரையோரக் கடலைப் பாதுகாக்கும் வாய்ப்பு இவர்களுக்கே கூடுதல் சாத்தியம். ஆழ்கடல் மற்றும் சமுத்திரங்களின் பாதுகாப்பு முழுதாக அரசுகளைச் சார்ந்தது. அதற்கான சர்வதேச நடைமுறையும் சட்டங்களும் இன்றும் ஒழுங்காக்குதல் அவசியம். இவற்றை நடைமுறைச் சாத்தியங்கட்குட்படுத்தவே எல்லோருடைய கவனமும் தேவை.

கரையோர மக்கள் கடல் அறிவை முழுமையாகப் பெறுவதன் மூலம் மெய்யாகவே பெரும்பலனும் நற்பேணுகையும் கடலுக்கு சித்திக்கும். ஆனால் இதுவரையான நிலைமையில் கரையோர மக்களுக்கு கடலின் ரகசியங்களோ, நுட்பங்களோ, கடல் உயிரிகள் பற்றியோ, துறைசார் அறிவு குறைவாகவேயுண்டு. ஏன் இல்லையென்று கூடச்சொல்லாம்.

முதலில் இந்த மனிதர்களுக்கான அறிவூட்டல் நடக்க வேண்டும். விளக்கப்படங்கள், செய்திப் படங்கள், கடலாய்வு அரங்குகள், பேணுகை தொடர்பாக விளக்க அமர்வுகள் என்றெல்லாம் தொடர்ச்சியான வேலைத்திட்டம் உருவாக்கப்படுதல் அவசியம். மக்களிடையே இவற்றில் ஆர்வமும் ஈடுபடும் வளர்வதற்கான ஏற்பாட்டைச் சிந்திக்கவேணும். இதற்கொரு இடையறாத தொடர்ச்சியும் இருக்கவேணும்.

கழிவுகளைக் கொட்டும் இடமாக கடற்கரைகளையும் வெளிகளையும் பயன்படுத்தும் வழக்கம் எங்களிடையேயுண்டு. இது முழுத் தவறு. எந்தக்குப்பைகளையும் கடல் அள்ளிச்சென்றுவிடும் என்ற நம்பிக்கை பரவலாக மக்களிடமுண்டு. இவற்றைத் தவறென்று மக்களுக்கு உணர்த்தவேண்டும். வெளிகளையும் கடற்கரைகளையும் துப்பரவாக வைத்திருக்கவேண்டும். அது அவசியம் என்ற உணர்வும், அறிவும் வர உழைக்கவேணும்.

நாம் கொட்டும் கழிவுகள் அங்குள்ள உயிரிகளையே முதலில் அழிக்கின்றன. காற்றை அசுத்தமாக்குகிறது. இதெல்லாம் மறுவிளைவாக எமக்கே பாதிப்பு ஏற்படுத்தும் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிப்பது அவசியம்.


இப்படிச்செய்வதுதான் சூழல் பாதுகாப்பின் முதற்செயற்பாடாகும்.

**வெளிவாசல் பாலன்**

---

# சனிக்கிரகத்தின் இருண்ட உபகோளை விண்கலம் வெளிப்படுத்தியது

அடுத்தமாதம் சனிக்கிரகத்தை ஆய்வு செய்யவிருக்கும் கஸின் (CASSINI) என்ற விண்கலம்,



வாரஇறுதியில் சனிக்கிரகத்தின்மர்மமான உபகோளாகிய பீவே (PHOEBE) இருந்து 1250மைல்கள் வரையான தூரத்துக்கு அண்மித்தும் சென்றுள்ளது.

அது அனுப்பிய முதல் புகைப்படங்கள், ஒரு கருமையான, காயப்பட்ட, 200கி.மீ.குறுக்கு அகலம்கொண்ட சின்னஞ் சிறு உலகத்தைக்காட்டுகின்றன. பீவேயில் விழுகின்ற சூரிய ஒளியில் அண்ணளவா 6%ஐயே அது தெறித்து விழுகிறது. “இந்த விசித்திரமான உபகோளின் மேற்பரப்பில் சிறிதளவு பனிக்கட்டியும் பெருமளவில் ஏதோ கறுப்பு நிற பொருளும் காணப்படுகின்றன. அதற்கு அப்பால் எமக்கு எதுவும் தெரியாது”என இந்த விண்கலம் அனுப் பும் தகவல்களை வைத்து இந்த உபகோளின் ஆக்க அமைப்பை (Composition) நிர்ணயிக்கவிருக்கும் நாஸாவிஞ்ஞானி டேல் குறுய்க்ஷாஸ் தெரிவித்தார்.

உள்வந்து கொண்டிருக்கிற தரவுகளை பொருள்கொள்ள சிறிது காலம் எடுக்கும். ஆனால் பீவேயை நெருக்கமாக அவதானித்ததானது அதனது கொடூரமான வரலாற்றை வெளிப்படுத்தியுள்ளது.


அதில் நிறைந்து காணப்படும் குழிகள் அதிலே, பலநூறு மீற்றர் குறுக்களவு கொண்ட விண் கற்கள் மற்றும் பனிக்கட்டிகள் மோதியிருப்பதை எடுத்துக் காட்டுகின்றன.

அண்ணளவாக வட்டமாகக் காணப்படும் இக்கோளின் மேற்பரப்பு கொத்திச் சிதைக்கப்பட்டது போல்காட்சி யளிக்கிறது.

1மணித்தியாலம் 16 நிமிடங்களுக்கு ஒரு முறை பீவே சுழல்கிறது. அதனுடைய சுற்றுப்பாதை சனிக்கோளின் மையரேகை தளத்துக்கு அப்பாற்பட்டு இருக்கின்றது. புதிரான விதத்திலே சனியின்ஏனைய உபகிரகங்கள் சனியை சுற்றிவரும் திசைக்கு எதிர்த் திசையில் இது சுற்றிவருகிறது.

பீவேயானது சனிக்கிரகத்தை கடந்து செல்லவிருந்த ஒரு வால்வெள்ளி, அல்லது விண்கல் அல்லது வேறு ஏதோ பொருளாக இருந்து சனிக்கிரகத்தின் வலுமிக்க ஈர்ப்புச் சக்தியால் கவரப்பட்டுசனியின் உபகோளாக தன் வாழ்க்கையை ஆரம்பித்திருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## தீபாவளி வெடி



எண்டாலும் எங்கட கொடாக் கண்டன் செய்தது செரியான பி[illegible]
ஆக மோசம்
என்ன நடந்தது.
தீபாவளி அண்டு வீட்டு வாசல்ல மிதிவெடிகள் கவனம் எண்டு 'போட்' வைச்சிருக்கிறான்.



# அன்னமிட்ட அன்னை

அது ஒரு மட்டக்களப்பின் குக் கிராமங்களில் ஒன்று. அங்கு தேனாறும் பாலாறும் ஓடும் ஒரு வளம்மிக்க கிராமம் என்று சொல்ல எதுவுமே இல்லை.

ஆனால் அங்கே வற்றாத அன்பும்,பற்றும் நிறையவே இருந்தது.

அதனால் தான் என்னவோ அந்தக் கிராமத்தில் ஆரம்பகாலத்தில் போராளிகள் நிலை கொண்டிருந்தார்கள்.

எங்களின் விடுதலைப் போருக்கு உயிரோட்டம் அப்போது அங் கிருந் துதான் முளைவிடத் தொடங் கியிருந்' தது.

அது ஒரு கடினமான காலம் எல்லாமே ஆரம்பம், மக்களுக்கும் போராளிகளுக்குமிடையிலான உறவு மக்களுக்கும் போராளிகளுக்குமிடையிலான தொடர்பாடல், போராளிகளின் நடமாட்டம் என்று எல்லாமே புதிய வையாயும், புதினமாயும் இருந்த காலம்.

அந்த காலகட்டத்தில் போராளிகளுக்கான உணவு, அவர்கள் மறைந்து வாழ்வதற்கான மறைவிடம், எல்லாம் போராளிகள் மக்களின் மத்தியில் ஏற்படுத்திக் கொண்ட நட்பின் அடிப்படையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டியவை.

அந்தகிராமத்தில் ஒரு குடும்பம் வாழ்ந்துவந்தது போராளிகள் ஆறுதலாக அமர்ந்து தங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளவும், களைத்து விழுந்துவரும் போது இந்தா... மகனே....என்று உண்ண உணவளிக்கவும் அந்த வீடு அவர்களுக்கு அட்சய பாத்திரம்.

ஆனால் என்னவோ அந்த குடும்பத்தை வறுமை மட்டும் விட்டபாடில்லை அந்தக் குடும்பத்து உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கே போதுமான அளவு உணவை அவர்களால் தேடிக்கொள்வது ஒரு கடினமான காரியம், ஆனாலும் அங்கு செல்லும் எந்தப் போராளியும் உணவருந்தாமல் வரமுடியாது. இதுதான் அந்த போராளிகளை மெய்சிலிர்க்க வைப்பதோடு விடுதலை நோக்கிய பயணத்தில் வீறு நடைபோடத் தூண்டும் ஊக்கிகளாகவும் இருந்ததுண்டு.

அன்றொரு நாள் மதிய வேளை களைத்து விழுந்த ஒரு போராளி அம்மா.. என்றபடி வீட்டின் வாசலை மிதித்தான்.

அதேநேரம் அம்மாவைச் சுற்றி எல்லோரும் சாப்பாட்டுத் தட்டுகளோடு அமர்ந்திருந்தார்கள்.

ஆனால் எல்லோரும் ஒரு முறை சாப்பிடுவதற்குத்தான் உணவு பாத்திரத்திலிருந்து தட்டுக்களில் பங்கிடப்பட்டிருந்தது. அதுவும் நிறையவாக சாப்பிடுவதற்கல்ல.

இந்த நேரம்தான் அந்த போராளியும் அங்கு சென்றிருந்தான்.

சில நிமிடங்களில் நிலைமையை உணர்ந்து கொண்ட போராளி வேறு ஏதோவொரு தேவைக்காக அங்கு சென்றவன் போல் வந்த வேகத்தில் திரும்பிச் செல்லும் நோக்கோடு திரும்பிய போது.....

அம்மா. உந்தா மகனே சாப்பிடு..... என்று சாப்பாட்டுத் தட்டை நீட்டினாள்....

இல்லை.... அம்மா நீங்கள் சாப்பிடுங்கள்.. நான் அவசரமாக வெளியில் போக வேண்டும்... என்றவனுக்கு இல்லை... சாப்பிட்டுத்தான் போக வேண்டும் என்று அம்மா பிடியாய் நின்றாள்.


ஆனால் தட்டுகளில் உணவு பரிமாறப்பட்ட நிலையில் பாத்திரங்களில் உணவு இல்லாமலிருந்த நிலையில் ஐந்தாவதோடு ஆறாவதாக தனக்கும் ஒரு தட்டு உ்ணவு தயாரானது எப்படி?

அந்தப் போராளி சிந்தித்த போதுதான் அவனுக்கு எல்லாம் புரிந்து போனது.

அம்மாவினால் பரிமாறப்பட்ட ஐந்து தட்டுகளிலிருந்தும் ஒவ்வொரு பிடியாக எடுத்து ஒரு தட்டில் சேர்த்த போது அந்த போராளிக்கான ஆறாவது தட்டு தாயாராகிவிட்டது.

இப்போது எல்லோரும் அவனுக்கு ஒவ்வொரு கவளையம் அன்போடு ஊட்டி விட்டது போன்ற ஒரு பிரமை

மெய்சிலித்துப் போன அந்த போராளி தன் கண்களின் ஓரத்தில் கசிந்த முத்துப் போன்ற சிறுதுளி கண்ணீரை எவருக்கும் தெரியாமல் துடைத்துக் கொண்டான்.



**வேழினி**



# மக்களின் முற்றுகை

புற்றீசலுக்கு அப்போது உதாரணம் காட்டுங்கள் என்றால் குழந்தைப்பிள்ளையும் சிரித்தபடி கூறும் இந்திய இராணுவம் என்று.

எங்கள் ஒவ்வொரு குக்கிராமங்களிலிருந்து குச்சொழுங் கைகள் வரை அவர்களின் பிரசன்னம் இருக்கும்.

மூக்கை சுளிக்க வைக்கும் அவர்களுக்கே உரித்தான அந்த நாற்றமும் ஏய்... கோகனட்... இரு க்கா... கொண்டா... கொண்டா... என்று தேங்காய்க்கு அவர்கள் அலையும் அலைச்சலும் எங்களை சிரிக்க வைத் தாலும் சினம் கொள்ள வைப்பதுண்டு.

அத்தோடு சண்டை நடப்பது எங்கோவாக இருக்கும் ஆனால் அதன் தாக்கத்தைக் காட்டுவது சாதாரண குடிமக்களின் குடிசைகளாக இருக்கும் அந்த இந்திய இராணுவக்காலம்.

இப்படி எத்தனையோ நிலைகளும், நினைவுகளும் இன்றும் நெஞ்சைவிட்டு அகலா நினைவுகளாய் இருக்கிறது.

ஆனால் இந்த குக்கிராமங்கள் முதல் குச்சை ஒழுங்கை வரை இந்த சலோ...சலோ.. கோஷ்டிக்கு தண்ணிகாட்டியபடி சுதந்திரப் பறவைகளாய் போராளிகளின் கடமை எந்தத்தங்கு தடையுமின்றி நடந்தபடி தான் இருந்தது

இது எப்படிசாத்தியமாகிறது என்பது அப்போது அவர்களுக்கு அது விளங்காமல் இருந்தது. பின்னர் அது விளங்கியபோது போராளிகளுக்கு உதவும் குடும்பங்கள், போராளிக் குடும்பங்கள் என்று இந்திய இராணுவத்தின் கொடூரங்கள் அவர்களை நோக்கி திரும்பத் தொடங்கிய போது. சில குடும்பங்கள் ஊர்விட்டு ஊர்மாறி இருக்கவேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டது.

இதற்குக் காரணம் இந்திய இராணுவத்தினரோடு இணைந்து செயற்பட்ட தேசவிரோதிகள் புரிந்த கொடூரங்களும் முக்கியமானதாக இருந்தது.

இப்படித்தான் தேசவிரோதிகளின் தொல்லை தாங்கமுடியாது ஒரு போராளிக்குடும்பம் தாங்கள் குடியிருந்த கிராமத்தைவிட்டு வெளியேறி வேறொருகிராமத்தில் குடியேறியது.

அந்தக்கிராமம் வன்னியின் ஒதுக்குப்புறமான ஒரு கிராமம்............ போராளிகள் காடுகளுக்குள் இருந்து தங்களுடைய முகாம்களுக்கு நீண்ட தூரத்தில் இருந்து செல்லும்போது இந்தக் கிராமத்தினூடாக செல்வது தான் வழக்கம்.

இந்த நிலையில் இந்த போராளி குடும்பம் அந்த ஊரில் குடியேறியதோடு போராளிகளின் இடைத்தங்கல் இடமாக அந்த வீடு மாறிவிட்டிருந்தது.

இது அந்தக் கிராமத்திலிருந்த ஊரவர்களுக்குத் தெரியும்.

அத்தோடு அந்த போராளிக்குடும்பம் ஏற்கெனவே தாங்கள் குடியிருந்த அவர்களின் சொந்தக்கிராமத்தில் வைத்து தேசவிரோதிகளால் தாக்கப்பட்டு பெரும் துயரத்தை சந்தித்துத்தான் இந்தக் கிராமத்துக்கு வந்துள்ளார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் மிக நீண்ட தொலைவிலிருந்து போராளிகளுக்கான சில பொருட்களுடன் ஒரு போராளி அந்த கிராமத்திற்கு வந்து குறிப்பிட்ட வீட்டை விசாரித்திருக்கிறான்.

அந்த வீட்டின் இருப்பிடம் தெளிவாகத் தெரிந்திருக்காத அந்தப்போராளி அங்கிருந்த சிலரிடம் விசாரிக்க நிலைமை விபரிதமானது.

அந்த கிராம மக்கள் அந்தப் போராளியிடம் அந்த வீட்டிலிருந்தவர்கள் தொடர்பாகவும், அங்கிருந்த போராளிகள் தொடர்பாகவும், ஊரவர்கள் கேள்விக்கு மேல் கேள்வி கேட்க களைத்து விழுந்து வந்தபோராளியால் தெளிவாகப் பதில் அளிக்க முடியாமல் போகவே கடுகதியில் நடந்து முடிந்து விட்டது அந்தக் காரியம்.

ஆம் அந்தப் போராளியை சுற்றிவளைத்த ஊரவர்கள் இவர் ஒரு இராணுவத்துக்கு தகவலளிக்கும் தேசத்துரோகி என நினைத்து பிடித்து விட்டார்கள்.

அந்தப் போராளி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் நம்பாத அந்த ஊரவர்கள் தங்கள் பிரதிநிதியாக ஒருவரை அனுப்பி குறிப்பிட்ட போராளி, போராளிதானா..? என்பதை அந்தவீட்டிலிருந்த ஒருவரை பாதுகாப்பாக அழைத்து வந்து உறுதிப்படுத்திய போதுதான் அந்தப் போராளிக்கு விடுதலை கிடைத்தது.


விடுதலை கிடைத்த போராளி சிரித்தபடி என்ன இப்படி செய்திட்டியல் என்ற போது அங்கிருந்த ஒரு முதியவர்.

நல்லா.... இருக்கு... எங்கட ஊருக்கு நம்பி வந்திருக்கிற அந்தகுடும்பத்தையும்... அங்கு வந்து போகும் போராளிகளையும் நாங்கள் காப்பாற்றவேண்டாமா என்றார்..

வியந்துபோன போராளி இது உங்கட... என்று இழுத்தபோது அந்த முதியவரே முடித்தார் இது எங்கட முற்றுகை என்று.



## பிடிக்காது



**தந்தை:**
உனக்கு பிடித்தது என்ன பிடிக்காதது என்ன?

**மகன்:**
எனக்கு பிடித்தது என் மாமாவின் மகள், எனக்குப் பிடிக்காதது அவர் வளவிலிருக்கும் அகற்றப்படாத மிதி வெடிகளும் பொறிவெடிகளும்.



இந்த மாதம் முழுவதும் சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை தழிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதி மேற்கொண்டு வருவது அறிந்ததே.

சூழல் தொடர்பான அக்கறை எங்களுக்கு இருக்க வேண்டியது அவசியமே. சூழல் தொடர்பான கரிசனை இல்லாவிடின் அதன் விளைவுகளை நாமேஅனுபவிக்க வேண்டியவர்களாக மாறிவிடுவோம்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

**சிதம்பரதிரு**

சூழல் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்டங்களில் பல்வேறு இடங்களிலும் பல்வேறுவகையான சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

மர நடுகை, சிரமதானம், மூலம் துப்பரவுப் பணிகள் செய்தல், சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மேற் கொள்ளல், என்பன முக்கியமானவை.

இவற்றுள் முக்கியமான ஒரு செயற்பாடகப் பார்க்க வேண்டியது "பார்த்தீனியம்" செடிகளை அழித்தல் ஆகும். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எம் மண்ணை ஆக்கிரமித்த போது அவர்களின் ஆடுகள் மூலம் இங்கு பரப்பப்பட்ட "பார்த்தீனியம்" என்ற கொடிய நச்சுச் செடியின் பாதிப்புக்கள் மிகப் பாரதூரமானவை என்பது நாங்கள் எல்லோரும் அறிந்ததே.

"பார்த்தீனியம்" செடிகளை அழித்தல் என்பது ஒரு தேசிய செயற்பாடாகவே மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

எனினும் கிளிநொச்சியில் பல பகுதிகளிலும் இக்களை திடீரென பரவத் தொடங்கியிருப்பதாக எச்சரிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் கரைச்சி பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் உள்ள காணிகளிலும் வீதி அபிவிருத்திச் சவை பொறியியலாளர் அலுவலகத்தை சூழவுள்ள வெற்றுக் காணிகளிலும், திருநகர் வீதியில் இரு புறமும் இச் செடி காணப்படுகின்றது.

இச் செடிகளை அழிக்குமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்டவர்களை அறிவுறுத்தி உள்ளார்.

எனினும் சம்பந்தப்பட்டவர்கள் இச் செடி அழிப்பில் அதிக் அக்கறை காட்டுவதாக இல்லை என சுட்டிக் காட்டப் படுகிறது.

"பார்த்தீனியம் செடியில்" கொடிய நஞ்சுத்தன்மையை உணர்வது சம்பந்தப்பட்டவர்கள் சூரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடில் கிளிநொச்சி நகரத்தையே "பார்த்தீனியம்" அழித்துவிடும்.

(சி-9609)

# யாழ் குடாநாட்டில் நீர்மண் வளங்களைப் பாதுகாக்க

தற்போதைய இந்த கால கட்டத்திலே யாழ் குடாநாட்டின் நீர் வளம், மண்வளம் பேணிப்பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். யாழ். குடா நாட்டின் நிலத்தடி நீர் உவர் நீராக மாறிவருகிறது.

கடல் நீரேரிகளை அண்டிய விளை நிலங்கள் உவர் நிலங்களாகின்றன. உவர் நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் வேலைகள் நடைபெற்ற போதிலும் இது முற்று முழுதாக நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் சுண்ணாம்புக் கல் பிரதேசமாகவும் சமநிலைப் பிரதேசமாகவும் இருக்கிறது. ஆழ் கிணறுகள் மூலம் தரைக் கீழ் நீரைப் பெறக் கூடியதாக இருக்கிறது. குடா நாட்டினுள் ஊடறுத்த படியே இரண்டு கடல் நீரேரி தெற்கே இரண்டு பெரிய கடல் நீரேரிகளும் காணப்படுகின்றன.

வடக்கே காங்கேசன் துறைக்கும் பருத்தித்துறைக்கும் மத்தியிலிருந்து தென்கிழக்கு நோக்கி வடமராட்சிக் கடல் நீரேரி பரந்திருக்கின்றது. கடலுடன் இணையும் இதன் வடபகுதி தொண்டமனாறு எனப்படுகின்றது. யாழ். நகருக்கு கிழக்கே ஏறத்தாழ நான்கு மைல்களுக்கும் கிழக்கு நோக்கி உப்பாறு எனப்படும் கடலேரி பரந்திருக்கின்றது. ஆனையிறவு பாலத்திற்கு மேற்கே இருப்பது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. ஆனையிறவுப் பாலத்திற்கு கிழக்கே அமைந்திருப்பது ஆனையிறவுக் கடல் நீரேரி.

இந்தக் கடலேரிகளின் உப்பு நீரை நன்னீராக்கி நீர்ப்பாசனத்திற்கு ஏற்றதாகச் செய்வதற்கும் கடலேரிகளை சூழவுள்ள உவர் நிலங்களை விளை நிலங்களாக மாற்றுவதற்கும் யாழ்ப்பாணம் கடல் நீரேரித் திட்டம் உருவாக்கப்பட்டது.

1920 ஆம் ஆண்டுத் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நன்னீராக்கும் திட்டம் பரீட்சார்த்தமாக வடமராட்சிக் கடலேரியில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. மூன்று வருடங்களின் பின் இதன் பயனை ஆராய்ந்த போது கரவெட்டி கிழக்கு துன்னாலை தெற்குப் பகுதிகளில் பல புதிய விளை நிலங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இதனால் நெல் விளைச்சலின் அளவு அப் பகுதியில் அதிகரித்தது. கோடை காலத்தில் ஆடு, மாடுகள் கடல் ஏரி நீரை அருந்தக் கூடியதாக இருந்தது. கடற்கரையோரப் புல் வெளிகள் புல் செழித்து வளரத் தொடங்கியது. அப்பகுதியில் உள்ள கிணறுகள் நன்னீராக மாறிக்காணப்பட்டது.

இத்திட்டத்தினால் பல நன்மைகள் அடைந்ததால் ஏனைய கடலேரிகளையும் இத் திட்டத்தின் மூலம் நன்னீராக்கலாம். இத்திட்டமானது மீண்டும் உயிர் பெறுமே ஆனால் உவர் நிலமாக மாறிய நிலப்பரப்பு விளைநிலமாகவும் கடல் நீரேரிகள் நன்னீராகவும் மாறி விளை நிலத்தைக் கூட்ட வழி வகுக்கும்.

2500 ஏக்கர் நிலப்பரப்பில் உப்பு நீர் பரந்து இருப்பதால் உப்பு எடுப்பதற்கும் குறைந்த தர மீன் உற்பத்தித் தொழிலுக்கும் கடல் நீரேரிகள் இருந்தது.

சுமார் 11 ஆயிரம் ஏக்கர் பிரதேசம் காலத்துக்குக் காலம் உப்பு நீரால் ஆழ்த்தப்பட்டதினால் எவ்வித பயிர்களும் பயிரிட முடியாமல் உவர் நிலமாக மாறியுள்ளது.

வடமராட்சிக் கடலேரியை நன்னீரேரியாக மாற்றுவதற்கு அணைகள் கட்டும் வேலைகள் 1947 ஆம் ஆண்டு ஆரம்பமாகி 1953 இல் முடிவடைந்தன. தொண்டமனாற்றில் கட்டப்பட்டுள்ள 613 அடிநீளமான அணைக் கட்டில் 413 அடி நீளமான பாகத்தில் 18 மதகுக் கதவுகள் பொருத்தப்பட்டன இதனால் 15 ஆயிரம் ஏக்கர் நிலம் விளை நிலமாக்கப்பட்டது.

இத் திட்டம் காலப் போக்கில் நிறைவேற்றப்படாமல் போயிற்று. 1995 ஆம் ஆண்டு முற்பகுதியில் குடா நாட்டின் நீர்வளம் நிலவளம் தொடர்பாக பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பயனுறுதி வாய்ந்த திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் அதனை நடை முறைப்படுத்த முடியாதவாறு இடப் பெயர்வுகளும் இராணுவ நடவடிக்கைகளும் ஏற்பட்டதால் பின்னடைவு ஏற்பட்டது.

உவர் நீரை நன்னீராக மாற்றி உவர் நிலங்களை விளைநிலமாக்கும் அபிவிருத்தி பற்றிய முன்னெடுப்புகளில் இத் திட்டம் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டு குடா நாட்டின் நீர் வளம், நிலவளம் என்பவற்றைப் பாதுகாத்து வளம் நிறைந்த பூமியாக மாற்ற முன்வருவார்களென நம்பப்படுகிறது.

**சிவகமலா**


# உடனடி வேலை வாய்ப்பு

## தமிழீழ தேசியத் துணைப்படை தமிழீழம்

தமிழீழ தேசியத் துணைப்படைக்கு உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் முகமாக தமிழீழப்பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை: 18 தொடக்கம் 25 வரை.
2. உடற்தகைமை: தேக ஆரோக்கியம் நன்றாக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம்: ரூபா 3500/- மாதமொன்றிற்கு.

விண்ணப்பதாரிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல் துறையின் நடுவப்பணியகத்திற்கு எதிர்வரும் 23.06.2004 தொடக்கம் 30.06.2004 வரை சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பொறுப்பாளர்,
ஆளணிப்பிரிவு,
காவல்துறை,
தமிழீழ விடுதலைப்புலிகள்.

குறிப்பு:- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(சி: 9733)




# உதைபந்தாட்டம் குறித்து மனப்பாங்கில் மாற்றம் தேவை

சிறிலங்காவிற்கு உதைபந்தாட்டத்தில் ஒரு சிறப்பான இடம் கிடைக்குமாயிருந்தால் அது வடக்கு கிழக்கில் இருந்து உருவாகும் அணிகளின் மூலமே கிடைக்கும் என தெரிவித்தார். ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் திரு மணிலால் பெர்ணான்டோ வடக்கு கிழக்கிலேயே உதைபந்தாட்டத்தை அதிகம் நேசிக்கும் மக்கள் உள்ளனர். அத்தோடு தமிழ்ப் பத்திரிகைகளே தமது விளையாட்டுப் பத்திகளில் உதைபந்தாட்டத்துக்கு அதிகமுக்கியத்துவத்தைக் கொடுக்கின்றன என கடந்த மாதம் கொழும்பு உதைபந்தாட்ட இல்லத்தில் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் (FIFA) முகாமைத்துவ கருத்தரங்கில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார். அதேபோன்று தமிழீழ விளையாட்டுத் துறையும் உதைபந்தாட்டத்தையே முதன்மையான விளையாட்டாகப் பிரகடனப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் உதைபந்தாட்ட வளர்ச்சிக்கான பணிகளில் ஈடுபட்டுள்ள எமது பிரதேச உதைபந்தாட்ட சங்கங்கள் மற்றும் பாடசாலைகள் செயற்பாடுகள் போதாமல் உள்ளது என்பது கவலையை அளிக்கிறது என்கிறார் உதைபந்தாட்ட பயிற்சியாளர்களின் பயிற்றுநர் திரு. பிரான்சிஸ் சாண்டஸ்.



உதைபந்தாட்ட பயிற்றுநர் பிரான்சிஸ்சான்டஸ்

இலங்கையில் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தால் பட்டயம் வழங்கப்பட்ட மூன்று உதைபந்தாட்ட பயிற்சியாளர்களின் பயிற்றுநர்களில் இவர் ஒருவர் மட்டுமே தமிழர். வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர். மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட்டு அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் மாகாண விளையாட்டுத் துறைத் திணைக்களத்தால் உதைபந்தாட்ட பயிற்றுநராகஇன்னும்கூட நியமிக்கப்படவில்லை. 1992இல் விளையாட்டுத்துறை அதிகாரியாக நியமிக்கப்பட்ட இவர் 1995இல் "விளையாட்டு விஞ்ஞான "டிப்ளோமாவை" பெற்றுக்கொண்டார்.

ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 'சீ'தர உதைபந்தாட்ட பயிற்றுநர் அனுமதிப்பத்திரத்தை 2000இல் பெற்றுக் கொண்ட இவர், 2003இல் 'பீ' தர அனுமதிப் பத்திரத்தையும் 2004இல் பயிற்சியாளர் பயிற்றுநர் (Coaches trainer) அனுமதிப் பத்திரத்தையும் பெற்றுக்கொண்டார். பதினான்கு பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியில் இவரும், சுமித் வல்பொல என்பவரும் மட்டுமே பயிற் சியாளர் பயிற்றுநர் தகைமையைப் பெற்றுக் கொண்டவர்களாவர். மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் உதைபந்தாட்டத்தில் மாகாணமட்ட அணியிலும், கூடைப்பந்தாட்டத்தில் மாவட்ட மட்ட அணியிலும் இடம்பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம்இரண்டு பரீட்சையிலும் சித்தி பெற்றவர் என்பதோடு, தமிழீழ தேசிய விளையாட்டு விழாக்களில் முக்கியத்துவம் பெறும் மத்தியஸ்தர்களில் ஒருவராகவும் இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்க[illegible]

உதைபந்தாட[illegible] சாமானிய மனிதர்களின் (Layman) விளையாட்டு எனவும், கிரிக்கெட் கனவான்களின் (Gentleman) விளையாட்டு எனவும் எமது மக்களிடையே கருத்து நிலவுகிறது. ஆனால் இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இரண்டு ஆட்டங்களுமே மக்களிடம் அதிக செல்வாக்கைச் செலுத்தும் ஆட்டங்களாக விளங்குவதாகக் குறிப்பிட்ட இவர் எமது மனப்பாங்குகளிலும் மாற்றம் ஏற்படவேண்டும் எனக்குறிப்பிடுகிறார்.

உதைபந்தாட்டத்தின் வளர்ச்சி என்பது சிறுவயதிலேயே குறிப்பாக, பதினான்கு வயதுக்குள் அவர்களுக்கு திறன்களில் விருத்தி (Skills devolopment) ஏற்படுத்தப்பட்டால் அவர்கள் 17 அல்லது 18 வயதுகளில் மிகச்சிறந்த ஆட்டக்காரர்களாக மாறிவிடுவர். என்கிறார். இதற்கு பாடசாலை அதிபர்கள், பெற்றோர், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பே மிகவும் அவசியம் என்கிறார். மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் தற்போது காலைவேளைகளில் 12,13,14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான பயிற்சிக்காக முதற்பாடவேளை ஒதுக்கித்தரப்பட்டுள்ளது. அத்தோடு உதைபந்தாட்டக் கழகங்கள் அவர்களின் தேவை களில் குறிப்பாக, சத்துணவு வழங்குவதில் பெரும் ஒத்துழைப்பை நல்குகின்றனர். இவ் வாறான நடவடிக்கைகள் மூலமே உதைபந் தாட்டத்தில் சாதனைக்குரிய மாற்றங்கள் ஏற்படும் என்கிறார்.

இன்று ஆசிய நாடுகளில் யப்பான், தென்கொரியா என்பன பாடசாலைகளில் ஒரு பாடமாக உதைபந்தாட்டத்தை இணைத்து நீண்டகால முயற்சியின்மூலம் பெற்றுக் கொண்ட வளர்ச்சியே அவர்கள் கடந்த உலகக்கிண்ணப் போட்டியில் அரையிறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் தகைமைபெறும் அணிகளாக அவர்களை ஆக்கியது. இம்முறை தென்கொரியாவில் நடைபெறும் இளையோர் ஆசியப் போட்டிகளில் மன்னார் புனித சவேரியார் கல்லூரி அணி கலந்துகொள்கிறது என்பது எதிர்காலம் பற்றிய நம்பிக்கை தரும் ஒரு விடயமாகும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், அணிகள் உதைபந்தாட்டத்தில் அகில இலங்கை மட்டத்தில் பல தடவைகள் தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டவையாகும். ஆனால் கடந்த கால நெருக்கடிகள் இவற்றின் வளர்ச்சியில் நெருக்கடிகளை ஏற்படுத்தியபோதும் இப்போது மீண்டும் உத்வேகம் பெறத்தொங்கிவிட்டன. கடந்த தமிழீழ தேசிய விளையாட்டுப்போட்டிகளில் மத்தியஸ்தம் வகித்த அனுபவத்தைக் கொண்டு பார்க்கின்றபோது, கிளிநொச்சி அம்பாறை, முல்லைத்தீவு, வவுனியா அணிகளும் இப்போது நல்லமுன்னேற்றத்தையே காண்பித்தன. வவுனியா அணி இறுதியாட்டத்தில் கலந்துகொள்ளும்தகைமையைப்பெற்றிருந்தது.

தொடரான பயிற்சியின்மை, கட்டுப்பாடு ஒழுக்கமின்மை என்பன ஆட்டக் காரர்களிடையே காணப்படுவதே எம்முடைய பல வீனத்தின் அடிப்படையாக இன்றும் விளங்குகிறது. உதைபந்தாட்டத்தின் மீதான நேசிப்பும், வெற்றியையும், தோல்வியையும் சமமாக மதிக்கும் பண்பும் எம்மிடையே இன்றுகுறைவாகக் காணப்படுகிறது. கீர்த் திமிகு வெற்றி எவ்வளவு சமூகப்பெறுமதியுடையதோ அவ்வளவுக்கு கௌரவமாக ஆடப்பட்டு கிடைக்கின்ற தோல்வியும் சமூகப்பெறுமதியுடையது. (Glories Victory and defeted with dignity are equal in sportsmanship) இங்கு கௌரவமான ஆட்டத்தில் ஈடுபடுதலே முக்கியமாகிறது.

கிளிநொச்சி பயிற்சி முகாமுக்கு வந்திருந்தபோது மாவட்ட மட்ட உதைபந்தாட்ட வீரர்கள் சிலர் அலட்சியம் மற்றும் அக்கறையீனம் காரணமாக வரவில்லை. வேறு சிலருக்கு தொழில் கொள்வோரின் அனுமதி கிடைக்காததால் வரமுடியவில்லை என மாவட்ட விளையாட்டதிகாரி குறிப்பிட்டிருந்தார். இந்த நிலமைகள் மாற வேண்டும், தொழில்கொள்வோரும், சமூக நிறுவனங்களும், புரவலர்களும், உதைபந்தாட்டத்துக்குரிய ஆதரவை வழங்கும் போது மட்டுமே, எமது உதைபந்தாட்ட அணியும் உலகப் போட்டிகளில் கலந்துகொள்ளும் கனவு மெய்ப்படும் என்றார் திரு. சாண்டஸ்.

அ. அன்ரன் அன்பழகன்

# பந்தால் தலைக்கு ஆபத்தா? தலையால் பந்துக்கு ஆபத்தா?



உலகின் கோடான கோடி மக்கள் விரும்பி ரசிக்கும் போட்டியாக கால்பந்தாட்டம் விளங்குகின்றது. அதிலும் உலகக் கிண்ண கால்பந்து போட்டி என்றால் ரசிகர்களின் மகிழ்விற்கு அளவேயில்லை. இந்த நிலையில் இப் போட்டிக்கு மெருகூட்டி வலுச் சேர்ப்பதில் ஒன்று பந்தை தலையால் முட்டி கடத்துவது. இது இன்று ஆபத்தான ஒன்று என கண்டறியப்பட்டுள்ளது. இவ் அதிர்ச்சித் தகவலையடுத்து பந்தை தலையால் இடிப்பது தடைசெய்யப்படுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

இங்கிலாந்தில் நடை பெற்ற கழகங்களுக்கு இடையிலான போட்டி ஒன்றில் போத்துக்கல் வீரரான 19 வயது கிறிஸ்ரியானோ றொனால்டோ அருமையாகப் பந்தை தலையால் இடித்துக் கோல் போட்டார்.

எதிரணியினர் கிறிஸ்ரியானோ றொனால்டோவை வெகுவாகப் புகழ்ந்தார்கள். பிரேசில் நட்சத்திர வீரரும் ரியல் மெட்ரிட் அணியின் தலைசிறந்த பெறுபேறை உடையவருமான றொனால்டோவின் பெயர் இவருக்கு இருக்கிறதே அதற்கு ஏற்றவகையில் சிறப்பாக ஆடுகிறார் கிறிஸ்ரியானோ றொனால்டோ. கிறிஸ்ரியானோ றொனால்டோ அந்த அருமையான கோலைத் தலையால் போட்டு மூன்று நாட்களில் இப்படிப் பந்தைத் தலையைக் கொண்டு கோலுக்குள் செலுத்திப் பார்ப்பதும் இது போன்ற எதிர் அணியின் முயற்சிகளை ஒரு வீரர் தனது தலையைக் கொண்டு தடுக்கப் பார்ப்பதும் நல்லதல்ல. இது மிகவும் ஆபத்தானது. மூளையைப் பெரிதும் பாதிக்கக் கூடியது என்று செய்தி வெளியானது.

ஒரு முன்னாள் இங்கிலாந்து வீரர் அடிக்கடி பந்தை தலையால் இடித்தார். இதனால் மூளைப் பாதிப்பிற்கு அவர் உள்ளானார்.

ஆனால் தடை ஏதும் இன்றி பந்தைத் தலையால் இடிப்பது நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்துள்ளது. இதைத் தடை செய்தால் இந்த ஆட்டத்தின் கவர்ச்சித் தன்மை இல்லாது போய்- விடும் என்பதால் இதனைத் தடைசெய்யத் தயங்குகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலை மாறவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளார் ராட்மார்க்காம் என்ற அவுஸ்திரேலிய நரம்பியல் நிபுணர். பந்தை தலையால் இடிப்பது மூளையைபாதிக்கக் கூடியது என்பதை அழுத்தமான சாட்சிகளோடு மார்க்காம் உலக கால்பந்தாட்ட சம்மேளனத்திற்கு (பீஃபா) எடுத்துரைத்துள்ளார்.

பந்தைத் தலையால் இடிப்பது தீங்கிழைக்கக் கூடியது என்பது பற்றி உலகில் பலர் ஆராய்ந்து வெளியிட்ட விடயங்களை நெடுநாட்களாக அலசிப்பார்த்து வந்துள்ளவர் மார்க்காம். மேலும் ஆராய்ந்து பார்த்து பந்தை அடிக்கடி தலையால் இடிப்பவர்களின் மூளை, கழுத்துப் பகுதி சிறு அளவிலோ பெருமளவிலோ பாதிக்கப்படுகிறது என்ற முடிவுக்கு வந்துள் ளார் இவர்.

பந்தை ஒருவர் தலையால் அடித்தாலும் கூட நீண்ட காலம் நேரும் சில, பாதிப்புக்கள் ஒன்று திரண்டு வருகிறது போல் இருக்கும் என்றார் அவர்.

இதற்கு அவர் உதாரணமாக 2002 இல் முன்னாள் இங்கிலாந்து வீரர் ஜெப் ஆஸ்ட்லி 59 வயதில் மரணித்தார். இவர் ஏராளமான முறை பந்தைத் தலையால் இடித்ததால் ஏற்பட்ட நரம்புப் பாதிப்பே இவரது மரணத்திற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இன்று கால்பந்தாட்ட உலகை வலம் வரும் பிரபல வீரர்கள் அனைவரும் தலையால் பந்தை செலுத்துவதில் வல்லவர்களாக இருக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்ததே.

கண்ணன்

## எனக்குப் பிடிக்கேல்லை



ஆமி முந்தி இருந்த இடத்துக்குப் போகப்போறன் எண்டதுக்காக கடைசியா பக்கத்திலை நிண்டு ஒப்பாரி வைப்பது எனக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்கேல்லை.

# வீடு

திருமணத்தால் பெண்களின் திறமை மழுங்கடிக்கப் படுவதாக பெண்கள் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறான விடயமாகும். சில பெண்களை எடுத்துக் கொண்டால் எந்நேரமும் தமக்கு வேலை ஓய்வு கிடைப்பதே இல்லை என்று புலம்பிய வண்ணமே இருப்பார்கள். ஒரு பெண் திருமணமாக முன் இருந்த முயற்சியை திருமணமானதும் விட்டுவிடுகின்றாள். இதனால் தான் தன்னிடம் உள்ள திறமைகளை வெளிக்காட்ட முடியாமல் சில பெண்கள் அடுக்களையோடு தன் வேலை சரி என்று அலுத்துக் கொள்கின்றனர். குறிப்பாக ஒருதாயாக இருப்பவள் பிள்ளைகளுக்கு உதாரணமாக தன் திறமைகளை வெளிக்காட்ட வேண்டும். எத்தனையோ வீடுகளில் பெண்கள் பத்திரிகை வாசித்தலோ வானொலிப்பெட்டி கேட்டலோ கிடையாது. ஊரில் என்ன நடக்கின்றது என்பதே தெரியாமல் வீடு என்ற குறுகிய வட்டத்துக்குள் வாழ்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும் திறமைக்கு எம் வயதோ திருமணமோ தடையல்ல.

நேரம் என்பது எம் வேலைகளைப் பொறுத்து மிச்சப்படுத்தலாம். எமக்கு 5 நிமிடம் ஓய்வு இருந்தாலும் அந்த நேரத்தையும் பயனுள்ள முறையில் கழிக்க வேண்டும். பெண்கள் தம்மிடம் இருக்கும் திறமைகளைச் செய்து தானும் பயன் பெற்று மற்றவரையும் பயனடையச்செய்யலாம்



## திருமணம் முயற்சிக்குத் தடையா?

எம்மிடம் ஒரு திறமையும் இல்லை என்று நினைப்பது தவறு. எல்லோரிடமும் திறமை இருக்கிறது பெண்கள் தம்மைத் தாமே ஏமாற்றி வாழ்கின்றனர். தெரியாத ஒன்று எம் வாழ்வில் இருக்கவே கூடாது என்ற சிந்தனை மனதில் எழவேண்டும். எந்தப் பெண்ணின் திறமையும் அவளது படிப்பில் மட்டும் தங்கவில்லை. என்னால் முடியும் என்ற உயர் எண்ணத்தில் தான் பெண்ணின் திறமை வெளிக் கொணரப்படுகின்றது. பொதுவாகச் சொன்னால் அலுப்பே பெண்களின் முதல் எதிரி ஆடத்தெரியாததால் மேடை சரியில்லை என்ற கதைபோல எம்திறமைகளைச் செய்ய நேரமில்லை என்று தள்ளிப் போடுவது மிகவும் பிழையான விடயம். இன்றைய காலகட்டத்தில் கணவர்மாரை பல பெண்கள் குற்றம் சாட்டுகின்றனர். தன் மனைவி திறமையானவளாக வர எந்த ஆணும் விரும்பாமல் இல்லை. ஒரு சிலர் அப்படி இருக்கலாம் அதற்கு ஒட்டு மெத்தமாக கணவன்மார் விடமாட்டார்கள் என்பது பிழை. எந்தச் செயலிலும் மனம் வைக்க வேண்டும். மனமிருந்தால் இடமுண்டு. உதாரணமாக நாம் கவிதை எழுதும் போது வீட்டில் உள்ள ஒருவர் உவாவுக்கு உது தேவையோ என்று சொல்லலாம் அக்கருத்தை கேட்டு நாம் கவிதை எழுதுவதை விடக்கூடாது. அத்துறையில் நாம் திறமை படைத்துக் காட்டவேண்டும். சொன்னவர் வாய் வாழ்த்த வேண்டும் அது பெண்களாகிய நம் கையில் தான் இருக்கின்றது. பலபேர் எம்மைப் பார்த்து தம் வாழ்க்கையை மாற்றுமளவிற்கு உதாரணப் பெண் மணிகளாய் வாழவேண்டும். வீட்டில் இருந்தாலும் நாம் நம் திறமை களை வெளிக் காட்ட முடியும் திறமைகளை வாழ்வில் வெளிப்படுத்தலாம் என்பது எதுவென்று இல்லை.



நடைபெறும் நிகழ்வுகளை நாம் பேனாவால் எழுதினால் கவிதையாகிவிடும் அடுத்தவரிடம் சொன்னால் பரிதாபமாகிவிடும். ஆகவே பெண்கள் சொல்லத் தேவையில்லை செய்தால் போதும்.

சு.சிவாஜினி

---

## முட்டை கட்லெட்




தேவையான பொருட்கள்:

முட்டை - வேகவைத்தவை இரண்டு
பச்சை முட்டை - இரண்டு
மசாலாத் தூள் - ஒரு கரண்டி
மைதா மா - ஒரு கரண்டி
வெண்ணெய் - சிறிதளவு
பால் - ஒரு கப்
எலுமிச்சம் பழச்சாறு - சிறிதளவு
ரஸ்க் தூள் - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு

செய்முறை

தாச்சியில் வெண்ணெய்விட்டு, சூடானதும் மைதாமாவையும் மசாலாத் தூளையும் உப்புச்சேர்த்து நன்கு வதக்க வேண்டும். பின்னர் முட்டைகளைச் சிறு துண்டுகளாக்கி தாச்சியில் உள்ள கலவையுடன் சேர்க்கவும். இப்போது எலுமிச்சம்பழச் சாற்றையும் சேர்க்கலாம். எல்லாவற்றையும் நன்கு கலக்க வேண்டும். நமக்குத் தேவையான அளவில் இக்கலவையைச் சதுரங்களாக்கிக் (அல்லது விரும்பும் வடிவத்தில்) கொள்ள வேண்டும்.

முட்டையை உடைத்து முட்டைஅடிக்கும் இயந்திரத்தின் உதவியுடன் நன்கு கலக்கிக் கொள்ளவும். சதுரங்களாக்கி வைத்துள்ள கலவையை முதலில் முட்டைக்கலவையில் தோய்த்து எடுத்துப் பின்னர் ரஸ்க் தூளில் புரட்டி தாச்சியில் வைத்துள்ள கொதிக்கும் நெய் அல்லது எண்ணெயில் பொன்னிறமாக வறுத்து எடுத்து விடுங்கள். இதுதான் சுவையான முட்டைக் கட்லெட்.

---

## உணவு உண்ணும் அறை

வீட்டில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல். விருந்தினர்களும் மகிழ்ச்சியுடன் உணவு உண்ணும் அறை இது. இது ஒரு மனோகரமான அறையாகவும் இருக்க வேண்டும் இதற்கென்றும் சில தனி உபகரணங்கள் உள்ளன.

இந்த அறை சமையலறையை ஒட்டி இருக்கட்டும்: உணவுப் பொருட்களைக்கொண்டு வரவும் கொண்டுபோகவும் சௌகரியமாக இருக்கும். கம்பிவலையுடன் கூடிய சன்னல்கதவுகள் ஈ.எறும்பு.கொசுக்களை உள்ளே வராமல் தடைசெய்யும்: மற்றப் பூச்சிகளும் வரமாட்டா.



மேசை - நாற்காலிகள் குடும்ப அங்கத்தினருக்கும் மேலாக இன்னும் இரண்டொருவர் உட்கார்ந்து சாப்பிட வசதியாக இருக்க வேண்டும்! நாற்காலிகளுக்குக் 'கைகள்' அவசியமில்லை: பின்புறச் சாய்வு உயரமாக இருக்க வேண்டும். மேசை விரிப்புகள் அவசியமில்லாத 'பார்கோ' மேற்பரப்பு அழகாக இருக்கும்: அத்துடன் சிந்தும் பொருட்களைத் துடைக்கவும் வசதி தரும்: கறைகளும் படியாது. வசதி இருந்தால் மேசை அளவான கண்ணாடியை அமைத்து. அதன் கீழே அழகான பூவேலைகளுள்ள விரிப்புகளையும் அமைத்தால், பார்வையைப் பற்றி இழுக்கும்! உங்களுடைய கலைச் சுவையையும் பிரகடனம் செய்யும்!

கைகழுவும் 'பேசின்' அறையின் மூலையில் தான் இருக்க வேண்டும்: கண்ணாடி மேலே - சோப்பும் துண்டும் அருகே சோப்புத் தண்ணீர்க்குமிழ் சௌகரியமானது: சாய்த்துத் தேவையான சோப்புத் தண்ணீரைக் கையில் எடுத்ததும். இது தானாக நிமிர்ந்து கொள்ளும்!

தட்டுக்கள். தம்ளர்கள் - எவர் சில்வர். பீங்கான். சீனாக் களிமண். கண்ணாடி என்று எது விருப்பமோ அதை வாங்கிக் கொள்ளுங்கள். உடையாதவைகளே உத்தமமானவை. கழுவுவதற்கும் கையாளுவதற்கும் எளிமையானவையாக இருக்கட்டும். அதிகமான பள்ளங்கள். வளைவுகள் வேலைப்பாடுகள் வேண்டாம். அவற்றில் அழுக்குகள் அடையும். அழகைவிடச் சுத்தம் உத்தமம் அதோடு வண்ணமில்லாதவைகளாக வாங்கினால். எல்லா வண்ணங்களோடும் பொருந்தும்!

உணவு உண்ணும் மேசை பெரியதானால். நடுவில் அன்று மலர்ந்த பூக்கள் வைத்தால். அறைக்கு அமைதியான மெல்லிய மலர் மணமும் அன்றாடம் கிடைக்கும் சுவரில் உணவு சம்பந்தப்பட்ட படங்களை. அழகானவைகளாகத் தேர்வு செய்து. தொங்க விடலாம். அதிகம் வேண்டாம். எதுவும் அளவுக்கு மிஞ்சவும் வேண்டாம். அசிங்கமாகிவிடும்.

நாற்காலிகளுக்கு இடையில் போதுமான இடைவெளி இருக்கட்டும்: ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேசுவதற்கு வசதியாக எதிரெதிரேயும் இருக்கட்டும். வீட்டுத் தலைவர் நடுநாயகமாக உட்கார்ந்து உண்பது அனைவரையும் கவனிக்கவும் உபசரிக்கவும் வசதியாக இருக்கும் உணவு பரிமாறுகிறவர்களுக்கும் போதுமான இடைவெளி வேண்டும்.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து உண்பதானால். யாரும் அடிக்கடி எழுந்து உள்ளே போகாமல் போதுமான அளவு அல்லது சமைத்தவைகள் எல்லாவற்றையும் வேறு பாத்திரங்களில் மேசை நடுவில் கொண்டு வந்து வைத்துக்கொண்டு உட்காருங்கள். இவை எல்லாம் எல்லோரும் எடுக்கவும் வைக்கவும் வசதியாக மேடையின் மையத்தில் இருக்கவேண்டும்.

கத்தி - முள் கரண்டி முதலியன சாப்பிடுகிறவரின் இடது புறமும். மேசைக்கரண்டி வலது புறமும் இருக்க வேண்டும்: குடிதண்ணீர் தம்ளரின் இருப்பிடமும் வலது புறம்தான்.

குடும்பத்தினரும். விருந்தினரும். சிறுவர்களும். பெரியவர்களும் உட்பட.அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுவது குடும்பத்தினரின் அன்பையும் அரவணைப்பையும் அந்நியோனியத்தையும் காட்டும். அவரவர்களே பரிமாறியும் கொள்ளலாம்.

எந்தக் குடும்பப் பிரச்சினையையும் உண்ணும்போது பேசாதீர்கள்: குடும்பத் தலைவரும் தலைவியும். உணவுண்ட பின் அமைதியாகப் பேசி முடிவெடுப்பதே சரியான முறை ஆகும்!

---

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு இப்பகுதிக்கு நீங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம்.

அனுப்பவேண்டிய முகவரி:

**வீடு,**
**வெள்ளிநாதம்,**
**ஈழநாதம்,**
**யாழ்சாலை,**
**கிளிநொச்சி.**

---




## குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனில் 10ஐ எமக்கு நிரப்பி அனுப்ப வேண்டும். அனுப்பி வைக்கப்படும் கூப்பன்களில் குலுக்கள் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது. உங்கள் கூப்பன்களை வெள்ளிநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

**குமரகுரு பரிசுத்திட்டம்-01**

பெயர்:.............................................

முகவரி:.............................................

.............................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.


---

## பாராட்டு விழா



ஒருவர்:-
என்ன அவர் படபட வென வெடிக்கிறார்.

மற்றவர்:-
மிதிவெடியை நினைச்சுக்கொண்டு பேசுறார்போல



# ஊவியல் நவீனம்...

## அத்தியயம்- 01

### பகுதி -02

பாடசாலைக்கு வரும்போது அழமாட்டான். கத்தவும் மாட்டான். கதவினருகில் விட்ட பின் யாராவது வந்து தன்னை வகுப்பறைக்குள் அழைத்துச் செல்லும்வரை தேம்பியபடியே அங்கேயே நின்று கொண்டிருப்பான். கோட்டை அணிந்து வரும் நாட்களில் அதைக் கழற்ற எந்த முயற்சியும் செய்ய மாட்டான். ஆசிரியைகளில் யாராவது ஒருவர் அவனை வரவேற்று கோட்டைக் கழற்றி விட்டால் அவன் தன்பாட்டில் இருப்பான். ஏனைய பிள்ளைகள் ஏதாவது தனிச் செயற்பாட்டிலோ அல்லது குழுச்செயற்பாட்டிலோ உற்சாகத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். டிப்ஸோ அறையின் விளிம்புகள் நெடுக ஊர்ந்து கொண்டிருப்பான். அல்லது மேசைகளுக்கு கீழே, அல்லது பியாணோவுக்குப் பின்னால் ஒளித்து கொண்டிருப்பான். அல்லது ஒரே புத்தகத்தை மணித்தியாலக் கணக்கில் பார்த்துக் கொண்டிருப்பான்.

வழமையாகச் செய்வது போல் அவனை வகைப்படுத்தி வழி நடத்த முடியாமல் ஆசிரியைகளை தடுக்கின்ற ஏதோவொன்று அவனது நடத்தையில் இருந்தது. அவனுடைய நடத்தை ஒரே சீரானதாக இருக்கவில்லை சில சமயங்களிலே மனவளர்ச்சி மிகக் குன்றியவன் போல் நடந்து கொள்வான். சில சமயங்களிலே விரைவாகவும் அமைதியாகவும் அவன் செய்யும் வேலைகள் அளவுக்கு மீறிய புத்தி சாலித்தனத்தை அவன் கொண்டிருக்கிறானோ என்று எண்ணவைக்கும். யாராவது தன்னை அவதானிக்கிறார்கள் என்று எண்ணினால் நத்தை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்வதைப் போல் தனக்குள்ளேயே சுருண்டு போவான். அநேகமான நேரங்களிலே அறையின் கரையோரம் நெடுக ஊர்ந்து கொண்டே சுற்றி




சுற்றி வந்து கொண்டோ, மேசைகளின் கீழ்ப் புகுந்து இருந்துகொண்டு முன்னும் பின்னுமாக சாய்ந்தாடிக்கொண்டோ, கையின் பக்கவாட்டைச் சப்பிக் கொண்டோ, அல்லது பெருவிரலைச் சூப்பிக் கொண்டோ இருப்பான். யாராவது ஆசிரியைகள் அல்லது பிள்ளைகள் அவனை ஏதாவது செயற்பாட்டில் பங்கு கொள்ள வைக்க முயன்றால், உடம்பை இறுக்கிக் கொண்டு நிலத்தில் குப்புறப் படுத்து விடுவான்.அவனது பார்வையில் பாசங்கள் நட்புறவுகள் இல்லாதது போல் தோன்றிய ஒரு உலகத்திலே தனித்துப் போய்விட்ட பிள்ளையைப் போல் அவனிருந்தான்.

வீட்டுக்குப் போகும் நேரம். வந்து விட்டால் அல்லது அவனுக்கு விருப்பமில்லாத ஒன்றைச் செய்யும்படி யாராவது கட்டாயப்படுத்தினால் சன்னதமாடத் தொடங்கி விடுவான். குழுவாக பிள்ளைகள் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் பங்கு கொள்ளும்படி அழைப்பதென்றும் மிக அவசியமானால் ஒழிய அவனை எதற்கும் கட்டுப்படுத்துவதில்லை என்றும் ஆசிரியைகள் எப்போதோ தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள்.அவனுக்கு பொத்தகங்கள், விளையாட்டுப் பொருட்கள், புதிர்கள் அல்லது அவனுக்கு ஆர்வமூட்டக் கூடிய பொருட்கள் என்று ஏதாவதொன்றை தர முயற்சிசெய்வார்கள். அவனோ யாரிடமிருந்தும் எதையும் நேரடியாக வாங்க மாட்டான். இப்படி ஏதாவது ஒன்று அவனுக்கு அருகில் உள்ள மேசையில் அல்லது தரையில் வைக்கப்பட்டால் கொஞ்சநேரம் கழித்து அதை எடுத்து கவனமாக ஆராய்வான். பொத்தகங்களை எடுத்துப் பார்க்க அவன் தவறுவதில்லை. அடிக்கடி ஹெடா சொல்வது போல் "ஏதோ தன்னால் வாசிக்க முடியும் என்கிறமாதிரி" பொத்தகங்களின் பக்கங்களைப் பார்த்துக் கொண்டிருப்பான்.

சில சமயங்களிலே டிப்ஸ் குப்புறப் படுத்துக்ககொண்டிருக்கும் போதுயாராவது ஒரு ஆசிரியை அவனுக்கு அருகில் அமர்ந்து கதைப் பொத்தகங்களை வாசித்துக் காட்டுவார்கள் அல்லது எதைப் பற்றியாவது கதைப்பார்கள். அந்தச் சமயங்களில் அவன் எழுந்து ஓடமாட்டான். ஆனால் நிமிர்ந்து பார்க்க மாட்டான். வெளிப்படையான ஆர்வத்தையும் காட்ட மாட்டான்.


ஜேன் மிஸ் அடிக்கடி இந்த விதமாக டிப்ஸோடு நேரத்தைச் செலவிடுவார். பலவிடயங்களைப் பற்றி அவர் கதைப்பார். இந்த வேளைகளில் அது தொடர்பான பொருட்களை கையில் வைத்துக்கொண்டு தான் என்ன கூறுகிறார் என்பதை செய்து காட்டுவார். ஒருமுறை அவர் காந்தங்கள், அவற்றினுடைய கவர்ச்சிகள் பற்றி



விளக்கினார். வேறு ஒரு சமயத்தில் ஆர்வமூட்டக் கூடிய கல்லொன்றைக் கையில் வைத்துக் கொண்டு அது பற்றிக் கூறுவார். அவனில் ஏதாவது ஆர்வத்தைத் தூண்டி விடக்கூடியது என்று தான் நினைக்கும் பொருட்களைப் பற்றிக் கதைப்பார். ஏதோ, அங்கே அமர்ந்து கொண்டு, தனக்குத் தானே பேசிக் கொண்டிருக்கும் முட்டாளைப் போன்ற உணர்வு தனக்கு ஏற்பட்டதாக ஜேன் அடிக்கடி சொல்வாள். ஆனால் அவன் குப்புறப்படுத்துக் கிடக்கும் விதத்தில் தெரிந்த ஏதோ ஒன்று, சொல் வதை எல்லாம் அவன் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்ற உணர்வை அவளுக்குத் தந்து கொண்டிருந்தது.அப்படிக் கேட்கா விட்டாலும் தனக்கு நட்டமொன்றுமில்லை என அவள் கூறிக்கொள்வாள்.

(தொடரும்....)

## எச்சரிக்கையாக இருப்போம்



வெடிக்கும் எண்டு தெரிந்தும் கைவைப்பிள், கண்ணுமில்லை, கையுமில்லை - காண்.

## தொடர் - 24

உருவாக வழிசமைத்தன. கணப்பில், சடசடவென்ற ஒலியுடன் விறகு எரிந்து கொண்டிருந்தது. மெல்லத் துடிக்கும் சுவாலைகள்....

இருந்தாற்போல, வெளிக்கதவுக்கு அப்பாலிருந்து கேட்ட ஒரு குரல் திடுக்கிட்டுப் பயச்சிலிர்ப்புக் கொள்ள வைத்தது! மனிதக் குரல்தான். ஆளை ஆள் பார்ப்பதற்குள் அது மீண்டும் எதிரொலித்தது. "கூஆ!" - என்று கூக்காட்டுவது போல - எழுத முடியா -




ஒரு சத்தம்! அந்தக் குரல் பலவாகி ஒலித்து, என்னவென்றில்லாத ஒரு உணர்வை மனதில் நிறைத்தது.

"நடனம்! நடனந்தொடங்கப் போகிறது!" என்றார்கள் யாரோ. கூட்டத்தின் கோடிக்கதவு திறந்தது. "ம்ஹறா!ம்ஹறா"- என்ற அடித் தொண்டைக் குரல்கள் ஒலிக்க சிவந்த ஆடை அணிந்த நடனக்காரர்கள் வரிசையாக, சீரான லயத்தில் துள்ளித் துள்ளி உள்ளே வந்தார்கள். எல்லோருமே ஆண்கள் கைகளில் ஈட்டி. என்னவோ செய்தது...

பதினைந்து நிமிஷம் நடந்தது நடனம். ஆட்டக்காரர்கள் விருந்தினர் நடுவிலும் புகுந்து வந்தார்கள். உயரத் துள்ளிக் குதிப்பதில் போட்டி போட்டார்கள். ஆறே காலடி இருக்கிற அந்த மெல்லிய மனிதர்கள், தம் நெடுத்த கால்களில் 'ஸ்பிறிங்' போலத் துள்ளிப் போட்டியிட்டார்கள். அந்த "ம்ஹறா! ம்ஹறா!"வுக்குப் பதில் இப்போது எல்லோருக்குமாய் சேர்ந்து பாட்டுமாதிரிப் பாடினார்கள்.... மகாராஷ்ட் ராக்காரரின் பிள்ளைகளிருவரும் பயந்து போய்ப் பெற்றோரைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஆனால், பிறகு, ஓநாய்களைப் பார்த்ததில் பையன்களின் பயம் பறந்து, உற்சாகம் மீண்டிருந்தது. வேலியோரத்தோடு உயரமாய் - பல்கனி போலிருந்த ஒரு இடத்தில் நின்று விடுதி ஊழியர்கள் வீசியதைக் கூட்டமாய்க் கீழே நின்று சாப்பிட்டன ஓநாய்கள். பாய்ச்சப்பட்ட வெளிச்சத்தில் கண்களெல்லாம் மின்மினியாய் மினுங்கின. இங்கே 'ஓநாய்' என்பது இதற்கு முதல் சொன்னதும் 'ஹயென்னா' என்கிற விலங்கு தமிழில் வேறு சொல் இல்லை. அல்சேஷன் நாயிலும் பெரிது, கொஞ்சம் பருமன் மஞ்சளும் பழுப்பும் புள்ளிகளாய்க் கலந்த நிறம். லேசான சப்பை முகம். எலும்புகளைக் கடித்து உடைத்த சத்தம் வடிவாகக் கேட்டது. என்றாலும் மனிதர்கள் மேலிருந்த சந்தேகமும், எச்சரிக்கை உணர்வும் அவற்றோடு கூடவே தெரிந்தன. எந்தச் சிறிய 'அசுமாத்த்'த்திற்கும் புதர்கள் மறைவில் ஓடி ஒளிந்தன - இதெல்லாம் பையன்களை உற்சாகப்படுத்தியிருக்கவேண்டும்.

நானும் செல்வாவும் நடுக்கூடத்தில் மீண்டும் போய் உட்கார்ந்தபோது, பையன்களும் பெற்றோரும் அங்கே வந்தார்கள்.

"ஹலோ!...", அந்த மனிதர்கள் கையை நீட்டினார். ஐம் ஜெயகர், ஷிவ் குமார் ஜெயகர்" ஜெயகர் ஒரு விளம்பர நிறுவன அதிபர். அறிமுகங்கள் முடிந்து அருகில் அமர்ந்ததும்,

"இவர் முரளியின் மாமன்", குறும்புச்சிரிப்புடன் மூத்தவனிடம் கூறினார், என்னைக் காட்டி எனக்குப்புரிய சில விநாடிகளாயின நிகிலேஷிக்குப் பத்து வயது. புத்திசாலி. நம்பமறுத்தான்.

"நீயே கேட்டுப்பார்?" தலையை ஆட்டினான்.

"கிரிக்கெட் என்றால் ஒரே பைத்தியம், முரளியின் விசிறி", என்றார் தாய், மகனின் முதுகை வருடிக் கொண்டே சின்னவன் ஒரு சொக்ளற்றோடு பிஸியாக இருந்தான்.

"உன்னுடைய கிளாஸ்மேற் யார் சொல்லு?" என்றார் ஜெயகர் மீண்டும்




மூத்தவனைப்பார்த்து. பிறகு அவன் பதிலைப் பாராமலே சொன்னார்:

"எங்கள் மாநில முதலமைச்சரின் பேரன் இவனோடு படிக்கிறான் இருந்தாற் போல அந்தப்பையன் ஒருநாள் தனது தாத்தா சி.எம். ஆகப்போகிறார் என்று சொன்னதாக இவன் சொன்னான், நாங்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால் அடுத்தநாள் பேப்பரில் செய்தி வந்த போது சரியென்று தெரிந்தது..."

சுஷில்குமார் ஷிண்டே, இதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முதல்தான் எதிர்பாராத விதமாக முதலமைச்சர் ஆகியிருந்தார்.


"நீங்கள் போய் பாருங்கள், நான் இவர்களுடன் பேசிவிட்டு வருகின்றேன்", ஜெயகர் மனைவி-மகன்களை அறைக்கு அனுப்பிவிட்டு எங்கள் பக்கம் திரும்பினார்.

"இப்போது இலங்கை கொஞ்சம் அமைதியாக இருக்கிறதுஇல்லையா?" என்றவர், "... நீங்கள் வடக்கிலிருந்துதானே?" -நிச்சயப்படுத்திக் கொள்பவர் போலக் கேட்டார்.

(தொடரும்...)

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




☐ **இலங்கையில் நடப்பது சனநாயக ஆட்சியா, சர்வாதிகார ஆட்சியா?**

சனநாயக சோசலிச சர்வாதிகார ஆட்சி தம்பி இது....

சுப்பிரமணியம்,
மணியந்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

☐ **தேர்தலுக்குப் பிறகு சங்கரியாரின் தலைக்கறுப்பையே காணேல்லை..நீர் ஏதாவது கண்டீரா?**

ஏன் தேர்தல் கூறவா

கா.கனகராசா,
கட்சன் றோட்,
வட்டக்கச்சி.

☐ **கைவிலங்கிற்கும் காட்டு விலங்கிற்கும் உள்ள வித்தியாசம்....?**

கைவிலங்கு அடிமைக்குரியது.... காட்டு விலங்கு சுதந்திரமானது.

ராஜன்,
பாரதிபுரம்,
கிளிநொச்சி.

☐ **அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்றாரே ஒளவையார் அது சரியா...?**

தவறு அரிது அரிது மானிடராய் வாழ்தல் அரிது.

ஒளவையார் இன்றிருந்தால் இப்படித்தான் பாடியிருப்பார்.

ம.கனேந்திரன்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

☐ **பாவலரே! ஐயா ரட்னசிறி விக்கிரம நாயக்கவின் கரங்கள் பட்டவுடனே வெண்புறாவின் உயிர் பிரிந்து விட்டதேன்?**

வெண்புறவைப் பொறுத்த வரையில் அவை கரங்களல்ல கழுகின் கால்கள் அவ்வளவுதான்.

கோவலன்,
கணேசபுரம்.

☐ **உண்மையாக சமாதானத்திற்கு உழைப்பதாக இருந்தால் விமானப்படைக்கு புதிய விமானங்கள் எதற்கு?**

சமாதானத்தை விண்ணுக்கு அனுப்புவதற்கு.

க.ரஜித்தா,
திருவையாறு.

☐ **கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு எந்த ஆபத்தும் இல்லையென்று பொலிஸ்மா அதிபர் இந்திரடி சில்வா தெரிவித்துள்ளார் கவனித்தீரா?**

பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்துவதை நீர் கவனித்தீரா...? மடியில் கனமிருந்தால் தான் வழியில் பயம் ஏற்படும்.. புரிந்து கொண்டால் சரி.

விக்கி,
1ம்வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

☐ **திருமலையில் புலிக்கொடி ஏற்றியதிற்கு படைத்தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தனராம் இது பற்றி நீர் என்ன கூறவிரும்புகிறீர்.**

ஏற்றுவது எங்களின் பணி.... எதிர்ப்பது அவர்களின் பணி... ஏற்றியதை இறக்கமுற்பட்டால்தான் பிரச்சினையே....!

ச.மாலினி,
கல்வயல்,
சாவகச்சேரி.

☐ **பாவலரே இன்றைய உலக ஒழுங்கு எப்படியிருக்கிறது?**

யார் சொன்னது உலகம் ஒழுங்கா இருக்கென்று? உலகமயமாவதால் உலகம் கலகமயமாகிக் கொண்டு வருவது சாமி...!

மீனலோசினி,
கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

☐ **அரபு தேசத்தில் இன்னலுறும் இலங்கைப் பெண்கள் தொடர்பாகவும் அரசின் அசமந்தப் போக்குத் தொடர்பாகவும் உமது கருத்து?**

அந்நிய நாட்டில் இன்னலுற்றாலும் அந்நியச் செலாவணி கிடைத்தால் போதும் என்று அரசு நினைக்கிறது போலும்.

செ.தம்பிராசா,
குருமன்காடு,
வவுனியா.

☐ **தென்னாபிரிக்க விடுதலையில் தலைவர் நெல்சன் மண்டேலா பற்றி உமது மதிப்பீடு?**

உலக மதிப்பீடே உச்சத்தில் இருக்கும் போது உமது மதிப்பீடு என்ன என கேட்பது ஏன்?

ராஜேஸ்வரி,
உருத்திரபுரம்.

☐ **குழப்படிக்காரக்குழந்தைகளை என்ன செய்யலாம் பாவலரே?**

குறும்புத்தனத்தை ரசிக்காது குழப்படி என்று குழறும் உம்மை என்ன செய்வதாம்.

ரூபவதனா,
ரி.சி.லேன், மானிப்பாய்.

☐ **மதங்கள் எப்படியிருக்க வேண்டும்?**

மதம் 'கள்'ளாக இருக்கக் கூடாது... மதவெறி ஆபத்தானது.

சி.கார்த்திகேசு,
சாவகச்சேரி.

☐ **பொது நலவாதிகளையும் சுயநலவாதிகளையும் பாகுபடுத்தும் பாவலரே?**

பொதுநலம் சுயநலத்தை ஏற்கும். சுயநலம் பொதுநலத்தை நிராகரிக்கும்...... போதுமா?

மலர்,
செல்வபுரம், முல்லைத்தீவு.

●




இது இரண்டு குடும்பஸ்தர்களுக்கிடையிலான பரஸ்பரகருத்துப்பரிமாற்றம்.

●●●

ஒருவர் :- நேற்று மோட்டார் சைக்கிளில் சென்றபோது என் மனைவியின் கண்ணில் ஒரு கல் விழுந்து விட்டது அதை எடுக்க எனக்கு 500/= செலவாயிற்று.

மற்றவர் :- நான் எனது மனைவியை கிளிநொச்சியில் ஏற்றிச் சென்ற போது அவள் கண்ணில் ஒரு சேலை விழுந்துவிட்டது அதை எடுக்க எனக்குச் செலவு 5000 ரூபாய்.

●●●

வைத்தியர்:- நீங்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றீர்கள் உடனே ஆப்ரேஷன் செய்ய வேண்டும்...ம்.. பத்து லட்சம் செலவாகும்.

நோயாளி:- ஓ...என்னிடம் இப்போது அவ்வளவு பணமில்லையே டொக்டர்.

வைத்தியர்:- பரவாயில்லை நீங்கள் முதல் ஒரு லட்சம் கட்டினால் போதும். மீதியை மாதாந்தம் 50 ஆயிரமாக கட்டிமுடிக்கலாம்.

நோயாளர்:- கட்டுக் காசுக்கு கார் வாங்குவது போல?

வைத்தியர்:- ஆம் எனக்கு

ஒருவர்:- அடடா அங்கே பார் புத்தம் புதுப் பாவாடை கீழே கிழிந்து விட்டதே.

பெண்:- இல்லை பெண்களுக்கு எதுவும் இடஞ்சலாக இருக்கக் கூடாது. என்பதற்காக அவர்களே வெட்டிவிட்டது.

●●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -74



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

### படத்திற்கு மெருகூட்டுங்கள் -74

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -73



கா.சுஜோ,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

*விறகு எரியும் பொழுதினில் - தணலாய் எரியும்*
*இவர் வயிறுகள் தணியும் - விடுதலைத் தீ*
*பற்றி விடுதலை வரும் பொழுதினில் - இவர்*
*மனதுகள் இறகு முளைத்துப் பறக்கும்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*இவர்கள் விறகு கட்டல்ல சுமக்கிறார்கள்*
*வேதனைச் சுமைகளைத்தான் சுமக்கிறார்கள்*
*அகதி என்ற போர்வைக்குள்*
*அடங்கிக் கிடந்து வாழ்கிறார்கள்.*

இ.பாலசுப்பிரமணியம்,
மாங்குளம்.

*சமாதானம் வந்து ஈராண்டும் ஆகுது*
*சர்வதேசமும் தடல்புடலாக வந்து போகுது.*
*பேச்சுவார்த்தையை தொடர்வதற்கு காலமும் குறித்தாச்சு*
*இன்னுந்தான் உங்கள் அகதிமுகாம் வாழ்விற்கு முடிவு இல்லையோ.*

க.மதிவதனன்,
மல்லாவி.

*நாட்டையும் வளத்தையும் எரித்தார் வஞ்சகர்*
*உண்டிக் கஞ்சி மண்டி இடோம் - என்றெண்ணி*
*குடும்பமாய் விறகு சுமந்து வறுமைப்பிணி தீர்க்கிறார்கள்*
*நொந்து மனம் வாடும் காலம் விடியும்*

வீ.குகானந்தன்,
துணுக்காய்.

*வறுமை வாட்டியதால்*
*வீட்டில் இருந்தவரெல்லாம் காட்டில்*
*விறகனைத்தும் விற்றுவிட்டால்*
*வயிற்றுப் பசியும் தீர்ந்து விடும்.*

யோ.கவின்சிகா,
நெடுங்கேணி.

*பார்வைக்குச் சமாதானம் - வெறும்*
*வாய்வீச்சளவில் பேச்சுவார்த்தை*
*சொந்த மண்ணில் குந்தியிருந்து கூழ் குடிக்கவழியில்லை*
*தடையாக அங்கே - உயர்வலய பாதுகாப்பு.*

ம.கலைநிலா,
புதுக்குடியிருப்பு.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகயம்** வழங்குகின்றது.

புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.













இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு யூன் மாதம் 25 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.